முகப்பு:

மதுரை மாநகரில் சிறப்புற நிகழ்ந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டினை ஒட்டி, மதுரை வண்டியூர்த் தெப்பக்குளம், ஒளி விளக்குகளால் அழகுபடுத்தப் பெற்றிருந்த அரிய இனிய காட்சி.

# திருக்கோயில்


ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 23 | இரவுத்திரி ஆண்டு-கார்த்திகை, மார்கழி (நவம்பர்–டிசம்பர், 1980) | மணி: 2–3


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்


அமுதத் தமிழ் வளர்ப்போம்!
—மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்

கலைக் கோயில்கள்-பண்பாட்டுக் கருவூலங்கள்
—மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள்

சேக்கிழாரும் சித்தாந்தமும்
—'இராவ்சாகிப்' திரு நல். முருகேசமுதலியார், பி.ஏ.

கஞ்சனூர்-சப்த தலங்கள்
—திரு மு. அருணாசலம்

கச்சியும் கச்சபேசமும்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

"அறந்தரு நாவுக்கரசு"
—திரு க. வெள்ளைவாரணனார்

கோவிந்தனும் கோதையும்
—திரு. நா. வேணுகோபால் நாய்க்கர், பி.ஏ., பி.எல்.

ஓட்டைக் குடம்
—'வாகீச கலாநிதி' திரு. கி. வா. ஜகந்நாதன், எம்.ஏ.

அமுதலிங்கேசுவரர் பெருமை
—கவிஞர் காசி, எம்.ஏ., பி.டி.

பழந்தமிழ் நாட்டுக் கற்கோயில்கள்
—பேராசிரியர் திரு. டாக்டர் மெ. சுந்தரம், எம்.ஏ., எம்.லிட், பி.எச்டி.

"தமிழின் நீர்மை"
-ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

வைகுண்ட ஏகாதசி
—திரு. வி. திருமலை அய்யங்கார்

காஞ்சி காமாட்சியம்மை
—கவிஞர் திரு. மனசை ப. கீரன்

கடவுள் மாமுனிவர்
—திரு. மு. அருணாசலம்

# அமுதத் தமிழ் வளர்ப்போம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு எம் ஜி இராமச்சந்திரன் அவர்கள்

''தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு
நேர்!''

என்று அழகாக எடுத்துச் சொல்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்''

என்று பெருமிதம் பொங்கிட உரைக்கின்றார் மகாகவி பாரதியார்.

உலகத்தின் இருளை அகற்றுவதில் ஒப்பற்று நிற்பன ''மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று, ஏனையது தன்னேர் இலாத தமிழ்'' என்று தண்டியலங்கார மேற்கோள் பாடல் குறிப்பிடுகின்றது.

''இருந்தமிழே உன்னால் இருந்தேன்-இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

என்று 'தமிழ்விடு தூது' கோடிட்டுக் காட்டுகிறது.

''இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்'' என்று பேசுகிறது பிங்கலம். 'தேனுறை தமிழ்' என்று கல்லாடமும், 'தமிழ் தழீஇய சாயல்' என்று சிந்தாமணியும் போற்றுகின்றன.

''பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே இருந்து வையை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்து ஓர்ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்''

என்று வில்லிபாரதப் பாயிரம் வியந்து போற்றுகின்றது.

''தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழி தமிழ்ப் பெருமை யார் அறிவார்?

என்று குமரகுருபரர் குறித்து மகிழ்கின்றார்.

''எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழ் அணங்கே'' என்று மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை பாடுகின்றார்.

இந்த நாட்டவர் மாத்திரமல்ல - தமிழின் அழகிலும் ஆழத்திலும் ஈர்க்கப்பட்டுத் தம்மை இழந்த அயல்நாட்டவர்களும் சூட்டிய புகழாரங்கள் ஆயிரமாகும்.

டாக்டர் கிரௌல் ''தமிழ் மொழியை அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளிக் கலன்'' என்றும், திருக்குறளை அதில் வைக்கப்பட்ட ''தங்க ஆப்பிள்'' என்றும், ''தமிழ் என்னை ஈர்த்தது, குறளோ என்னை இழுத்தது'' என்றும், புகழ்கின்றார்.

டாக்டர் கால்டுவெல் அவர்கள் ''உலகில் மிகச் சிலவான மொழிகளுக்குத்தான் அறிவியல் அடிப்படையிலான இலக்கணம் அமைந்துள்ளது. அவற்றில் தமிழே முன்னிற்கிறது. தொல்காப்பியமும் நன்னூலுமே இதற்கு மாபெரும் சான்றுகள்'' என்று குறிப்பிடுகின்றார்.

அப்படிப்பட்ட அருமைக்கும் பெருமைக்கும் உரிய அன்னைத் தமிழுக்கு விழா நடக்கிறது.

ஆராய்ச்சி அறிஞர்கள் கலந்துகொள்கிற அரங்கம் மாநாட்டின் இதயம் போன்ற இன்றியமையாத பகுதி என்றாலும், அந்த நிகழ்ச்சியைத் திருவிழாவாகப் பெருவிழாவாகக் கொண்டாடுகிற பொறுப்பினைத் தமிழக அரசு உவந்து ஏற்றுள்ளது.

தமிழ்நாட்டிலே மாத்திரமல்ல-தமிழ் பேசுகிற உலகின் எல்லாப் பகுதி மக்களும் எழுச்சியோடு எண்ணிப் பெருமிதம் கொள்கின்ற இனிய நிகழ்ச்சியாக இந்த உலகத் தமிழ் மாநாடு அமைந்துள்ளது.

அறிவுலகப் பேராசான் - நமது ஆருயிர் அண்ணன் பன்னிரு ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பிறகு, பாரிசிலும் யாழ்ப்

பாணத்திலும் மாநாடுகள் நடைபெற்றன. அண்ணன் ஏந்திய ஒளிவிளக்கினைக் காலத்தின் கட்டளையாக அவருக்குப் பிறகு ஏந்துகின்ற பொறுப்பினை ஏற்றுக் கொண்டு, அவரின் அன்புத் தொண்டனான நானும், வரலாற்றில் அழியாத இடம் பெற்றிடப் போகும் இந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டைக் கொண்டாடுவதில்-கோலாகலப் பெருவிழாவாகக் காண்பதில் — மறைந்த தமிழகத்தின் புகழை மீண்டும் நிலைநாட்டிக் காட்டுவதில் - தமிழன் தானும் தாழான்; எவரையும் தாழ்த்தான் என்பதனை அகிலத்திற்கு அறிவிப்பதில்- மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மொழி மற்றவர்களுக்கு வழியாக இருக்கலாம். வாய்க்காலாக இருக்கலாம்; மொழி எண்ணங்களை எடுத்துச் சொல்கிற ஊடகம்தானே என்றும் கூடச் சிலர் பேசலாம். தமிழர்களைப் பொறுத்தவரை தமிழ்மொழி வெறும் வழி மட்டுமல்ல; அதுவே நமக்கு 'விழி'. உணர்ச்சி வயப்பட்டு உற்சாகத்தில் உதிர்க்கின்ற சொற்களில்லை இவை. இரண்டாயிரம் ஆண்டுக் காலத் தமிழகத்தின் எழுச்சி - வீழ்ச்சி - வெளிச்சம் - இருட்டு - மேடு - பள்ளம் இவற்றை உற்றுப்பார்த்தால் - உணர்ந்து நினைத்தால் ஒன்று புலப்படும். தமிழனின், தமிழ்ச் சமுதாயத்தின் வாழ்வும் வளமும் அவனது மொழியோடு இரண்டறக் கலந்து இணைந்து இயைந்து நிற்பதைப் பார்க்கிறோம். மொழி வரலாற்றில் அவனது மொழிக்கு ஊறு நேர்ந்தபோதெல்லாம் அவனது அரசியல், பொருளாதார, பண்பாட்டின் அடித்தளங்கள் அசைந்திடக் காண்கிறோம்.

ஆகவேதான் தமிழன் தன்னுடன்- ஊனில் - உதிரத்தில் - உணர்வில் - ஒடுங்கி ஒன்றிக் கலந்த தன் தாய் மொழியை உயிர் மூச்சாகப் போற்றிடத் தலைப்பட்டான்.

ஆங்கிலம் உலகின் பல பகுதிகளில் பரவியுள்ள மொழி; மறுக்கவில்லை. இருந்தும் அது ஆட்சி செய்வோரின் அருமை மொழியாகி - சென்ற இடங்களில் எல்லாம் வார்த்தைகளை, வழக்குச் சொற்களை அள்ளிச் சேர்த்துக் கொண்டது. ஆங்கில அகராதியில் 'மிளகுத் தண்ணீர்' என்ற சொல்கூட அரங்கேறியிருக்கிறது.

தமிழ்மொழி மாத்திரம் அதற்கு நேர் மாறாகக் கலப்புச் சொற்களைக் களைந்து தனது தனித்தன்மைதனைக் காப்பதிலேயே கருத்தாக இருக்கிறது. இந்திய மொழிகள் சிலவற்றில்தான் இந்த மொழித் தூய்மை இயக்கங்கள் அண்மைக் காலத்திலே தோன்றியிருக்கின்றன.

திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவை, வடமொழிச் சொற்களை விரும்பி ஏற்றுக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். மலையாளச் சொல்லகராதியை உருவாக்கிய சுரானந்த் குஞ்சன்பிள்ளை அவர்களே, இக்கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அருகிலிருக்கிற மற்ற மொழிகள் வடசொற்களை விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கிறபோது, தமிழ்மாத்திரம்வடசொற்களை மாத்திரமல்லாதுபிறமொழிச்சொற்களைக் கூட ஏற்காமலேயே, தனது தனித்தன்மையோடுவிளங்குவதைக்காண்கிறோம். தமிழ் மூத்த முதன்மொழி - மாற்றம் - வளர்ச்சி இவற்றிற்கான கூறுகளைத் தன்னகத்தே இயல்பாகவே கொண்ட தனிமொழி என்பதாலேயே இவ்வாறு முடிந்தது.

உலகத்தின் பெரும் பகுதியில் ஆங்கிலம் வழங்கப்பட்டும், பெரும்பாலும் அதன் பயன் கருதி மாத்திரமே பலரும் அந்நாள் தொட்டு அதனைப் பயின்று வந்தனர். ஆனால் நமது தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் மேற்கு நாட்டு அறிஞர்கள் பலரும் பெரும்பாலும் பயன்பாடு கருதி அல்ல - அதன் அழகிலும் ஆற்றலிலும் மயங்கியே கற்றனர்.

மேற்கு நாட்டவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காகவே தமிழ் கற்றனர் என்றால், திருக்குறளை — திருவாசகத்தை இலத்தீனிலும், ஆங்கிலத்திலும் மற்ற மொழிகளிலும் பெயர்ப்பானேன்? இந்தத் தமிழ் இலக்கியக் களஞ்சியத்திலே தம்மையே இழந்தனர் என்பதுதான் உண்மை.

''சிந்து வெளி நாகரிகம்'' அழிந்துபட்டதற்கான காரணங்களை ஆராய்ந்த அறிஞர்கள் ஒன்றை உறுதியாகக் குறிக்கின்றனர். மாறி வரும் காலத்தோடு மாற இயலாத நாகரிகம் - வெளிநாகரிகத் தாக்குதல்களைத் தாங்க இயலாத நாகரிகம் - ஆகவே அது அழிந்துபட்டது என்பது அவர்கள் கருத்து. இது மொழி வரலாற்றிற்கு முற்றிலும் பொருந்துவதாகும். இலத்தீன், வடமொழி போன்றவை நடைமுறை மொழிகளாக இல்லாது போனதற்கே அடிப்படைக் காரணம், மக்களால் அது பேசப்படவில்லை என்பது மாத்திரமல்ல - மாறி வரும் காலத் தேவைகளுக்கு ஏற்ப அவைகளால் வளைந்து, நெளிந்து புதிய வடிவங்களைப்பெற இயலவில்லை என்பதுமாகும். ஆங்கிலம் இதற்கு ஒரு விதிவிலக்கு. 'கொச்சை மொழி' கூட, இலக்கிய உத்தியாக ஆங்கிலத்தில் இந்த நூற்றாண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கால வெள்ளத்தால் கரைக்க இயலாத தனி மொழியாகத் தமிழ் திகழ்வதற்குக் காரணம் - அது கவிதையாகப் பிறந்து - உரை நடையாகத் தவழ்ந்து - வசன கவிதையாக வளர்ந்துகொண்டிருக்கிறது. களவியலில் காணப்படுகின்ற 'பாண்டியநாடு பன்னீரியாண்டு வற்கடம் செல்ல' என்னும் தமிழும், இன்று கடைக்காரர் பேசுகிற தமிழும் முரண்பட்டவை. இருந்தும் எட்டு நூற்றாண்டுகளில் இத்தனை மாறுதல்

களுக்குத் தன்னை உட்படுத்திக்கொண்ட தமிழ், இன்னமும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் பல மாறுதல்களுக்கு உட்பட்டா லும் அதன் தனித்தன்மை மாறாது விளங் கும்; காரணம் அது உயர்தனிச் செம் மொழி.

''தமிழ் உருக்க உணர்வைக் காட்டும் இரக்கத்தின் மொழி'' என்றே குறித் தார் தனிநாயக அடிகளார். ஒவ்வொரு மொழிக்கும் ஓர் அடிப்படைக் கூறு உண்டு. அவ்வியல்பில் மாத்திரமே அது சிறந் தோங்கி - பொன்றாப் பொலிவுடன் நின்று நிலைபெறும். ஒரு மொழி கவிதைக் குப் பொருத்தமாக இருக்கும்; மற்றொன்று கட்டளை பிறப்பிக்கவே பொருத்தமாக அமையும். 'அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே!' என்று உள்ளத்தை உருக்குகின்ற உணர்ச்சிப் பாடல்களே, தமிழில் மிக நன் றாக வடிவம்பெறும் என்பது, தனிநாயக அடிகளார் கருத்து. இருந்தாலும், ஆற் றலை வெளிப்படுத்துகின்ற 'கலிங்கத்துப் பரணி' 'அன்புணர்வை வெளிப்படுத்து கின்ற 'தேவாரம்', 'திருவாசகம்' இரண்டு டுமே தமிழிலே இடம்பெறக்காண்கிறோம். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச் சம், பெருமிதம், வெகுளி, உவகை, சம நிலை என்கிற ஒன்பான் சுவைகளும், ஒருங்கே பரவிநிற்கிற அழகினைத் தொட்ட தொட்ட இடமெல்லாம் தமிழில் தட்டுப் படக் காண்கிறோம். இன்னதுதான் இம் மொழியிலே சிறப்பாக வரும் என்கிற பொதுவிதிக்கு மாறாகத் தமிழில் எந்த உணர்வினையும் வெளிக்காட்ட இயல்வ தைக் காண்கிறோம். மகாகவி பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' இதற்கொரு பெருஞ் சான்று ஆகும்.

"வார்த்தைகள் நடந்தால் வசனம்; நடனமாடினால் கவிதை'' என்பார்கள். வசனம் என்பதோ கண்ணிலே பட்டுக் கருத்திலே தைக்க வேண்டும். கவிதையோ காதினைத் தொட்டுக் கருத்திலே நிலைத் தாக வேண்டும். 'காதினைத் தொட்டு' என்கிறபோது கவிதைப் பெண்ணுக்கு ஒரு சங்கீத சலங்கை அவசியமாகிறது. 'இசை யோடு சொல்லப்படாத கவிதையோடு இதயம் இசையாது; மனம் ஒன்றாது; கவ னம் கலக்காது. கவிதையின் வெற்றி கல கலப்பான ஓசையிலே இருக்கிறது. ஒன்று துள்ளலாக விழும்; மற்றொன்று தழுவலாக வரும். எப்படி இருந்தாலும் ஓசை இருக்க வேண்டும்.

கவிஞன் என்ன நடக்கிறது என்றே சொல்லமாட்டான்; ஒலிக் குறிப்பிலும் ஓசைச்சிறப்பிலுமே அதை உணர்த்துவான். பந்தாடுகிற மகளிரைக் குறிக்கிற சிலப்பதி காரப் பாடற்பகுதியும், உறங்குகின்ற கும்பகர்ணனை எழுப்புகின்ற கம்ப இரா மாயணப் பாடலும் சான்றுகள்.

கற்பனை இன்றேல் கவிதை இல்லை. அதையேதான் 'உள்ளதைச் சொல்வது அறிவியல்; உள்ளதை உணர்ந்து சொல்லு தல் இலக்கியம்' என்கிறோம். உணர்ந்து சொல்லுகிறபோது கற்பனைகூடவே சேர்ந்துகொள்ளுகிறது.

தமிழில் கவிதை வரும்; கற்பனை வரும்; அறிவியல் வருமா? என்றும் சிலர் கேட்கிறார்கள். அறிவியலைச் சொல்லித் தர இயலுமா? என்பது அவர்களதுகேள்வி. தங்களால் இயலாததைச் சில பேர் தமி ழால் இயலாது என்று கருதிடவும் பேசிட வும் காண்கிறோம். அது தவறு. ஒரு மொழி ஒரு துறையில் பயன்படுத்தப்பட்டால் தான், அதற்குரிய வார்த்தைகள் வரும். உதாரணத்திற்கு, 'காஸ்மோநாட்' என்கிற ஆங்கிலச்சொல் எப்போது வந்தது? ஆங் கிலம் விண்வெளித்துறையில் பயன்படுத் தப்பட்ட பிறகுதானே வந்தது? அதுபோ லத்தான் தமிழும் பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும். இதைத் தானே 1913-ஆம் ஆண்டில் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் 'நீரில் இறங்குகிற வரை நீச்சல் வராது' என்று குறித்தார் கள்! தமிழில் மருத்துவம் உண்டு; மருந் தியலும் உண்டு. சித்த மருத்துவத்தின் சிறப்பினைச் ஜெர்மானியர் உணர்ந்த அளவிற்கு நாம் உணர்ந்தோமில்லை. 'ஆடாதோடை' என்ற நம் ஊர் மூலிகை வெளி நாடு சென்று மருந்தாகி, 'ஆஸ்த்து மாவிற்கு இதுதான் அருமருந்து' என்று பாட்டிலில் வந்தால்தானே பாராட்டி வாங்குகிறோம்! மூலிகை - அவற்றின் குணம் - பயன்பாடு - அனைத்தும் அடங் கியது சித்தர்களின் இலக்கியக் கருவூலம். காணக்கிடைக்காத காட்டு மூலிகைபோல, எத்தனையோமருத்துவ முறைகள் தமிழ் இலக்கியத்தில் உண்டு.

தமிழில் அறிவியல் கருத்துக்களும் இல்லாமல் இல்லை. 'வலவன் ஏவா வான ஊர்தி' என்பதில் 'விமானம் ஓட்டுதலைப் பற்றிய அறிவியல் சிந்தனை' வெளிப்படுகி றது. 'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது நானாழி' என்கிற ஔவையார்பாடலில் பாஸ்கல் விதி வெளிப் படுகிறது. 'அணுவைப்பிளந்து' என்று வரு கிறவரியில் அணுவைக் கூறிடலாம் என்கிற குறிப்பு மேலோங்கி வருகிறது. 'செஞ்ஞா யிற்றுச் செலவும், அஞ்ஞாயிற்றுப் பரிப் பும், பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்' என் பதில் வானவியலில் வளர்ந்தமைந்த அறிவு புலப்படுகிறது. குறுந்தொகையில் வருகிற 'சேமச்சேப்பு' என்கிற சொற்றொடரில் 'தெர்மாஸ் பிளாஸ்கின்' தத்துவம் தெரி கிறது.

இப்படி வேதியியல், விலங்கியல் மாத் திரமல்ல - தமிழில் தாவர இயல், புவியி யல், வானவியல் ஆகியனவும் செழித்து நிற்பதனைக் காணுகிறோம்.

பழமைக்குப் பழமையான மொழி தமிழ் என்றால், புதுமைக்குப் புதுமையான மொழி தமிழ். அப்படிப்பட்ட 'என்றுமுள தென்தமிழுக்கு' த்தான் இன்று மாநாடு நடக்கிறது.

இந்துக்கள் (வைணவர்கள், சைவர்கள், முதலானோர்), சமணர்கள் பௌத்தர்கள், இசுலாமியர்கள், கிறித்தவர்கள் - இப்படி எல்லாச் சமயத்தவர்களாலும் வளர்க்கப்பட்ட தனிப்பெருமை தமிழுக்கு மாத்திரமே உண்டு. இது ஆங்கிலத்திற்கும், உலகிலேயே அதிகம் பேர் பேசுகின்ற சீன மொழிக்குங்கூட, இல்லாத பெருமைகளாகும். நெஞ்சிருக்கும்வரை நினைவிலிருக்கிற ஒரு பெருமை தமிழுக்கு என்னவெனில் - தமிழிலே கவிதை பாடியவர்கள் எந்தக் கவிப்பரம்பரைக்கும் வழி வழியாகச் சொந்தக்காரர்கள் அல்லர். வணிகர்கள், வள்ளல்கள், அரசர்கள், ஆளப்பட்டோர், கணக்கர்கள், கற்றறிந்த பெருமக்கள், இப்படி எல்லாத் தரப்பினரும் தமிழுக்கு அணிசெய்தனர். இதுவே தமிழ் மொழிக்கு அமைந்திருக்கிற தலையாய சிறப்பு என்று நான் கருதுகிறேன்.

இத்தகைய தமிழுக்கு மாநாடு நடக்கிறது என்பதிலே தமிழர்களாகிய நாமெல்லாம் பூரிப்பும் பெருமையும் அடைகிறோம்.

உலகளாவிய பொது நெறித் தத்துவங்களை உடையது தமிழாகும். தமிழர்களின் நாகரிகமோ தொன்று தொட்ட ஒன்றாகும்.

உலக வரலாற்றினை உணர்ந்து பார்த்தால் - ஏறத்தாழ **1900** ஆண்டுகளுக்கும் முன்னர்-மேற்கில் டிராஜன் என்பவனது ஆட்சிக்காலத்தில் உரோமாபுரிப் பேரரசு உச்சநிலை அடைந்திருந்தபோது-கிழக்கில் பசிபிக் சமுத்திரத்திலிருந்து காஸ்பியன் கடல்வரை-அட்லாஸ் மலைகளிலிருந்து இமாலயத் தொடர்வரை சீனப் பேரரசு எழுந்து சிறந்தபோது, ஆழ்ந்த கருத்தமைந்த அழகான கவிதைகள், சிறந்த— உயர்ந்த-இலக்கியத் தகுதிகளோடு பாடப்பட்டுள்ளன என்பதனை உணருகின்றோம்.

கிரேக்க-உரோமானிய இலக்கியத்தின் இதிகாசகாலம், சீனத்தின் உன்னத நேரம், போலவே சங்ககாலம்-தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் என்று கருதப்படுகிறது. அப்படிச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மரபிலேதான் — சங்கம்கண்ட சரித்திரப் புகழ்பெற்ற மதுரை மூதூரில்தான்-ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெறுகின்றது.

அகம், புறம் என்று இலக்கியத்தின் கூறுகளைக் காட்டி, களவியல் கற்பியல் என்ற பிரிவுகளையும் நிலைநாட்டி நிற்பது தமிழ் இலக்கியம்.

மற்ற மொழிகள் காதலுக்கு இலக்கியம் படைத்திருக்கலாம்; தமிழ்மொழியோ காதலுக்கு இலக்கணம் கண்ட மொழி. அந்த மொழிக்குத்தான் -மூவாத-மூத்தும் முதிராத - தமிழுக்குத்தான் - இப்போது மாநாடு நடக்கிறது.

புதுமைக் கருத்துக்கள் மாத்திரமல்லாமல்-உலகம் அளாவிய பொதுமைக் கருத்துகளும் அடங்கியது தமிழ் இலக்கியம் என்று மொழிந்தால், அது மிகையாயாது.

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றன், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்று எடுத்துச் சொன்ன திருமூலர், தமிழில் எழுதப்பட்டும், 'தமிழ்' என்றுகூட எங்குமே பேசாமல் மனித குலத்திற்கே பெரு விளக்காக எழுந்து வழிகாட்டும் ஏற்றமிகு தமிழா சான் திருவள்ளுவர் போன்றோரால், தமிழ் இலக்கியம் உலக அரங்கிலே இடம் பெறுகிறது.

வேதத்தின் பொலிவு, வேதாகமத்தின் கனிவு-இத்தனைக்கும் - ஒருநூல்-மானிடவர்க்கத்தின் மாபெரும் தத்துவப் பேழை என்று 'திருக்குறள்' உலகோரால் உணர்ந்து போற்றப்படுகிறது.

திருக்குறளை உலகிற்குச் சொன்னவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் டாக்டர் போப், வீரமாமுனிவர், ஆல்பர்ட் சுவைட்சர், வின்சென்ட்சுமித் போன்றோராவர்.

ஒரு மொழிக்கோ, ஓர் இனத்திற்கோ உரிய நூலாக இல்லாமல், உலகிற்கே வழி காட்டும் ஒப்புயர்வற்ற பெரு நூலாகத் திருக்குறள் விளங்குகிறது.

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

என்றாரே வள்ளுவர். பொறுமை உள்ள புதிய உலகம் காணுதற்கு அந்த ஒரு குறள் வழிகாட்டுவது போதாதா?

வளர்ந்து நின்றுவிட்ட மொழி அன்று தமிழ். அது வளருகின்ற-என்றும் வளர்ந்து சிறந்து ஓங்குகின்ற. உயர்தனிச் செம் மொழியாகும்.

விடுதலை வேள்வியில் பாரதியார் தனது தமிழ்க் கவிதைகளால் நாட்டு மக்களுக்கு வேகமும் விறுவிறுப்பும் ஊட்டிடவில்லையா?

'சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்;-இனி அஞ்சிடோம்''

என்று தமிழ் அவனைச் சாகாவரம் பெற்ற சரித்திரக் கவிஞனாய் ஆக்கிவிடவில்லையா?

''சிறைக்காக்கும் காப்பு எவன் செய்யும்''

என்று பெண் விடுதலை பேசிய வள்ளுவனுக்குப் பிறகு பாரதியார் பாடவந்தார். அவருக்கும் பிறகு பாவேந்தர் வந்தார்.

''பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திரு நாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற் கொம்பே''

என்றல்லவா பாடி வைத்தார்?

கல்லாதவன் விலங்கு-ஆமாம்-அது வள்ளுவர் காலம். பாவேந்தர் காலத்தில் அது வன்று நிலைமை.

''கல்வி நல்காக் கசடர்க்குத்

தூக்குமரம் அங்கே உண்டாம்''

என்றல்லவா பாடுகின்றார். கல்லாதவன் பழிக்கப்பட்டது பழங்காலம்: கற்றவனே பிறரைத் திருத்தாமல் இருக்கின்றானே என்ற பழிக்குக் காரணமாவது இக்காலம்.

புத்தம் புதிய புரட்சிக் கருத்துகளுக்குத் தமிழிலே என்றுமே பஞ்சமில்லை.

தமிழ்மொழியின் வேர்கள் பழமையானவை. ஆனால் அதன் பூக்கள் புத்தம் புதியவை.

கடல் தாண்டி வளர்ந்ததோடு மாந்தர் மனத்தையாளும் மங்காத புகழுக்குச் சொந்தமான தமிழுக்கு,

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும்''

என்கிற பாரதியின் பாட்டு வரிகளுக்குச் சந்தம் கூட்டும் வகையில் உலகத்தமிழ் மாநாடு நடக்கிறது.

வெறும் ஆரவாரத்திலும்-வெற்று முழக்கங்களிலும் கலைந்து போகிற மாநாடாக இது அமைந்துவிடாது. தமிழ்மொழியின் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க எல்லைக் கல்லாக இம் மாநாட்டை அமைக்க முயல்வோம். நமது தமிழ்மொழியில் எவ்வளவோ இலக்கியச் செல்வமிருந்தும், தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி இவற்றைப் பற்றிய ஆழ்ந்த ஆய்வுகள் பிறர் எதிர்பார்க்கின்ற அளவிற்கு ஏற்றம் பெறவில்லை-முழுவளர்ச்சி அடையவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். மொழியியல், எழுத்திலக்கணம், வடிவ இயல், ஒலியியல் உச்சரிப்பு இயல், வேர்ச்சொல் இயல்ஆகிய துறைகளில் மேலைநாட்டு மொழிகள் வளர்ச்சி பெற்ற அளவிற்குத் தமிழ் மொழியில் முயற்சிகள் வளர்ந்தபாடில்லை.

நமது ஒலி உச்சரிப்புப் பற்றிய திட்டவட்டமான கருத்துகள் வரையறை செய்யப்பட வேண்டும். தொல்காப்பியத்தின் பிறப்பியலில் இப்படித்தான் இந்த ஒலி பிறக்கும் என்றெல்லாம் சொல்லப்பட்டிருந்தாலும், தமிழ்ச் சொல் இப்படித்தான் உச்சரிக்கப்படவேண்டும் என்கிற கட்டுக்கோப்பை-நிறுவன வாயிலாக நாம் உருவாக்க முற்பட வேண்டும். உதாரணமாக ஆங்கிலச் சொல்-இப்படித் தான் உச்சரிக்கப்படவேண்டும் என்பதனைக் கட்டுக்கோப்பாக பி.பி.சி. போன்ற செய்தி நிறுவனங்கள் மற்றும் 'மொழி பேசிக் கருவிகள்' நிறுவுகின்றன. இத்தகைய நிலைகள் தொன்மையான நமது தமிழுக்கும் தோற்றுவிக்கப்படவேண்டும். இம்மாநாடு இத்துறைகளில் வழிவகை காணும் என்று நம்புகிறேன்.

வருமானம் தேடும் வழிக்காக மாத்திரமே ஒரு மொழி பயிலப்படுகிறது என்பதில்லை. இலக்கியச் செழுமைக்காகத் தமிழ்மொழி பிற நாடுகளிலும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களிலெல்லாம் தமிழுக்கென்று ஆய்வுத் துறைகள் தோன்றுவதற்கு அரசின் முயற்சிமாத்திரம்போதாது. தமிழின்பால் பற்றுடைய பலரது முயற்சிகளும் இதிலே இணைந்தாக வேண்டும். நமது பெருமைகளை நாமே ஓங்கியகுரலில் ஒலித்துக்கொண்டிருந்தால் போதுமா? மற்றவர்கள் தமிழின் அருமை பெருமைகளை அறிந்துகொள்வதற்கு நாம் ஒவ்வொருவரும் உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

காலத்தின் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப-எந்தவிதமான புதுமைக் கருத்துக்களையும் சொல்லி விளங்கவைக்கிற அளவிற்குத் தமிழ் வளர்ச்சி பெற்றாக வேண்டும். எல்லாமே தமிழில் உண்டு என்பதும், தமிழில் எதுவுமே இல்லை என்பதும் ஆகிய இரண்டும் மிகைக் கூற்றாகச் சிலருக்குப் படலாம். தமிழில் இருப்பதைப் பெருக்க வேண்டும்; இல்லாததை உருவாக்கவேண்டும். இதுவே நமது மொழி வளர்ச்சிக் கொள்கையாக அமைந்திட வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டில் மற்ற மொழிகளில் திறனாய்வுக்கலை வளர்ந்த அளவிற்குத் தமிழில் வளரவில்லை என்பதும் சிந்தனைக்குரியது. திறனாய்வுக்கும்கூடத் திறனாய்வு என்கிற அளவில் மேற்கத்திய மொழிகள் வளர்ந்துள்ள இந்நாளில், நமது மொழியில் திறனாய்வுத் துறையில் தீவிர வளர்ச்சி அமைந்தாக வேண்டும். திறனாய்வு வளர்ச்சி பெறாத இலக்கியத்தில் சுதந்திரமான கருத்துக்கள் இன்னும் உலவத் தொடங்கவில்லை என்று தான் பொருள். ஆகவே இந்நிலை மாற்றப்படுவதற்கான வழிகாட்டியாக இந்த உலகத் தமிழ் மாநாடு அமைந்திட வேண்டும்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்று பெரும் பிரிவுகளைப் பற்றிப் பேசுகின்றோம்; என்றாலும் பழங்காலத் தமிழிசை நூல்கள் நமக்கு அகப்படவில்லை என்பது போக-இந்தத் தமிழிசைத் துறையில் ஒருங்கிணைக்கப்பட்ட-ஒருமுகப்படுத்தப்பட்ட-ஒழுங்குபடுத்தப்பட்ட முழுமையான ஆராய்ச்சி நூல், இன்னும் வெளியாகவில்லை என்பதை நாம்மறுப்பதற்கில்லை.

'நாடகம்' என்பது தமிழின் பெருங்கூறாக இருந்தும், நாடகம் என்றால் '**மனோன்மணீயம்**' என்றேதான் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அறிஞர் அண்ணா போன்றோர் நாடகத் தமிழுக்குப் பெரும்பணி ஆற்றிய பிறகும், முறையான நாடகத் தமிழுக்கான தொண்டுகள் தொய்வில்லாமல் தொடர்ந்து விரைந்து நடைபெறவில்லை. இயல் வளர்ந்து சிறந்திருக்கிற அளவிற்கு, இசைத் தமிழோ-நாடகத் தமிழோ அறிவியல் நோக்கோடு அமைந்த-ஆய்வு அடிப்படையில் வளர்ச்சி பெற்றபாடில்லை. இந்நிலை மாறிட உலகத்தமிழ் அறிஞர்கள் வழிகாட்டிட வேண்டும்.

திட்டமிட்ட உழைப்பும் -கடினமான பணியும் ஒரு மொழியினை வளர்க்கும் என்பதற்குச் சோவியத்து நாடு பெரும் உதாரணமாகத் திகழ்கிறது. சோவியத்து நாடு விடுதலை பெற்றபோது, அங்கு வழக்கிலிருந்த கிர்கிஸ் என்கிற மொழியில் ஒலிக்கூறுகள் இருந்தனவே தவிர, அதற்கென்று வரிவடிவம் அமைந்திருக்கவில்லை. இருந்தாலும் அரை நூற்றாண்டுக் காலத்திற்குள்-அம்மொழிக்கென்று வரிவடிவம் கண்டுபிடிக்கப்பட்டு, அம்மொழியிலேயே எழுதி 'ஆராய்ச்சிப்பட்டம்' பெறுகிற அளவிற்குச் சோவியத்து மக்கள் அம்மொழியினை வளர்த்துள்ளார்கள். அதைப் போலத்தான் மக்களின்-அரசின்-ஆராய்ச்சியாளரின் ஒருங்கிணைந்த பணியினால் தமிழ்மொழியை ஒரு நவீனமான அறிவியல் கருவியாக உருமாற்றலாம் என்கிற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்தச் சூழ்நிலைகளிலும் நமக்கு நம்பிக்கை தருகின்ற ஒன்று, நமது அரசு மேற்கொண்டுள்ள எழுத்துச் சீர்திருத்தமாகும். பெர்னாட்ஷா போன்றவர்கள் முயன்றும் ஆங்கிலத்தில் செய்து காட்டமுடியாத எழுத்துச் சீர்திருத்தம், தமிழில் தந்தை பெரியாரின் உந்துதலால் நடப்பது உவப்பினைத் தருகின்றது. வீரமாமுனிவரது சதுரகராதி உருவாக்கப்பட்ட காலத்திற்குப் பிறகு, தந்தை பெரியாரின் நினைவினைப் போற்றுகின்ற தமிழக அரசு, இந்த எழுத்துச் சீர்திருத்தப் பணியில் முன்னின்று செயல்படுகிறது.

அரசின் முயற்சியால் ஆட்சிமொழி ஆணையம் அமைக்கப்பட்டு, சட்ட நூல்கள் தமிழில் பெயர்க்கப்படுகின்றன.

அலுவலகங்களிலெல்லாம் தமிழ் மணக்க வேண்டும் என்று நாம் முயன்றாலும், அண்ணாவின் அரசு அமைந்த பிறகுதான், மூவாண்டு முனைப்புத் திட்டத்து அடிப்படையில் மூன்றாண்டுகளுக்குள், 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்; என்றும் தமிழ்' என்று விரைந்து செயற்படுகின்றோம். சிறந்த தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்திலும், சீரிய இலக்கியங்களைத் தமிழிலும் பெயர்க்கின்ற பணியினை அரசு மேற்கொண்டிருக்கிறது. முதிர்ந்து வளர்ந்த தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் ஒய்வூதியம் வழங்கப்படுகின்றது. புலவர்களைப் போற்றும் நல்லுணர்ச்சியால் புலவர்களின் நிறைவிழாக்களும் பாராட்டுகளும் ஆர்வத்தோடு நமது அரசால் நடத்தப்படுகின்றன. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கமும் தொடங்கப்பட்டுள்ளது. மொழியைப் படிப்பது வேறு; மொழியில் படிப்பது வேறு. அறிவியல் அனைத்தும் அன்னை மொழியிலேயே பயிற்றுவிக்கப்படுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்மொழி வளர்ச்சிக்காக அறிஞர் அண்ணாவின் அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களில் சிலவற்றை மட்டுமே மேலே குறித்தேன். தமிழ் வளர்ச்சிக்கென்று இன்னமும் ஆற்றவேண்டிய பணிகள் ஆயிரமாயிரம் என்பதை நான் மறக்கவில்லை.

பேரறிஞர் அண்ணாவின் வழியில், தடைபல கடந்து, அவர்காட்டிய இலட்சியப் பாதையில் நடைபோட, நம்மையே நாம் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். அவர் நினைவாக எழுச்சிப் பணிகள் ஏராளம் இதுவரை நடைபெற்றிருந்தாலும், மதுரையிலே நடைபெறுகிற மகத்தான இந்தத் தமிழ் மாநாடு, அரும்புகழ் வாய்ந்த-அண்ணனது நினைவிற்குப் பெரும் புகழைச் சேர்க்கிற பணியாக மிளிர வேண்டும் என்ற எண்ணம், எனக்கு எப்போதும் உண்டு. அழகுத் தமிழுக்கு ஆற்றலையும் புகழையும் சேர்க்க அனைவரும் அயராது உழைப்போம் என்று உறுதிகொள்ளவும், தமிழ்த் தொண்டாற்றவும் வாருங்கள் வாருங்கள் என்று வணங்கி, இருகரம் கூப்பி உங்களை அன்போடு அழைக்கின்றேன்.

வாழ்க தமிழ்!

வளர்க அண்ணா நாமம்!!

R. RAJU,
Dy Commissioner HQrs
(Retired)
HR&CE Administration Dept

# கலைக் கோயில்கள் ... பண்பாட்டுக் கருவூலங்கள்

மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்
*(அறநிலையத்துறை அமைச்சர்)*

தமிழகத்தின் கலை, மொழி, சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பாட்டு நிலையங்களாகத் தமிழகத் திருக்கோயில்கள் விளங்கி வந்திருக்கின்றன. மக்களுக்குத் தலைவனாகிய மன்னனைப் போற்றியதுபோல, படைப்புக்குத் தலைவனான இறைவனைக் கருதியதால், அவனை மன்னர்மன்னன் என்றும், கோவேந்தன் என்றும் கொண்டாடியதன் விளைவாக, கோவேந்தனுடைய இல்லம் என்னும் பொருளில், மன்னவர் அரண்மனைகளுக்கு வழங்கிய பெயர், பின்னாளில் 'திருக்கோயில்' என்றே இறைவனின் அருள் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது.

வானுயர்ந்த கோபுரங்களும், வனப்பு உயர்ந்த மாமதில்களும் ,சீருயர்ந்த தேர்களும், தூய திருக்குளங்களும் கோயில் உடைமைகளாகப் போற்றப்பட்டன. எழில் மிகுந்த இக் கோயில்களினால் தமிழகத்தின் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது. கோயில்கள் பழம்பெரும் நாகரிகக் கூறுகளையும் பண்பாட்டு நலன்களையும் பலவகையாகச் சுட்டிக் காட்டுகின்றன. பிரித்தானிய ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் ''கோயில் கட்டும் பெருங் கலைத் திறம் வாய்ந்தவர் தமிழர்'' என்று தமிழினத்தைப் பற்றிக் குறித்திருப்பது, நமக்குப் பெருமை தருவதாகும். மேலைநாட்டார் வியந்து போற்றும் கிரேக்கக் கலை வெறும் பொருள் நிலையில் மட்டும் நிற்பது; தமிழ் நாட்டின் சிற்பக்கலையும் கட்டடக்கலையும் அந்த நிலையினும் மிக உயர்ந்து, ஆன்ம நிலையின் அடிப்படையில் எழுந்தது என்று அவர்களே, போற்றுகிறார்கள்.

காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சியால் அறிவுத் தெளிவும், புதியன காணும் ஆர்வமும் மக்களிடையே பிறந்துள்ளன. எனினும், பண்டைக் காலத்து மக்கள் கொண்டிருந்த கோட்பாடுகள், சில நம்பிக்கைகளின் அடிப்படையில் பிறந்தன என்றாலும், அந் நம்பிக்கைகள் சமுதாய நல்வாழ்வுக்கு உரம் ஊட்டவல்ல துணையாகவும் அமைந்திருந்தன என்பதை, நாம் அறவே மறுப்பதற்கு இல்லை. ஆலயங்கட்கு வழிபாடு கருதிச் செல்பவர்களைப் போலவே, சிற்பக்கலையின் சீர்த்தியைக் கண்டு வியக்கச் சென்று வருபவர்களும் உண்டு. சேலம் திருக்கோயிலின் முன்மண்டபத்தில் காட்சி தருகின்ற நெடிய திருமேனிப் படிமத்தை இராமர் வடிவம் என்றே பலரும் கருதியிருந்தனர். ஆனால், ஈரோட்டைச் சார்ந்த பெரும் புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் என்பவர், அது வல்வில் ஓரியின் திருமேனி என்றும், வரலாற்றை இங்ஙனம் ஆலயத்துள் வாழ்வித்தனர் என்றும், அவர்சொல்லித் தாம் அறிந்ததாக, மாண்புமிகு நீதிபதி செங்கோட்டுவேலன் அவர்கள், ஒருமுறை குறிப்பிட்டார்கள். இதனால் இறையுணர்வோடு, வரலாற்றுணர்வையும் ஊட்டும் கலை நிலையங்களாக, ஆலயங்கள் விளங்குதலை அறியலாம்.

நம்மைக் காட்டிலும், அயல்நாட்டிலிருந்து வரும் பெருமக்கள் பலர், நம் திருக்கோயில்களின் அமைப்பையும் அழகையும் மகிழ்ந்து பாராட்டுவதோடு, ஆலயச் சிற்பங்களைப் பற்றிய நுணுக்கமான செய்திகளையும் ஆர்வத்தோடு கேட்கின்றனர். பழங்காலத்தில் பொதுநிலையங்கள் என்பவை மிகச் சிலவாகத்தான் இருந்திருக்கவேண்டும். அவற்றுள் திருக்கோயில் மக்கள் வாழ்வின் அனைத்து நிலைகளையும் தழுவிய கலை, பண்பாட்டு, நாகரிக மையங்களாகவும் திகழ்ந்தன. இன்று நம்மை வியப்பில் ஆழ்த்தும் சிற்பக்கலைத் திறத்தின் ஊற்றுக் கண்களாகவே ஆலயங்கள் திகழ்ந்துள்ளன. இக் கருத்திலேயே ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'' என்று முன்னோர்கள் குறித்தனர்போலும்.

இக்காலத்துக் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் ஏற்படாத முன்னர், கோயில்கள்தாம், கல்விக்கும் கலை வளர்ச்சிக்கும் பெரும் தொண்டு புரிந்துள்ளன. கோயில்களில் உள்ள மண்டபங்கள் பலவற்றில், கல்வியும் கலைகளும் பயிற்றுவிக்கப்பெற்றன. கோயில்களில் நடன மண்டபம், இசைமண்டபம், புராணபடன மண்டபம், வியாகரண மண்டபம், தருக்கமண்டபம் முதலியன இருந்தன; இருக்கின்றன. அவ்வவற்றில் அந்தந்தக் கல்வியும் கலைகளும் பயிலப்பெற்றன. 'சரசுவதிபண்டாரம்' என்றும், 'திருக்கைக்கோட்டி' என்

றும் பெயர்பெற்றிருந்த ஆலயப் பகுதிகளில், சிறந்த நூலகங்கள் அமைந்து பணியாற்றி வந்தன. பழைய நூல்களைப் பாதுகாத்தும், அந்நூல்களைப் பிரதிகள் செய்தும், படிக்கவிரும்புவோர்க்கு அந்நூல்களைக் கொடுத்து வாங்கியும், கோயில்கள் கல்விவளர்ச்சிக்குப் பெருந் தொண்டுகள் புரிந்துள்ளன.

கோயில்களில், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், முதலிய எல்லாக்கலைகளும் போற்றி ஆதரித்து வளர்க்கப்பெற்றன. பரிபாடல் என்னும் சங்கநூல், திருப்பரங்குன்றம் கோயிற் சுவர்களில் சூரியன், சந்திரன், மன்மதன்-இரதி, அகலிகை-கௌதமர் வரலாறு முதலிய பலப்பல அழகோவியங்கள் தீட்டப்பெற்றிருந்ததைக் கூறுகின்றது.

மாமல்லபுரம் தேர்க்கோயில்களிலும், தஞ்சைப்பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம்கோயில், திரிபுவனம், தாராசுரம், இராமேசுவரம், தாரமங்கலம், பேரூர், சிதம்பரம், திருவரங்கம், திருப்பெருந்துறை, திருவண்ணாமலை முதலான தலங்களிலுள்ள கோயில்களிலும் உள்ள சிற்பங்களால், கோயில்கள் சிற்பக்கலைக்கு அளித்துள்ள பேராதரவு புலனாகின்றது.

நுண் கலைகளில் தலைசிறந்த இசைக்கலை, கோயில்களில் பெரிதும் தழைத்தோங்கி வளர்ந்து வந்தது. கொட்டி மத்தளம், முரலியம், வங்கியம், உடுக்கை, சங்கு முதலிய எண்ணற்ற வகையான வாத்தியங்களை வாசிப்பவர்கள் அங்கே நியமிக்கப் பெற்றிருந்தனர். வேதபாராயணம் செய்பவர்களும், திருமுறை ஓதுபவர்களும், திவ்வியப்பிரபந்தம் இசைப்பவர்களும், நூல் இயற்றும் கவிஞர்களும், சொற்பொழிவுகள் ஆற்றும் புலவர்களும் கோயில்களால் ஆதரிக்கப்பெற்றனர்.

நாட்டின் அரசில் எத்தனையோ குழப்பங்கள் மலிந்திருந்த காலத்திலும், நாசகாலத்திலும், கோயில் ஆதரவில் வளர்ந்த பண்டைக்காலத்துத் தமிழிசை, சிலப்பதிகார இசை, சம்பந்தர் போன்றோரது பணியால் தொடர்ந்து மக்களிடையே உணர்வோடு வளர்ந்து சமீபகாலத்தில் கர்நாடக இசை என்ற புதுப்பெயரில் வளர்வதற்கும் கோயில்கள் இடம் கொடுத்தன. கோயில்கள் இருந்திராவிட்டால் இன்று யாரும் கர்நாடக இசை என்றோ, பரதநாட்டியம் என்றோ பேச இடமிராது.

கோயில்களில் நடனக்கலையும் நாடகக்கலையும் போற்றி வளர்க்கப் பெற்றன. பல கோயில்களில் நடன மண்டபங்கள் இருந்துவந்தன. தஞ்சைப் பெரிய கோயிலில், 400 நடனப் பெண்கள் 'தளிப்பெண்டுகள்' என்று சொல்லப்பெற்றோர் இராசராச சோழனால் அமர்த்தப்பெற்றனர் என்றும், அவர்களுக்கு நான்கு வீதிகளில் இரு சிறகுகளிலும் தனித்தனி 400 வீடுகள் கட்டித் தரப்பெற்றன என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

''மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை,
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சுரம்''

என்று, கருவூர்த்தேவர் தஞ்சைக் கோயிலிலிருந்த நடன சாலையினையும், நாடக சாலையினையும் குறிப்பிட்டிருத்தல் காணலாம். நாடகம், நடனம், நிருத்தியம், நிருத்தம், கவுத்துவம் முதலிய கலைகள் பலவும் கோயில்களில் வளர்க்கப்பெற்றன.

சிதம்பரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர் முதலிய கோயில்களில், நடனக் கலையின் 108 கரண வகைகள் சிற்பமாக அழகுற வடிக்கப்பெற்றுள்ளன. கோயில்களில், இசையிலும் நாடகத்திலும் வல்ல கலைஞர்களான நாடக மாராயன் ,சாக்கைக் கூத்தன், கானம்பாடி, வாத்திய மாராயன் முதலியவர்கள் ஆதரிக்கப்பெற்றனர். தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேச்சுர நாடகம், பிற்காலத்தில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் முதலியனவும், திருப்பாதிரிப்புலியூரில் பூம்புலியூர் நாடகம் போன்றனவும், மற்றும் பக்தியை வளர்க்கின்ற கடவுட் கதைகளும், அடியவர்களின் வரலாறுகளும் கோயில்களில் நடிக்கப்பெற்று வந்தன.

பூத்தொடுப்பது ஒரு கலை. கோயில் தோறும் நந்தவனமும், மாலை கட்டுவோரும் உண்டு. எத்தனை பூக்காரத்தெரு, மாலை கட்டித் தெருக்கள்? தார், கண்ணி; மாலை, பிணையல், தொடையல், சரம் என்று எத்தனை வகைகள்! தமிழ்நாட்டைத் தவிர உலகில் வேறெங்கும் இத்தனை விரிவு இல்லை. இவ்வாறு கலையைத் தந்தது கோயில்.

பண்டைக்காலத்தில் கோயில்களே நீதிமன்றங்களின் பணிகளைச் செய்துவந்தன. பொதுமக்களின் குறை முறையீடுகளைக் கேட்டு விசாரித்து, ஊர்ப் பெருமக்கள் கோயில்களிலேயே நீதி வழங்கிவந்தனர். திருவெண்ணெய்நல்லூர்க் கோயில்; திருவாலங்காட்டுக்கோயில் முதலியவற்றில் இன்றும் அத்தகைய வழக்கு மண்டபங்கள் இருத்தலைக் காணலாம்.

இன்றைய சமுதாயத்தில், மக்களுக்கு வருகின்ற பலவகைப் பிணிகளையும் தீர்க்கின்ற மருத்துவமனைகள், ஆங்காங்குப் பணிபுரிந்து வருகின்றன. பண்டைக்காலத்தில் இத்தகைய மருத்துவ மனைகள் பல, கோயில்களின் ஆதரவிலேயே நடைபெற்று வந்தன. காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருமுக்கூடல் என்னும் ஊரில் 'வீர சோழன் ஆதுலர் சாலை' என்னும் மருத்துவமனை இருந்ததாகக் கல்வெட்டுகள்

கூறுகின்றன. இவ்வாறே திருவாவடுதுறைக் கோயிலின் சார்பிலும் சிறந்ததொரு மருத்துவமனை இருந்ததென்று கல்வெட்டுகளால் தெரிகின்றது. கோயில்களின் சார்பில் சித்தமருத்துவக் கலைஞர்கள், பொதுமக்களின் பலவகைநோய்களுக்கும் மருத்துவம் புரிந்து, நோய் தீர்த்து வந்தனர்.

இன்று உடல் ஊனமுற்றோர் சேவை அரசின் சீரிய பணிகளுள் ஒன்று. இதைக் கோயில்கள் செய்தன. விழுப்புரத்திற்கு அருகில் உள்ள திருவாமாத்தூர்க்கோயிலில் குருடர் பதினாறுபேருக்கு உணவு உறையுள் தந்து, கோயிலில் பதிகம் பாடப் பயிற்சி அளித்து அவ்வேலையில் நியமிக்கப்பெற்றிருந்தனர். அவர்களுக்கு வழிகாட்டித் துணைபுரிய இருவர் நியமிக்கப் பெற்றிருந்தனர். இப் பதினெண்மருக்கும் உணவு முதலியவற்றுக்கான திட்டங்கள் செய்யப்பெற்றிருந்ததனை ஒரு கல்வெட்டு விரிவாகக் கூறுகிறது.

தமிழகக் கோயில்களில் எளிய மக்களுக்கும், அநாதைகளுக்கும், யாத்திரிகர்களுக்கும் ஒவ்வொரு நாளும் உணவளிக்கப் பெற்றது. அதற்கென்று கோயில்களில் அறச்சாலைகள் பல அமைந்து பணிபுரிந்து வந்தன.

இக்காலத்தில் பெரும்பாலான ஊர்களில், நிதிநிலையங்களாகிய வங்கிகள் பல அமைந்து, சமுதாய மக்களின் பொருளாதாரச் செழிப்பிற்கு உதவிபுரிந்து வருகின்றன. இதுபோலவே, பண்டைக் காலத்தில் கோயில்கள் நிதிநிலையங்களாக விளங்கி மக்கட் சமுதாய நலனுக்குரிய செயல்களைப் புரிந்து வந்தன. கோயிலுக்குவரும் நன்கொடைகள், அறக்கட்டளைகள் முதலியவற்றைப் பெறவும், பொருள் தேவைப்படும் ஏழை மக்களுக்கு ஓர் அளவான வட்டிக்குக் கடன் தரவும், இவற்றின் தொடர்பான பத்திரங்களையும் ஆவணங்களையும் பாதுகாக்கவும், பலவகை ஏற்பாடுகள் கோயில்களில் நிலவி இருந்தன.

நாட்டில் போதிய மழையின்மையாலும், விளைவு இன்மையாலும், பஞ்ச நிலைமை ஏற்பட்டால், இக்காலத்தில் அரசாங்கம் பலவகைப் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ளுகின்றது. இதுபோன்ற பஞ்ச நிவாரணப் பணிகளில், கோயில்களும் ஈடுபட்டுப் பொதுமக்களுக்குத் தொண்டாற்றியுள்ளன. ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடைக் காலத்தில் ஓரளவு நெல் தண்டல் செய்து ஒதுக்கிப் பாதுகாத்து வைக்கப் பெற்றது. பஞ்சம் ஏற்பட்டால், அந்நெல் பொது மக்களுக்குக் கோயில்மூலம் முறையாக வழங்கப்பெற்றது. அறுவடையாகும் நெல்லைச் சேர்த்தல், பாதுகாத்தல், மேற்பார்வையிடுதல், பஞ்ச காலத்தில் குடிமக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தல் முதலிய வேலைகளைக் கோயில்களின் சார்பில், 'பஞ்சவார வாரியத்தார்' என்னும் குழுவினர் கவனித்து வந்தனர்.

''அல்லார் கண்டத்து அண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு,
பல்லாறு இயன்ற வளம்பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்,
எல்லாம் எய்தி உண்களன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்;
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்'

என்று, பெரியபுராணத்தில், சேக்கிழார், ஒரு சமயம் திருவீழிமிழலையில் கொடிய பஞ்சம் ஏற்பட்டபோது, திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அவ்வூர் மக்கள் எல்லோர்க்கும் சோறு வழங்கிப் பஞ்ச நிவாரணப் பணி புரிந்தமையினைக் கூறியிருத்தல் இங்கு நாம் கருதத்தக்கது.

இந்நாளில், அம்மை முதலிய கொள்ளைநோய்கள் ஏற்பட்டால், அரசாங்கம் விரைந்து நடவடிக்கைகளை எடுத்து, இந்நோய்களைப் போக்கி மக்களைக் காப்பாற்ற முனைகின்றது. இத்தகைய பணிகள் பண்டைக்காலத்தில் நம் கோயில்களின்மூலம் செய்யப்பெற்றுவந்தன. திருச்செங்கோடு என்னும் திருக்கொடிமாடச் செங்குன்றூர்த் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் சென்றபொழுது, அப்பக்கங்களில் எல்லாம் நளிர்சுரம் என்னும் கொடிய காய்ச்சல் ஏற்பட்டது என்றும், அதனைத் திருஞானசம்பந்தர் இறைவனைப் பாடித் தொழுது தீர்த்தருளினார் என்றும், பெரியபுராணம் கூறுதல், கோயில்கள் ஆற்றி வந்த பிணிதீர்ப்புப் பணியினை உணர்த்துகின்றது எனலாம்.

இவற்றையெல்லாம் கருதினால், நம் தமிழ்நாட்டில் பழங்காலத்தில் கோயில்களே, கல்வி நிலையங்களாக விளங்கின; கலை வளர்க்கும் கழகங்களாகத் திகழ்ந்தன; ஏழை எளியவர்களை உணவளித்துப் பாதுகாக்கும் அறச்சாலைகளாக அமைந்திருந்தன; மருத்துவ மனைகளாகப் பணி புரிந்தன; தொழில்தரும்நிறுவனங்களாகத் தொண்டாற்றின; பொதுமக்களுக்குப் பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவி புரியும் நிதி நிலையங்களாக இயங்கின என்னும் உண்மைகளை நாம் நன்கு உணரலாம். சுருங்கக் கூறினால், நம் கோயில்கள் தொன்றுதொட்டே சமுதாய நன்மை குறித்துப் பற்பல துறைகளிலும் தொண்டாற்றி வந்துள்ளன எனத் துணிந்து கூறலாம்.

இங்ஙனம் நம் தமிழகத்தின் சமயஇயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரிக இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் தொடர்புகொண்டு, மக்கட் சமுதாயத்திற்கு நலன்கள் பலவும் செய்து வருகின்ற கோயில்களே, உண்மையில் நமது 'சமுதாய நல நிலையங்கள்' ஆகும் எனக் கூறலாம். இத்துணைச் சிறப்புமிக்க, நமது கோயில்களைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாக்கவேண்டுவது, தமிழ் மக்களாகிய நம் எல்லோருக்கும் உரிய தலையாய பெருங்கடமையாகும். *

# சேக்கிழாரும் சித்தாந்தமும்

'இராவ்சாகிப்' திரு. நல். முருகேச முதலியார், B.A.

சேக்கிழார் சைவத்திற்குச் செய்த பணிகள் பல திறத்தன. சைவ சமய வரலாற்றிலேயே அவருக்கு ஒப்பானவர் ஒருவரும் இலர் என்று கூறுவது மிகையாகாது. முதலாவதாக எண்ணவேண்டிய தொண்டு, அநபாய சோழனின் அவைக்களத்தில் சீவகனது வரலாற்றுக் கதைக்கு முதலிடம் பெற ஒட்டாது, உண்மை நாயன்மார்கள் சரிதைகளை விளக்கியது. இல்லையேல் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்கப் பாடப்பெற்ற திருத்தொண்டத் தொகையின் பெருமையும், இராசராச சோழனால் பாராட்டப் பட்ட திருத்தொண்டர் திருவந்தாதியின் பெருமையும், விளக்கமடைந்திருக்க மாட்டா. நாயன்மார்கள் சரிதைகளும், செயற்கரிய செய்த பெருந்தொண்டுகளும் மறைந்தோ, குழறுபட்டோ போயிருக்கும்.

எனவே நாடாண்ட மன்னனை அச் சரிதையில் ஈடுபடுத்தியதும், அரசியல் உதவி கொண்டு சமயத்தை வளர்த்ததும், தலையாய தொண்டு. இரண்டாவது, சேக்கிழார் நாயன்மார்கள் சரிதைகளைத் திருவருள் வலிகொண்டு தம் அளவிலா உழைப்பினாலும் அன்பினாலும் உருவாக்கியது ஒரு தெய்விகச் செயலாகும். எந்நாட்டு வரலாற்றிலும் சுமார் 1,000 ஆண்டுகளில் பற்பல காலங்களில் வாழ்ந்த அடியார்களின் வரலாற்றை உள்ளபடி, உணர்ந்தபடி, இறைவன் உணர்த்தியபடி எழுதிய, வேறு ஆராய்ச்சியாளரைக் காண்கிலோம். ஆராய்ச்சிமட்டுமல்லாமல், அச் சரிதைகளை ஒரு பெரும் காப்பியமாக, உயர்ந்த சிவக் கவிதையாக்கியது ஒரு பெரிய தொண்டாகும். சைவத்தின் குலக் கவிஞராகிய சேக்கிழாருக்கு மேலாக ஒருவரையும் சொல்லல் இயலாது. மூன்றாவது சேக்கிழார் சைவ சித்தாந்த உண்மைகளைத் தெளிவுபடப் பெரிய புராணத்தில் உணர்த்தியது. இது முன்னிரண்டையும் விட மிகச் சிறந்த தொண்டு. இப்பொருளைப் பற்றி ஈண்டுச் சிறிது சிந்திப்போம்.

சேக்கிழார் காலம் சைவ சித்தாந்த ஞான சூரியனான மெய்கண்டாரின் காலத்துக்குச் சுமார் 70 ஆண்டுகள் முந்தியது. ஆனால் இராமாநுசர், மத்துவர், பராசரர், பசவேசுவரர் முதலியவர்களுக்குச் சிறிது பின்னோ சிறிது சமமாகவோ இருக்கும். அடியார்க்கு நல்லார் போன்ற இலக்கிய ஆசிரியர்கள் காலமும் ஏறக்குறைய அதுவே.

இந்தச் சூழ்நிலையில் தமிழ் மறையாகிய தேவாரத் திருமுறைகள் இருந்த போதிலும், ஞானாமிர்தம் முதலிய சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் இருந்தபோதிலும், சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மைகளைத் தத்துவ நூலாக மட்டும் இயற்றாமல், அநுபவம் சான்ற உண்மை அடியார்களின் சரிதைகள் வாயிலாகவும், அவர்கள் திருவாய் மலர்ந்த தெய்விகப் பாடல்கள் மூலமாகவும் விளக்குவது அவசியமாயிற்று. முதலில் சமயத்தை வலுப்படுத்தித்தான் சமயக் கோட்பாடுகளை நிலைநாட்ட வேண்டும். சேக்கிழார் பெருமான் தேவாரப் பாடல்களின் உண்மைப் பொருள்களைப் பெரியபுராணத்தில் ஆங்காங்கே எடுத்துரைத்து இறைவனின் பஞ்ச கிருத்திய அருட்டிறத்தினை அடியார்கள் சரிதைகளில் விளக்கிக் காட்டவில்லையேல், வேதாகமங்களின் ஞானசாரமான சைவ சித்தாந்தம் 'இராசாங்கத்தில்' அமர்ந்திருக்க முடியாது. எனவே சேக்கிழார், மெய்கண்ட தேவநாயனார், பின்னர் அருளிய சிவஞானபோதம் என்ற பெருஞ் சாத்திரத்திற்கு அடிகோலினார் என்பது உண்மை.

இந்த உண்மையை விளக்கப் பெரிய புராணத்தில் எடுத்த இடமெல்லாம்சான்று காட்டுவது எளிது. அவைகளையெல்லாம் விடத் தலை சிறந்தது சேக்கிழார் திருப்பாசுரத்துக்குத்தந்துள்ள விளக்கமேயாகும். இப்பாடல்களைச் சித்தாந்த சாத்திரம் பதினான்கிற்கு ஒப்பாகவும் ஒரு முறையில் உயர்வாகவும் சொல்லலாம். திருஞானசம்பந்தரது திருப்பாசுரத்தைச் சிவாகமங்களின் ஞானபாத முடிவாய்ச் சிவஞான போதத்துள் வடித்துக் காட்டப்படும் பன்னிரண்டு சூத்திரங்களின் மூலபாடமாக உணரலாம். முதல் மூன்று பாட்டுக்கள் பொது வகையிலும் பின்பாட்டுக்கள் சிறப்புவகையிலும் அமைந்துள்ளன. இவைகளுக்குச் சேக்கிழார் பெருமான் இருபத்திரண்டு பாட்டுக்களில் மெய்ப்பொருள் முடிவு காட்டும் வகையில் பேருரை அருளியுள்ளார்.

முதல் பாட்டாகிய 'வாழ்க அந்தணர்' என்ற பாட்டின் விளக்கத்தில் சங்காரக் கடவுளாகிய சங்கரனே முதல்வன் என விளக்கி எல்லாச் சந்த வேள்விகளும் அர்ச்சனைகளும் வழிபாடும் அவர்க்கே உரியன எனக் கூறியுள்ளார். இரண்டாவது அருமைப் பாட்டாகிய 'அரிய காட்சியராய்' என்ற பாட்டின் விளக்கம் சித்தாந்தத்தின் அரிய கொள்கையான இறைவனதுசொரூப தடத்த இலக்கணங்களைக் கவின்பெற விளக்குகிறது. அப்பாட்டு :—

''அரிய காட்சியர் என்பதவ் வாதியைத்
தெரியலாம் நிலையாற் றெரியா ரென
உரிய அன்பினிற் காண்பவர்க் குண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினார்''

என்பது, முன்பாட்டில் கூறிய பதி, பாச, பசுஞானங்களால் தெரியப்படாதநிலைமையுடைமை காரணமாக அரிய காட்சியர். அவ்வாறு பாச பசு ஞானங்களால் தெரிய மாட்டாதவர். காண்பதற்கு உரிய அன்பின் திறத்தாலே காணும் பக்குவமுடைய அடியார்கள் காண, உள்ளன்பான நல்லடையாளங்களால் இறைவன் அருளுகின்றான் என்று அழகாகச் சேக்கிழார் விளக்கியுள்ளார்.

இதை, ''அறி பொருள் அசித்தாம், அறியாத தின்றாம்'' என்று சாத்திரம் கூறுகிறது. இறைவன் காட்சிப்படும் நிலை ''ஊனக்கண் பாசமுணராப் பதியை, ஞானக் கண்ணிற் சிந்தைநாடி'' (9. சூ.) என்று போதமும், அதைத் தொடர்ந்து சித்தியார், பிரகாசம் முதலியவைகளின் வாக்குகளும், காழிப்பிள்ளையாரும், குன்றைக் குலக் கவிஞரும் சொன்னதை வலியுறுத்துகின்றன. முந்திய நூல்களாகிய உந்தியார் ''அகளமா யாரு மறிவரிதப் பொருள்'' என்றும், ''அகளமாய் நின்றவம் பலத்தெங்கூத்தன்'' என்றும் சொல்லிப் போயின. சேக்கிழார் பதியுண்மை, பதியிலக்கணம் இவைகளை நன்கு கூறியுள்ளார்.

சிவஞானபோதம் எட்டாம் சூத்திரப் பொருளைப் பின்வரும் சேக்கிழார் பாடலில் எளிமையாகக் காணலாம்.

''தம்மையே சிந்தியா வெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
இம்மையே நினைவார்தம் இருவினைப்
பொய்ம்மை வல்லிருள் போக்குவா ரென்ற
தாம்''

தியான உறைப்பினாலே இருவினை ஒப்பும் மலபரிபாகமும் வரச் செய்து மலத்துன்பத்தினின்றும் நீங்கலாம் என்ற செய்தியை ''அவையே தானேயாயிரு வினையிற் போக்குவரவு புரிய ஆணையில் நீக்கமின்றி நிற்குமன்றே'' என்ற சிவஞான போதம் (சூத்திரம் 2) நினைவுபடுத்துகிறது.

சேக்கிழாரின் இத் திருப்பாட்டு, பொய்ம்மையைப் போக்கி மெய்ம்மையை அடைவிக்கும் சாதனத்தையும், பாச நீக்கத்தின் பயனையும் குறிக்கின்றது.

''ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணம்''

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்'' என்ற திருப்பாசுரப் பாட்டுக்களுக்குச் சேக்கிழார் தந்துள்ள விளக்கங்களைப் போதம் எட்டு ஒன்பது சூத்திரங்களும், சித்தியார் பாட்டுக்கள் பலவும் உள்ளடக்கியுள்ளன.

''போதித்த நோக்குற் றொழியாமற்
பொருந்தி வாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின்
நெறிபேர்மின் என்றாம்''

என்ற சேக்கிழார் பாட்டு. ''தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த'' என்ற சிவஞான போதத்தின் கருத்தை நினைவு படுத்துகின்றது.

சித்தாந்தத்திற்கு உயிர் நாடியாக உண்மையை உறுதிப்படுத்தும் இந்தக் கொள்கையைத் திருத்தொண்டர்களுக்கு இறைவன் எப்படி நிராதாரமாகவும், சாதாரமாகவும் பக்குவத்திற்குத் தக்கபடி குருவடிவாய்த் தோன்றி அருளுவர் என்பதனை உணர்வதே, முன்னை வல்வினையை முடிப்பதற்கு வழியல்லாது வேறு ஆராய்ச்சி தேவையில்லை என்பதும், ஆதலினாலே தாம் எழுதப்புகுந்த திருத்தொண்டர் புராணம் இந்தச் சாதனத்துக்கு உதவி என்பதும் உணர்த்தச் சேக்கிழார் பின்வருமாறு அருளியுள்ளார்.

''........ஆதியார் தாளடைந்
தின்ன கேட்கவே யேற்ற கோட்பாலவும்
முன்னைவல் வினையும் முடிவெய்துமத்
தன்மையார்க்கு என்றனர் சண்பை காவ
லர்''

சித்தாந்தத்திற்குச் சப்தப் பிரமாணம் உடன்பாடு என்பதைக் குறிக்கப் பாசுரம் ஏழாம்பாட்டில் சண்டீசர் முக்கண்மூர்த்தியடி சேர்ந்தவண்ணம் ''அறிவார் சொலக் கேட்டும்'' என்பதைச் சேக்கிழார் மறுபடியும் ஒருமுறை ''தக்கோர் பெரிதும் சொலக்கேட்டனம்'' என்றார்.

சித்தாந்தத்தின் முழு உண்மையை இறைவன் உணர்த்தினாலன்றி உணர முடியாது என்பதைச் ''சண்பையர் வேந்தர் மெய்ப்பாசுரத்தைக் குறியேறியவெல்லை அறிந்து கும்பிட்டேனல்லேன் சிறியேன் அறிவுக்கு அவர்தம் திருப்பாதம் தந்த நெறியே சிறிதுயானறி நீர்மை கும்பிட்டேன் அன்பால்'' என்னும் பாட்டால் தெரிவிக்கின்றார்.

சேக்கிழார் பெருமான் சைவ சித்தாந்த சம்பிரதாயத்தைத் தெளிவுற

விளக்குதலை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தம் பிள்ளைத் தமிழில் பாராட்டியுள்ளார்கள்.

''பேர் கொண்ட சைவபரிபாடை யறிவரிய சம்
பிரதாயம் முதலிய யாவும்
பிறங்கத் தெரித் தெம்மையாண்ட குன்றத் தூர்ப்
பிரானைப் புரக்க வென்றே''

என்பது காப்புப் பருவப் பாட்டிலொன்று. பிள்ளையவர்கள் சேக்கிழாரின் பக்திச் சுவை நனி சொட்டும் கவிதையை மட்டும் வியந்ததில்லை. அவர் சித்தாந்த நெறியை விளக்கிய சீர்மையையும் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

இன்னொரு பாட்டில் சேக்கிழார் மூவர் அருள் மறைப் பொருளைத் தெரிவித்துள்ளார் என மகா வித்வான் கூறியுள்ளார். அது,

''அருண்மூவர் அருண்மறைப்பொருள் தெரிய
முன்னொருவருர் அருண்மறைப் பொருள் விளக்கும்
நம்பறா வித்தியா ரணிய முனிவரன் உளம்
நயப்ப யாப்புற விரித்த நாவலர் பிரான்..''

என்பது வேதத்துக்குப் பாடியம் கண்ட வித்தியாரண்யரின் உளம் நயப்பச் சேக்கிழார் சைவ மூவர் அருள் மறைக்குப் பொருள் தெரித்தார் என்பது வெகு அரிய செய்தி. மிக உயர்ந்த பாராட்டு. வித்யாரண்யர் மனம் உவந்த குறிப்பின் விளக்கத்தை நம்மவரில் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்வது மிகவும் வேண்டற் பாலது.

தமிழ்மறையில் அடங்கிய பல இரகசியங்களைச் சேக்கிழார் விளக்கியுள்ளார் என்று மகாவித்வான் கூறியுள்ளார்.

''தவாப் பொருளணிச் சிறப்பும்
தமிழ்மறை அடங்கு பல மந்தணமும்
வெள்ளிடைத் தவிரும் வெற்பென விளங்க''

என்பது காண்க. சைவசித்தாந்தத்தில் காணப்படும் சரியை, கிரியை, யோகம் ஞானம் எனற நாற்பாதங்களையும் சேக்கிழார் பெருமான் உலகறியச் சாற்றினர் என்பதை மகாவித்துவான் செங்கீரைப் பருவம் 9-ஆம் பாட்டில் அழகாகக் கூறியுள்ளார்.

சைவ சமயத்தின் தனிச் சிறப்பான மலத்தை மாற்றும் தீக்கையின் பயனைத் தாலப்பருவம் 6-ஆம் பாட்டில் மகாவித்வான் குறிப்பிட்டுள்ளார். 7-ஆம் பாட்டில் அடியார்களின் அன்பு அத்தனையும் சேக்கிழார் கண்காணும்படி செய்தார்என்பதையும், அவர்களுடைய தமிழ் மான்மியம் சைவப் பயிரைத் தழைக்கச் செய்தது என்பதையும் மகாவித்துவான் பாராட்டியுள்ளார்.

முக்கியமாகச் சேக்கிழார் திருப்பாசுரத்துக்கு உரை அருளியதன் பெருமையைச் சப்பாணிப்பருவம் 9-ஆம் பாட்டில் மகாவித்வான் வெகு அற்புதமாகப் பாராட்டியுள்ளார். சேக்கிழார் நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் போதகாசிரியராகவும் ஞானாசிரியராகவும் திகழ்கின்றார் என்கிறார் மகா வித்வான். சித்தாந்த ஞானம் தலைக் கட்டச் செய்த ஞானகுரு சேக்கிழார் என்பதில் ஐயமுண்டா? அவர் சித்தாந்தப் புகழ் என்றும் நின்று நிலவுக!

''தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபிரான், எங்கள்
பாக்கி யப்பய னாப்பதி குன்றைவாழ்
சேக்கி ழான்அடி சென்னி இருத்துவாம்''

—சிவஞானசுவாமிகள்

## தமிழின் சிறப்பு

*ஓங்கல் இடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி,*
*ஏங்கொலிநீர் ஞாலத் திருள்அகற்றும்;—ஆங்கவற்றுள்*
*மின்நேர் தனிஆழி வெங்கதிர் ஒன்று; ஏனையது*
தன்நேர் இலாத தமிழ்!

— தண்டியலங்காரம்

# கஞ்சனூர்—சப்த தலங்கள்

(திரு. மு. அருணாசலம்)

ஒரு சிறப்பான தலத்தையும் அதைச் சூழ்ந்துள்ள தலங்களையும் சேர்த்து ஏதேனும் ஒரு காரணம் பற்றி, சப்த தலங்கள் என்று வழங்கும் வழக்கு தமிழ்நாட்டில் பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. சப்தவிடங்கத் தலங்கள் ஆரூர், நள்ளாறு, நாகை, காறாயில், கோளிலி, வாய்மூர், மறைக்காடு என்பன. சப்த தானத்தலங்கள் ஐயாறு, பழனம், சோற்றுத்துறை, வேதிகுடி, கண்டியூர், பூந்துருத்தி, நெய்த்தானம் என்பன. கச்சி ஏழுதலங்கள் அனேகதங்காபதம், காரோணம், காந்தாரம், மேற்றளி, ஏகம்பம், மயானம், கச்சி நெறிக்காரைக்காடு என்பன. முத்தித் தலங்கள் ஏழு என்பது அகில இந்திய வழக்கு; காசி, கயை, அவந்தி காஞ்சி, அயோத்தி, துவாரகை, மதுரை என்பர். இவை போல்வன இன்னும் பல.

இப் பலவற்றுள் கஞ்சனூர்ச் சப்த தலம் என்பது ஒரு வழக்கு. கும்பகோணத்துக்கு அருகிலுள்ள சிறப்பான பல தலங்களில் கஞ்சனூர் மிகவும் சிறப்பானது. கஞ்சனூரிலிருந்து வலமாகச் செல்வதானால் கஞ்சனூர், திருக்கோடிகா, ஆலங்காடு, குரங்காடுதுறை (ஆடுதுறை), திருமங்கலக்குடி, சூரியனார்கோயில், திருமாந்துறை என்பன ஏழுதலங்கள், இவ்வேழினுள் ஆலங்காடு (பழையனூர்த் திருவாலங்காடு அன்று), திருமாந்துறை, சூரியனார் கோவில் என்ற மூன்றும் பாடல் பெறாத தலங்கள். மற்ற நான்கும் பாடல் பெற்றவை. இத்தலங்களின் வரலாறுகளை இனிச் சுருக்கமாய்க் காணலாம்.

## திருக்கோடிகா

கல்லணை-காவேரிப்பட்டினம் நெடுஞ்சாலையில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம்வட்டத்தில், கும்பகோணத்திற்குக் கிழக்கே பன்னிரண்டு கல்லில் உள்ளது. இதற்கு மேற்கில் இதே சாலையில் ஒரு மைல் தூரத்தில் கஞ்சனூர், இருக்கிறது. நரசிங்கன்பேட்டை இரயிலடியிலிருந்து வடக்கே ஒரு மைல், காவிரியாற்றைக் கடந்து சென்றால் கோடிகா அடையலாம்.

இவ்வூர் கா என்று முடிகிற ஐந்து தலங்களில் ஒன்று. இவை திருவானைக்கா, குரங்குக்கா, கோடிகா, கோலக்கா, நெல்லிக்கா என்பன. சிறப்பான பெரியகோயில் ஆனது பற்றி, அப்பர் திருத்தாண்டகம் வியன்கோடிகா என்று கூறும். சப்தகோடி மகாமந்திரங்களில், ஓம் நம; சுவாஹா, உம்பட் என்ற மூன்று கோடி மகா மந்திரங்களும், தங்களுக்கு ஏற்பட்ட ஒரு சாபத்தின் விமோசனத்தின் பொருட்டு, இந்தத் தலத்தில் வந்து முனிவர்கள் வடிவத்தில் பூசை செய்த காரணத்தால், இங்கு ஆண்டவனுக்குத் திரிகோடீசுவரன் என்ற திருநாமம் ஏற்பட்டது. அம்பாள் திருநாமம் திரிபுரசுந்தரி. தலவிருட்சம் பிரம்பு; தீர்த்தம் காவேரி.

சாலையிலிருந்து நேரே ஒரு பர்லாங்கு தூரத்தில் கோயில் சந்நிதி. கோயிலும் கோபுரமும் பெரியவை. விசாலமான பிராகாரங்கள். கோயில் நல்ல நிலைமையில் உள்ளது. கோயிலின் அமைப்பு கயிலாயப் பிரஸ்தம் என்று சொல்வார்கள். வலப்புறம் உள்வாயிலில் உரிய இடத்தில்நிருத்த விநாயகரும், இடப்புறம் துர்க்காதேவியும் பிரதிட்டை; வடப்புறம் கோஷ்டத்தில் முறைப்படி வேறு துர்க்காதேவியும் உண்டு. வீதிகளும் திருக்குளமும் அமைந்துள்ளன.

சிவராத்திரி அமாவாசையில், மூன்று கோடி மகா மந்திரங்கள் பாப விமோசனம் அடைந்த விழா. இவ்வூரில் யமனும் சித்திரகுப்தனும் பூசித்துப் பேறு பெற்றார்கள். முன் கோபுர வாயிலில் இருபுறமும் வலத்தில் சித்திரகுப்தனையும், இடத்தில் யமனையும் காணலாம். எமதருமராசர் இங்குக் கும்பிட்ட கோலத்தில் காணப்படுகிறார். வேறெங்கும் இக்கோலம் காண்பதரிது. எமனுக்கு அமாவாசையிலும், சித்திரகுப்தனுக்குப் பௌர்ணமியிலும் இங்கு பூசை உண்டு. சித்ரா பௌர்ணமியில் சிறப்பாகப் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது.

முருகப்பெருமான் ஆறுமுகத்தோடு மயில்மீது எழுந்தருளியிருக்கிறார். நால்வர் சிலைகளில் மாணிக்க வாசகர் இல்லை. சுந்தரமூர்த்தி பரவை சங்கிலியாரோடு எழுந்தருளியுள்ளார். தென்புறமுள்ள கோஷ்டத்தில் நடராசப்பெருமான், கணபதி, அகத்தியர் தனியிடங்களில் உள்ளனர். நடராசப் பெருமான் பக்கலில் வலப்புறம் காரைக்காலம்மையார், பேய் வடிவத்தோடு தாளமேந்திப் பாடுகிறார். வலப்புறம் தனியாக சிவகாமசுந்தரியார் சிலை வடிவம் உள்ளது. நடராசப் பெருமானின் உற்சவ மூர்த்தியின் பக்கத்தில் மாணிக்க வாசகரும், சம்பந்தரும் உள்ளனர்.

அகத்தியர் வழிபட்ட பெருமான் அகத்தீசுவரர் என்ற பெயரோடு தனி

யிடத்தில் எழுந்தருளியிருக்கிறார். சுவாமி விமானத்தின்மீது அகத்தியரும் துருவாசரும் உள்ளனர். அகத்தியர் வஸ்திரதாரி; துருவாசர் கௌபீனதாரி. திருச்சுற்றில் மகாலட்சுமியை அடுத்து ஜேஷ்டாதேவி. இத்தேவியை வழிபட்டு இங்குப் பெண்கள் உடல் துன்பம் நீங்கப் பெறுகிறார்கள் என்று சொல்வர். வடபுறம் கோஷ்டத்தில் பிட்சாடனர், துர்க்காதேவி முதலியோர்: துர்க்கைக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. பிரதான கோபுரத்தின் வாயிலில் இருபுறமும் எண்ணற்ற சிற்ப வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இரதங்கள், குதிரை வீரர்கள், போர்வீரர்கள், பெண்களின் நடனத் தோற்றங்கள் முதலியன சிறந்தன.

சம்பந்தர் தேவாரம், அப்பர் தேவாரம் திருநேரிசை, குறுந்தொகை, தாண்டகம் ஆக நான்கு பதிகங்கள் உள. கோடிகாவுடையகோ, கோடிகா அமர்ந்துறையும் குழகன், கோடிகாவனைக் கூறாத நாளெல்லாம் பாடிகாவலிற் பட்டுக் கழியுமே என்று அப்பர் பாடுகிறார்; தாண்டகத்தில் பதினெட்டுத் தலங்களை வைப்புத் தலமாகச் சுட்டிப் பாடுகிறார். ஐயடிகள் காடவர்கோன் தம்முடைய க்ஷேத்திரத் திருவெண்பாவில் திருக்கோடிகாவைப் பாடுகிறார்.

''காலைக் கலையிழையால் கட்டித்தன் கை
யார்த்து
மாலை தலைக்கணிந்து மையெழுதி
—மேலோர்
பருக்கோடி மூடிப் பலர்அழா முன்னம்
திருக்கோடி காஅடைநீ சென்று''

என்பது காண்க.

பரஞ்சோதி திருவிளையாடல் அருச்சனைப் படலத்தில் அகத்திய முனிவர் வசிட்டாதி முனிவர்களுக்குச் சிவதலங்களைக் காட்டுமிடத்தில், திருக்கோடிகாவில் மூன்றுகோடி முனிவர்கள் பூசித்தமை கூறப்பெற்றுள்ளது.

........''எம்மனோர் மூன்று கோடி
மதிபெறு முனிவர் வந்து வழிபடு மூதூர்''

என்பதனால் அதன் பெருமை அறியலாம்.

தலப்பெயரைக் குறித்த வரலாறு தொடக்கத்தில் சொல்லப்பட்டது. விநாயகரைக் குறித்த வரலாறு ஒன்று உண்டு. ஒரு காலத்தில் ஆழ்வார் பன்னிருவரும் திருப்பதி வேங்கடேசப் பெருமாளைத் தரிசிக்கச் சென்றார்கள். பெருமான் தரிசனம் கொடாமல், ''நீங்கள் திருக்கோடிகா அடைந்து அங்கு எழுந்தருளியுள்ள அம்பிபிகையை என் வடிவமாகக் கண்டு வழிபடுவீர்களாக'' என்று கட்டளையிட்டார். அவ்வாறே அவர்கள் காவிரிக்குத் தென்கரையாக வந்து காவிரியைக் கடக்க முயன்றபோது காவிரி வெள்ளம் வழிவிடவில்லை. அங்கு அகத்திய முனிவர், மணலைப் பிடித்து வைத்து அதில் விநாயகமூர்த்தியை எழுந்தருளச் செய்து வழிபட்டுக் கொண்டிருந்தார். அவர் ஆக்ஞைப்படி வந்தவர்கள் அவ்விநாயகரை வழிபாடு செய்யவே வெள்ளம் வடிந்தது. ஆழ்வார்கள் ஆலயம் அடைந்து அம்பிகையைத் திருமாலாக வழிபட்டார்கள். அது முதல் அவ்விநாயகருக்குக் கரையேற்று விநாயகர் என்பது திருநாமம். அவர் ஆலயத்தின் பிராகாரத்தில் நிருதி விநாயகராக எழுந்தருளியுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர்த் திருக்குளத்தின் அருகே வெட்டியபோது ஆறடி ஆழத்தில் பல செப்புத் திருவுருவங்கள் மணலில் புதைக்கப்பட்டுள்ளவை கிடைத்தன. பக்குவமாக நல்ல மணலில் மூடப்பெற்றிருந்து சில நூறு ஆண்டுகள் ஆகியும் ஒரு சிறிதும் களிம்பேறாமல் இருந்தமை மிக்க ஆச்சரியத்தை விளைவித்தது. கிடைத்த திருவுருவங்கள் கணபதி, நால்வர் (மாணிக்க வாசகர் உள்பட), அம்பிகை, கலியாண சுந்தரமூர்த்தி, தேவியின் பீடம் முதலியன. கலியாணசுந்தரமூர்த்தி மிகச் சிறப்பான அழகிய பெரிய உருவமுடையவர். பீடத்தில் சேடிமார் உருவங்கள் இருந்தன. தேவியின் உருவம் காணப்படவில்லை. இத்திருவுருவங்கள் யாவும் சென்னைப் பொருட் காட்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது. கல்வெட்டுக்கள் நிரம்பக் காணப்படுகின்றன. தக்கார் இதனை ஆய்ந்து வெளியிடின் பல உண்மைகள் போதர வாய்ப்புண்டு.

## திருமாந்துறை

பாடல் பெற்றதென வழங்கும் திருமாந்துறை வேறு, இங்குக் குறிப்பிடும் திருமாந்துறை வேறு. முந்தியது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவானைக் காவின் பக்கமுள்ளது. பிந்தியது தஞ்சாவூர் மாவட்டத்தில் கஞ்சனூர் அருகிலுள்ளது.

கல்லணையிலிருந்து காவேரிப் பட்டினம் செல்லும் கல்சாலையில்கும்பகோணம் முதல், திருக்கோடிகா வரையில் ஒரு பேருந்து மார்க்கம் உள்ளது. அதின் முடிவில் திருக்கோடிகா. அதன் மேற்கே ஒரு கல் அளவில் கஞ்சனூர்; அதன்மேற்கே ஒரு கல் அளவில் திருமாந்துறை. அதன் மேற்கே ஒரு கல் அளவில் சூரியனார் கோயில். அதனினும் மேற்கே ஒரு கல் அளவில் திருமங்கலக்குடி என்னுமாறு இத்தலங்கள் அமைந்துள்ளன. திருமாந்துறை ஆலயம் சாலையிலிருந்து வடபுறத்தில் ஒரு பர்லாங்கு தூரத்தில் அமைந்துள்ளது.

திருவாவடுதுறை ஆதீனத்தார் பராமரிப்பில் உள்ளது. சுவாமி திருநாமங்கள் ஆம்ரவனேசுவரர், மாந்துறையப்பர்,

அட்சயலிங்கம்; அம்பாள் திருநாமங்கள் யோகநாயகி, வாழ்வு தந்தவள்; தல மரம் மா. சிறிய கோபுரம் உண்டு. வெளிப் பிராகாரம் மிகவும் பெரியது.

விநாயகர் மூலத்தானத்திலும் உற்சவ மூர்த்தத்திலும், கோபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள வடிவத்திலும், எங்கும் வல்லபை விநாயகராகவே காட்சியளிக்கிறார். முருகப்பெருமான் மயிலோடு கூடிய கோலத்தில் சேர்ந்தாற்போல் இரண்டு திருவுருவங்கள் உள்ளன. இரண்டும் வள்ளி தெய்வயானை அம்மையாரோடு உள்ளன. சுவாமி சன்னிதியின் இடமும் வலமும் சுப்பிரமணியருக்கும், சோமாஸ்கந்தருக்கும் உரிய தனிக்கோயில்கள் உள்ளன. அம்பாள் கிழக்கு நோக்கியவாறு சுவாமிக்குத் தென்புறத்தில் தனிக்கோயிலில் அமர்ந்திருக்கிறார். அம்பாள் கோயில் முன் வாயிலில் வலப்புறம் விநாயகரும், இடப்புறம் மாரியம்மனும் உள்ளனர். பழைய அம்பாளின் திருவுருவம் சிறிது பின்னமாகித் தனியே வைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் அழகான உருவம். நடராசமூர்த்தி சிறிய உருவம். மாணிக்க வாசக மூலவர், விரித்த சடையோடு இருக்கிறார். உற்சவ சுந்தரர் பெரிய உருவம். திருச்சுற்றில் மகாலட்சுமிக்கு இடப்புறத்தில் தனிக்கோயிலில் திருமால் பூதேவி, சீதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கிறார்.

முற்காலத்தில் இங்குத் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெற்றது. தேர்விழா முதலியன நடைபெற்ற அடையாளங்கள் காணப்படுகின்றனவே யன்றி, இப்போது ஒரு சிறப்பும் நடைபெறவில்லை.

பஞ்சபாண்டவர் வனவாசத்தின் போது, காட்டிலிருந்த பாண்டவரிடம் துரியோதனன் ஏவலால் துர்வாச முனிவர் நேரம் கடந்து வந்து உணவு வேண்டினார். அப்போது திரௌபதியின் வேண்டுகோளுக்கிணங்கிக் கிருஷ்ணபகவான் திரௌபதியிடமிருந்து ஒரு பாத்திரத்தை அட்சய பாத்திரமாக்கி, அதிலிருந்து குறைவில்லாத உணவு வரச்செய்து, அதுகொண்டு துர்வாசருடைய பசியைப் போக்கினார். இந்த வரலாறு நடைபெற்ற இடம் இந்தத் திருமாந்துறை ஆகிய வனம். இங்குள்ள சிவபெருமான், கண்ணன் மூலம் அட்சய பாத்திரம் அருளிய காரணத்தால், சுவாமிக்கு அட்சயலிங்கம் என்ற பெயர் ஏற்பட்டது. இவ்வரலாறே திருமால் இங்குத் தனிக்கோயிலில் எழுந்தருளியிருப்பதற்குக் காரணம் போலும். இந்த ஊரில் திருஞானசம்பந்தர் வந்து வணங்கி, ''அஞ்சொல் தமிழ்மாலை'' பாடினார் என்று பெரியபுராணம் கூறுகின்றது. (2196).

கஞ்சனூர் ஆண்டதங் கோவைக்
 கண்ணுற்று இறைஞ்சி முன் போந்து
மஞ்சணி மாமதில் சூழும்
 மாந்துறை வந்து வணங்கி,
அஞ்சொல் தமிழ்மாலை சாத்தி
 அங்ககன் றன்பர்முன் னாகச்
செஞ்சடை வேதியர் மன்னும்
 திருமங் கலக்குடி சேர்ந்தார்

இதனால் இந்தத் தலத்திற்குச் சம்பந்தர் தேவாரப் பாடல் இருந்து, இப்போது கிடைக்கவில்லை என்பது தெளிவு. 'பாடல் இழந்த பதி' என்று இவ்வூரார் இதைச் சொல்லுகிறார்கள். பெரியபுராண வைப்புத்தலமாக இதை நாம் கருதுவோம்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
 மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!

தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
 தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வி!

கானார்ந்த தேனே! கற் கண்டே! நற் கனியே!
 கண்ணே! கண் மணியே! அக் கட்புலம்சேர் தேவீ!

ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
 அம்மே! நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே!

—கரந்தைக் கவியரசு

# கச்சியும் கச்சபேசமும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

R. RAJU
Dy Commissioner H.Qrs.
Retired
H.R.&C.E Administration Dept

**முன்னுரை :**

'கச்சி' என்பது காஞ்சிபுரத்திற்கு மிகப் பழங்காலந்தொட்டு வழங்கி வரும் பெயர். ''கச்சியோனேகைவண் தோன்றல்'' என்பது பெரும்பாணாற்றுப் படை. மணிமேகலையின்கண் ''கச்சிமாநகர் புக்க காதை'' என வருதலும் காணலாம். கச்சி என்னும் சொல்லைப் போலவே 'காஞ்சி' என்னும் சொல்லும் மிகப் பழமையான தொன்று.

**அருளியல் நகரம் :**

காஞ்சிபுரம் முத்திதரும் நகரங்கள் ஏழனுள் முதன்மை மிக்கது. இதனை 'நகரேஷு காஞ்சி' என்னும் வடசொற் றொடர் இனிதுணர்த்தும். உலகிலேயே மிகப் பழமை வாய்ந்த நகரங்களுள் ஒன்றாக மதிக்கத் தக்க மாட்சிமையுடையது காஞ்சிபுரம். கி. பி. 640இல் இயூன்-சங்க் என்னும் சீன யாத்திரிகன், இங்கு வந்து அதன் சிறப்புக்களைக் கண்டு வியந்து பாராட்டிச் சென்றிருக்கின்றான். 'நகர அமைப்பு ( Town Planning ) முறையில் காஞ்சிபுரம் உலகிலேயே மிகவும் சிறப்பிடம் பெற்றொளிர்கின்றது' எனக் கெட்டிஸ் (Prof. Geddes) துரைமகனார் புகழ்ந்து போற்றுகின்றார். உலகில் எத்துணையோ பல சிறந்த பெருநகரங்கள் தோன்றிச் சில காலம் இருந்து, பின்னர் இருந்த இடமும் தெரியாமல், மருங்கற அழிந்து மாய்ந்தொழிந்து போயின. நமது தமிழகத்திலேயே, சோழர்களின் தலை நகரங்களாக விளங்கிய உறையூர் காவிரிப் பூம்பட்டினம் முதலிய நகரங்களுள், சேர வேந்தர்களின் தலைநகரமாகத் திகழ்ந்திருந்த வஞ்சிமாநகர் முதலியனவும் அழிந்து போயின. ஆனால், பாண்டியர்களின் தலைநகரம் ஆகிய மதுரையும், பல்லவர்களின் தலைநகரமாகிய காஞ்சியும், தொன்று தொட்டு இன்றுகாறும், தம் பழம் பெருஞ் சிறப்புகளிற் சிறிதும் குன்றாது நின்று நிலவி வருகின்றன. மதுரையின் மாட்சிமைக்கு மீனாட்சியம்மை காரணம்; காஞ்சியின் பெருமைக்குக் காமாட்சியம்மை காரணம். அம்மையின் அருள் காரணமாகவே இவ்விரு பெரு நகரங்களும் செழித்தோங்கிச் சிறந்து திகழ்ந்து வருகின்றன எனலாம்.

**கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர் :**

காஞ்சிபுரத்தின் புகழ், மிகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தேசம் எங்கும் பரவியிருந்தது. பிறதேசங்கள் எல்லாம் காஞ்சியின் சிறப்பினைப் புகழ்ந்து கொண்டாடின. இதனை ஏறத்தாழ 1,600 ஆண்டுகட்கு முற்பட்டவராகக் கருதப்பெறும் மாணிக்கவாசகர், 'தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்' என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம். 'தேசமெல்லாம் புகழ்ந்தாடுதல்' என்னும் அடைமொழி, கச்சிக்கும், திருவேகம்பன் செம்பொற்கோயிலுக்கும் பொருந்துவதாகும். இங்ஙனமே 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமாநகர்' என்று திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்திருத்தலும் அறிந்தின்புறற்பாலது. சந்திரகுப்த மௌரியனின் அமைச்சராக விளங்கி, 'அர்த்த சாத்திரம்' என்னும் அரிய பெரிய நூலினை எழுதிய சாணக்கியர் காஞ்சிபுரத்திற் பிறந்தவர். சங்கரர் இராமாநுசர் பரிமேலழகர் போன்ற பெருமக்கள் காஞ்சியில் வாழ்ந்தவர்கள். பௌத்த சமயத்தின் பெருநூலாசிரியர்களாகச் சைனா திபெத்து ஜப்பான் பர்மா இலங்கை முதலிய நாடுகளிலெல்லாம் போற்றப்பெறும் புகழ் ஓங்கிய திக்கநாகர், தருமபாலர், தருமகீர்த்தி முதலிய பெருமக்கள் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்களேயாவர். கடம்ப அரசர் குலத்தைத் தோற்றுவித்த முதல்வனாகிய மயூரசன்மன் (கி. பி. 350) என்னும் மன்னவன், பல்லவர்களுக்குப் பகைவனாயினும், 'கல்வியிற் கரையிலாத காஞ்சி' மாநகரத்தின் சிறப்புக்கருதி, அங்கு மாறுவேடங்கொண்டு மறைந்து வந்திருந்து கல்வி பயின்று சென்றனன் என்று வரலாறு கூறுகின்றது! காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் ஆகியவற்றின் சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றனவாகும்.

## சான்றோர்கள் போற்றிய காஞ்சி :

காஞ்சிபுரம் திருக்குறிப்புத் தொண்டர், சாக்கியர், ஐயடிகள் காடவர்கோன் என்னும் நாயன்மார்கள் வாழ்ந்திருந்து வழிபட்டு அருள்பெற்ற மாட்சிமை சான்றது. கந்தபுராணம் இயற்றிய கச்சியப்ப சிவாசாரியார், சேக்கிழார் சுவாமிகள், சிவஞான சுவாமிகள், தணிகைப் புராணம் முதலியன பாடிய கச்சியப்ப முனிவர் முதலிய பெருமக்கள் பலரும், காஞ்சிபுரத்தின் பால் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். இங்குத் தங்கியிருந்தபொழுதே ஆசிரியர் சிவஞான சுவாமிகள், சிவஞானபோதப் பேருரையினை வகுத்தருளினர் என்பர். சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றினைப் பற்றுக் கோடாகக்கொண்டு, தொண்டை நாட்டின் பெருமையினையும், காஞ்சிபுரத்தின் சிறப்புக்களையும் சுவைததும்பப் பெரிதுவந்து பாடுகின்றார். காஞ்சி என்னும் சொல்லே அவர்தம் திருவுளத்தில் தேனும் இன்னமுதமுமாய்த் தித்திக்கின்றது. ஆதலின் அவர் அதனைத் திரும்பத் திரும்பப் பலகால் பல பொருள்களில் அமைத்துப் பின்வரும் செய்யுளிற் பாடி இன்புறுகின்றார்.

''தண்காஞ்சிமென்சினைப்பூங்கொம்பர் ஆடல்
சார்ந்தசைய, அதன்மருங்கு சுரும்ப தாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழனவேலிப்
பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில்
நீடும்
திண்காஞ்சி நகர், நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு, திருமறைகள் ஒலிக்கும்தெய்வ
வண்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க
வளர்கருணைக் கடலுலகம் சூழ்ந்தால்
மானும்''

## காஞ்சியின் சிறப்பு :

காஞ்சிபுரம் கோயில்கள் நிறைந்த நகரம். அதனைப் போன்று, மிகச் சிறந்த கோயில்கள் நிறைந்த நகரம், பிறிதொன்றில்லை எனலாம். பலவகைப் பட்டனவும், பழமையும் பெருமையும் வாய்ந்தனவும் ஆகிய கோயில்கள் அங்குள்ளன. சமணம் பௌத்தம் சைவம் வைணவம் என்னும் பல்வேறு சமயங்களின் கோயில்களும் அங்கு உண்டு. பல்லவர் காலம், சோழர் காலம், பிற்காலம் ஆகியவற்றைச் சேர்ந்த பல கோயில்கள், அந்நகரை அணி செய்கின்றன.*

அதுபற்றியே ''கச்சிப் பலதளியும் ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே'' என நாவுக்கரசர் நவின்றருளினார். காஞ்சிபுரத்தின் அதிசயங்கள் குறித்துச் சேக்கிழார் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றிலும், கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் திருநகரப் படலத்திலும், மாதவச் சிவஞான சுவாமிகள் காஞ்சிப்புராணம், விம்மிதப் படலத்திலும் விரிவாக விளக்கிப் பாடியுள்ளனர். சீர்காழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உளவாதல்போல, காஞ்சிபுரத்திற்கும் பன்னிரண்டு பெயர்கள் வழங்கும். அவை முறையே காஞ்சிபுரம், பிரளய சித்து, சிவபுரம், விண்டுபுரம், திரிமூர்த்தி வாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம் சகற்சாரம், சகலசித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம் என்பனவாகும். இப்பெயர்க் காரணங்களால் காஞ்சிபுரத்தின் அருமை பெருமைகளை யாவரும் அறிந்தின்புறலாம்.

## ஏகாம்பரநாதர் :

காஞ்சிபுரம் ஏகம்பநாதர் கோயிலைப் போலவே, கச்சபேசமும் முதன்மையும் சிறப்பும் வாய்ந்த கோயில் ஆகும். இறைவன் 'வெள்ளங் காட்டி வெருட்டிட' அம்பிகை நடுக்கம் (கம்பம்) கொண்டு சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்ட காரணத்தால் கோயில் 'ஏகம்பம்' எனப் பெயர் பெற்றது. ஆம்பரம்-மாமரம். இறைவன் ஒரு மாமரத்தின்கீழ் (ஏகம் ஆம்பரம்—ஏகாம்பரம்) எழுந்தருளியிருத்தலின், ஏகாம்பரநாதர் எனப் பெயர் பெற்றார் எனினுமாம்.

''முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்-விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது''

எனவரும் சுவைமிகுந்த காளமேகப் புலவர் பாடலில், ஏகாம்பரநாதர் 'ஒருமாவின் கீழர்' எனக் குறிப்பிடப்படுதல் அறிதற்குரியது.

## கச்சபேசம் :

'கச்சபேசம்' என்னும் தொடர், கச்சபம் ஈசம் என்னும் இருசொற்கள் கொண்டது. கச்சபம்-ஆமை. ஈசம்-கோயில், ஈசன் எழுந்தருளியிருப்பது. இச்சொல் ஈச்சரம், ஈச்சுரம் எனவும் வழங்கும். அமிர்தம் பெறுவதன் பொருட்டுத் தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது, திருமால் ஆமை வடிவம் கொண்டு மந்தர மலையைத் தாங்கினார். அந்நிலையிற் செருக்கு எய்திய திருமால் கடலைப் பெரிதும் கலக்கி உழக்கினார். அது கண்டு தேவர்களும் பிறரும் அஞ்சி நடுங்கி வருந்தி அலமந்தனர். அதுபோது

---

*"Of all the ancient places in South India there is none that can rival the ancient Kanchi in the variety, antiquity and importance of ancient monuments. Here are Jaina and Buddhist, Saiva and Vaishnava temples of the Pallava, Chola and later times, which ti would be difficult to imagine in any other place."

—K. N. Dikshit.

சிவபிரான் தோன்றி, ஆமை வடிவை மாய்த்து, அதன் செருக்கை ஒழித்து, அதன் ஓட்டினைத் தமது திருமார்பில் தரித்தார். தமது பிழையுணர்ந்து கழி விரக்கம் கொண்ட திருமால், தமது கச்சப (ஆமை) வடிவில் சிவபெருமானை வழி பட்ட திருக்கோயிலே 'கச்சபேசம்' எனப் பெயர் பெற்றது. கச்சப ஆலய ஈசுவரர் என்னும் சொற்றொடரே, கச்சாலீசுவரர் என மருவி வழங்கி வருகின்றது. 'கச்சாலை' என்னும் மரூஉச்சொல் 'கச்சபேசம்' என்ப தனைக் குறிக்க நெடுங்காலத்திற்கு முன் னரே வழங்கியிருக்கின்றது. கச்சாலீசுவர ரைப் பற்றிய குறிப்பு தமிழிலக்கியங்களில் எங்கேனும் வந்துள்ளதா? எனச் சிந்திக்கும் பொழுது, பின்வரும் இரண்டு பாடல்கள் நம் நினைவிற்கு வரும்.

''நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன்-தோலு
டையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க்கு இறை''

''சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால் சென்
றகன்ற
காலத்தால் ஆராத காதலால்-ஞாலத்தால்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாம்
கச்சிக்கச் சாலைக் கனி''

இவ்விரண்டு பாடல்களும் 'தண்டி யலங்காரம்' என்னும் அணி இலக்கண நூலின் மேற்கோட் செய்யுட்களாக வரு கின்றன. கயிலாசநாதர் கோயிலைக் கட்டு வித்த இராசசிம்மன் (கி. பி. 685-705) என்னும் பல்லவ மன்னனின், அவைக்களப் புலவராக விளங்கியிருந்த தண்டி என்னும் வடமொழிப் புலவர் இயற்றிய காவ்யா தர்சம் என்னும் வடமொழி நூலின்மொழி பெயர்ப்பே, தண்டியலங்காரம் எனும்நூல்! இதனைத் தமிழில் மொழி பெயர்த்து இயற் றியவர் அநபாய சோழனின் காலத்தவர் என்பதும், ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருந்தகையின் மாணவர் என்பதும், அந் நூலின் பாடல்களில் வரும் குறிப்புக்களைக் கொண்டு தெளியப்படுகின்றன. காஞ்சி புரத்தில் மிக முதன்மை வாய்ந்த திருக் கோயில்களுள் ஒன்றாகத் திகழும் கச்ச பேசம் பற்றியும், தேவாரத் திருப்பதிகங் கங்கள் பாடப்பெற்றிருத்தல் வேண்டும். அவைகள் இப்பொது கிடையாமற் போயி னமை, நம்மனோர் தவக்குறைவேயாகும். எனினும் இவ்விரண்டு பழம்பாடல்களும் கச்சாலீசுவரர் பெருமானை நாம்நினைந்து துதித்து உய்தற்குத் துணை புரிவனவாகும்.

''கச்சுற்றப் பார பயோதர முலையாள்முன்
கற்புத்தப் பாதுல கேழையும்
ஒக்கப்பெற் றாள்விளை யாடிய
கச்சிக்கச் சாலையினில் மேவிய பெருமாளே'

எனவரும் திருப்புகழ்ப் பாடலும், ஈண்டு நாம் கருதிஉணர்தற்குரியது.

**கதையும் கருத்தும் :**

கச்சபேசத்தில் துர்க்கை சாத்தன் சூரியன் வயிரவர் விநாயகர் ஆகிய ஐவரும் கூட, இறைவனை வழிபட்டு அருள்பெற்றுச் சிறப்புற்றனர். கச்சிக் கச்சபேசத்திற் போலவே, திருக்கச்சூர் என்னும் தலத்தி லும் திருமால் சிவபிரானை ஆமைவடிவில் வழிபட்டார். திருக்கச்சூர், இறைவன் சுந்தரர் பொருட்டுப் பிச்சை ஏற்று உண வளித்த தலம். அங்குள்ள கோயிலுக்கு 'ஆலக்கோயில்' என்றும், இறைவனுக்கு 'மலைமேல் மருந்தீசர்' என்றும் பெயர். தலபுராணக் கதைகள் இக்காலத்தில் ஒரு சிலருக்குப் புறக்கணிக்கத் தக்கன போலத் தோன்றலாம். எனினும் இத்தகைய கதைகள் எத்துணையோ பல நூற்றாண்டு களாக, நம் முன்னோர்களாற் சொல்லவும் கேட்கவும் சுவைக்கவும் பெற்று வழங்கி வருவன. இலக்கியம் வரலாறு சமுதாயம் பண்பாடு முதலிய துறைகளில் இன்னோ ரனைய கதைகள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. அவைகளை ஏற்ற பெற்றி போற்றுதல் நமக்குக் கடமையாகும்.*

இத்தல வரலாற்றுக் கதையில் வரும் திருமால், மால் (மயக்கம்) கொண்டு உல வும் நம்மை ஒத்த உயிர்களையே குறிப்ப தாகக் கொள்ளலாம். அவர்தம் ஆமை வடிவம் அறியாமையில் அழுந்தி வருந்தும் உயிர்களாகிய நம் இயல்பினைச் சுட்டு கின்றதெனலாம். ஆமையின் கால்கள் நான்கும், தலை ஒன்றும் ஆகிய ஐந்தும், உயிர்களின் ஐம்பொறிகளை யுணர்த்தும். ஆமை நீரும் நிலமும் ஆகிய ஈரிடத்தும் உலவும் தன்மையுடையது. உயிர்கள் நல்ல தனோடும் தீயதனோடும் தொடர்பு கொள் ளும் தன்மையினை, இது குறிக்கின்றது. ஆமையின் மந்தகதி, உயிர்களின் தெளி வற்ற மந்தத் தன்மையினைப் புலப்படுத் தும். திருநாவுக்கரசர் தம்மை ஓர் ஆமை யின் நிலைக்கு ஒப்பிட்டுக் கொள்ளுகின் றார்.

''வளைத்துநின் றைவர் கள்வர்
வந்தெனை நடுக்கம் செய்யத்
தளைத்துவைத் துலையை ஏற்றித்
தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற
ஆமைபோல் தெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றேன்
என்செய்வான் தோன்றி னேனே''

*"Indian mythology is richer, vaster, very beautiful and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these bright dreams and lovely fancies, and out of what gold mine of thought and imagination they dug them... Many of the problems of human life have a permanence and a touch of eternity about them, and hence the abiding interest in these ancient books... We can admire them and they become part of our mental heritage.''

—Jawaharlal Nehuru,
The Discovery of India.

என்பது திருநாவுக்கரசர் தேவாரம். முதலில் இன்பம் போலத் தோன்றி மயக்கிப் பின்னர்ப் பெருந்துன்பத்தில் அழுத்தி வருத்தும் உலகியல் நுகர்ச்சிகளில் உழலும் உயிர்களின் தன்மைக்கு, உலையை ஏற்றித் தழலெரி மடுத்தநீரின் இளஞ்சூட்டினை, முதலில் மகிழ்ந்து பின்னர்ச் சூடு ஏறஏறத் தாங்கொணாது பெரிதும் தளர்ந்து வருந்திமாயும் ஆமையினுடைய தெளிவின்மையினை, நாவுக்கரசர் உவமை கூறியிருத்தல் நனிமிகப் பொருந்துவதாகும். இஃது உயிர்களாகிய நம்மனோரின் அறியாமை நிலைக்கு ஏற்ற எடுத்துக்காட்டு. நாலடியார் (331) செய்யுளிலும் இக்கருத்து வந்துள்ளது. இனி, மெய்யுணர்வு எய்தத்தக்க உயிர்களின் மேதகுநிலைக்கும் ஆமையையே ஏற்ற உவமையாக,

''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து''

எனவரும் திருக்குறளில், ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்திருக்கும் திறமும் அறிந்து இன்புறற்பாலது.

**முடிவுரை :**

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றி, வையத்து வாழ்வாங்குவாழ்ந்து நாம் அனைவரும் உய்வதற்குச் சுந்தராம்பிகை சமேத கச்சபேசுவரப் பெருமான் திருவருள், நமக்குத் துணை புரிவதாக !

---

## நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

காவலிற் புலனை வைத்துக்
கலிதனைக் கடக்கப் பாய்ந்து,
நாவலிட் டுழிதரு கின்றோம்
நமன்தமர் தலைகள் மீதே,
மூவுல குண்டு மிழ்ந்த
முதல்வ! நின் நாமம் கற்ற,
ஆவலிப் புடைமை கண்டாய்
அரங்கமா நகரு ளானே!

பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமர ரேறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்,
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!

வேதநூற் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேனும்,
பாதியு முறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு,
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்,
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே!

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

## திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டு கொள்ளே

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடி னும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்கள் உத்தமனே.

உத்தம னத்த னுடையா
னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ
னென்ன மனநினைவில்
ஒத்த வொத்தன சொல்லிட
ஊரூர் திரிந்தெவரும்
தத்தம் மனத்தன பேசவெஞ்
ஞான்றுகொல் சாவதுவே.

—மாணிக்கவாசகர்.

# அறந்தரு நாவுக்கரசு

திரு. க. வெள்ளைவாரணனார்

மதுரை - காமராசர் பல்கலைக் கழகம்

அருள்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகள், திருநாவுக்கரசரால் இவ்வுலகத்தார்க்குளதாகிய பெருநலத்தினைக் குறித்துப் போற்றும் முறையில் அமைத்தது, 'அறந்தரு நாவுக்கரசு' என்னும் இத்தொடராகும். திருநாவுக்கரசர் பிறந்தருளும் பெருமை வாய்ந்தது திருமுனைப்பாடிநாடு. அந்நாட்டின் சிறப்பினை விளக்கப் போந்த சேக்கிழாரடிகள்,

''மறந்தருதீ நெறிமாற மணிகண்டர் வாய்மைநெறி
அறந்தருநா வுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள வுளதானால் நம்மளவோ பேருலகில்
சிறந்ததிரு முனைப்பாடித் திறம்பாடுஞ் சீர்ப்பாடு''

(பெரிய-திருநாவுக்.11)

என அதன் பெருஞ்சீர்த்தியினை உளமாரப் போற்றுகின்றார். ''பாவத்தினைத் தரும் தீய நெறிகள் அகன்றொழிய, அழகிய நீலமணிபோலும் மிடற்றினையுடைய சிவபெருமான் அருளிய மெய்ந்நெறியில் நின்று, மேற்கொள்ளுதற்குரிய அறநெறியினை உலகத்தார்க்குத் தந்தருளிய திருநாவுக்கரசரும், ஆலாலசுந்தரராகிய நம்பியாரூரரும், திருவவதாரஞ் செய்தருளுதற்குரிய பெருந்தவத்துடன் நிலைபெற்று தென்றால், பெரிய உலகின் கண்ணே சிறந்து விளங்கும் திருமுனைப்பாடி நாட்டின் புகழ்த் திறத்தினைச் சீர்பெறப் பாடிப் போற்றுந்திறம் நம்மனோர் அறிவின் எல்லையுட்பட்டு அடங்கும் அளவினதோ?'' என்பது மேற்காட்டிய செய்யுளின் பொருளாகும்.

அறத்தின் இயல்பு யாது? அதற்கு மாறான மறந்தரு தீநெறி என்றது எவற்றை? அந்நெறியினை மாற்றி வாய்மை நெறியில் நின்று திருநாவுக்கரசர் அறத்தினைக் குறித்துத் தந்த விளக்கம் யாது? என்பனவற்றை ஆராய்வதே இச்சிறிய கட்டுரையின் நோக்கமாகும்.

மக்கள் வாழ்க்கைக்கு உறுதியளிப்பனவாக உயர்ந்தோரால் உணர்த்தப்பெற்ற அறம் பொருள் இன்பம் என்னும் மும்முதற் பொருள்களுள், முதற்கண்ணதாகிய அறம் என்பது, ஏனைய பொருளும் இன்பமும் போல் இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டும் பயன்படுமளவில் நில்லாது. இம்மை மறுமை வீடு என்னும் மும்மை நலங்களையும் ஒருங்கே தருதலால், பொருள் இன்பம் என்னும் அவ்விரண்டினும் அறம் வலியுடையதுஎன்பதனைத் திருவள்ளுவர் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் நன்கு வலியுறுத்தியுள்ளார். ''சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும், அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல'' (புறம்-31) என வரும் புறநானூற்றுத் தொடர், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் அறமே வலியுடைய தெனவும், ஏனைப் பொருளும் இன்பமும் அறத்தின் துணை கொண்டே நிகழ்தல் வேண்டும் எனவும் அறிவுறுத்துவதாகும்.

சிறப்பாகிய வீடுபேற்றினையும், துறக்கம் முதலிய செல்வங்களையும் ஒருங்கே தரவல்லது அறம். அறத்தைக் காட்டிலும் மக்களுயிர்க்கு ஆக்கந்தருவது பிறிதொன்றில்லை. அத்தகைய அறத்தினை மயக்கத்தால் மறத்தலின் மிக்க கேடில்லை. எனவே அறமாகிய நல்வினையைத் தத்தமக்கு இயலும் திறத்தால் இடைவிடாது செய்தல் வேண்டும் என வற்புறுத்திய தெய்வப் புலவர், அறமாவது யாது என அதன் இயல்பினையும் இங்கு விளக்கியுள்ளார்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற''

என்பது அறத்தின் இயல்பு பற்றிய விளக்கங்களுள் ஒன்று. ''அறஞ்செய்வான் தன் மனத்தின்கண் குற்றமுடையன் அல்லனாகுக; அவ்வளவே அறமாவது; அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, வெறும் ஆரவாரத் தன்மைய'' என்பது மேற்குறித்த திருக்குறளின்பொருளாகும். மனத்தின்கண் குற்றமுடையனாகிய நிலையில், அம்மனத்தின் வழிப்பட்ட மொழியினாலும், மெய்யினாலும் நிகழ்வன குற்றந் தீர்ந்த நற்பயன்களைத் தரவல்ன அல்ல என்பதனை 'ஆகுல நீர பிற' என்ற தொடரால் ஆசிரியர் குறித்துள்ளமை காணலாம். 'மனத்தின் கண் மாசுநீங்குதலே அறம்' என அறத்

திற்கு இலக்கணம் கூறிய நிலையில், மனத்தின்கண் உள்ள மாசு என்பன யாவை? என்ற வினாவும் உடன் தோன்றுகிறது. அவ்வினாவுக்கு விடை கூறும் நிலையில் அமைந்தது

''அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்''

என்பதாகும். அழுக்காறு என்பது, பிறரது நல்வாழ்வு கண்டு பொறாத உள்ளத்தினராதல். அவா என்பது பொருள்கள் மேற் செல்கின்ற பற்றுள்ளம். வெகுளி என்பது பொறாமை அவா என்பவை காரணமாகப் பிறர்பாற் செல்லும் கோபம். இவை மூன்றும் மனத்தின்கண் நிகழும் குற்றங்கள். இன்னாச் சொல் என்றது வெகுளி காரணமாகத் தோன்றும் கடுஞ்சொல்லாகும். இங்ஙனம் மனத்தினும் மொழியினும் தோன்றும் நான்கு குற்றங்களையும் கடிந்து இடையறாது நிகழ்வது எதுவோ அதுவே அறமாம் என்பார், 'நான்கும் இழுக்கா இயன்றது அறம்' என்றார். எனவே இக்குற்றங்களுடன் கலந்து நிகழும் எதுவும் அறமாகாது என்பது அறியப்படும்.

இவ்விரண்டு குறள்களாலும் அறத்தின் இயல்பு குறித்துத் திருவள்ளுவர் கூறிய விளக்கம், அறத்தைப் பற்றிய பொது விளக்கமாகும். ஒருவர் தமதுள்ளத்திற் குற்றமற்ற நிலையிற் செய்வன அறமெனக் கொள்ளத்தக்கன என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளத்தக்கதாயினும், சில் வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராய் மக்கட்குலத்தார் தமது அறியாமைகாரணமாக யான் எனது என்னும் செருக்குடன் 'தாம் செய்வதே அறமாம்' என்று தவறாக எண்ணுதற்கு இடந்தரலாகாது என்று எண்ணிய திருவள்ளுவர், மக்களுள்ளத்தே மனமாசு நீங்கிய நிலையில் தோன்றும் அறவுணர்வுக்கெல்லாம் நிலைக்களமாக எல்லாம் வல்ல இறைவன் உண்மையைக் கடவுள் வாழ்த்தாகிய முதலதிகாரத்தில் தெளிவாகக் குறித்துள்ளார்.

உலகில் நிகழும் எல்லா அறங்களுக்கும் நிலைக்களமாகத் திகழ்வோன் பேரருளாளனாகிய இறைவன் ஒருவனே என்பதனை அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது 'அறவாழி யந்தணன்' என்ற தொடராகும். 'அறக்கடலாகிய அருளாளன்' என்பது இதன் பொருள். அறங்கள் அனைத்திற்கும் அருளே பற்றுக்கோடாதலின் அறமும் அருளுமாகிய இவ்விரண்டின் திருவுருவாகவும் இறைவன் திகழ்கின்றான் என்பார், அறவாழியன் என்னாது அறவாழி யந்தணன் என்றார். கடலேயனைய அறமும் அழகிய தண்ணளியாகிய பேரருளும் இறைவன் ஒருவனிடத்தன்றி ஏனைய மன்னுயிர்களிடத்தே முழுவதும் நிலைபெறுதல் இயலாது என்பதனைக் குறிப்பால் அறிவுறுத்தும் முறையில், 'அறவாழி யந்தணன்' என ஒருமையால் கூறியுள்ள நுட்பம் இங்குக் கூர்ந்துணரத் தகுவதாகும்.

அறங்கள் அனைத்திற்கும் நிலைக்களமாவான் இறைவனொருவனே என்பதனை அறவாழியந்தணன் என ஒருமையாற் குறித்த திருவள்ளுவர், இறைவனது திருவருளை எதிர்கொண்டு போற்றி, யான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களையும் நீத்த பெரியோர்களை 'இருமை வகை தெரிந்து ஈண்டு அறம்பூண்டார்' எனவும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அப்பெருமக்களை 'அந்தணர் என்போர் அறவோர்' எனவும் பன்மையாற் குறித்துள்ளமை, இங்குச் சிந்தித்து உணரத்தகுவதாகும்.

நல்லறங்கட்கெல்லாம் நிலைக்களமாக உள்ளவன் இறைவன் ஒருவனே என்றும், அவனது திருவருள் நெறியாகிய மெய்யான அருள்நெறியில் நிலைபெற்று ஒழுகுபவர்களே அறவோர் என்றும், திருவள்ளுவர் குறித்துள்ளமையால், அறத்திற்குப் பற்றுக்கோடாய் விளங்கும் இறைவனது திருவருள் வழிநின்று மாசற்ற தூய நன்னெஞ்சினராற் செய்யப் பெறுவதே சிறப்புடைய நல்லறமாகும் என்பது தெய்வப் புலவர் கருத்தாதல் உய்த்துணரப்படும். இக்கருத்து, 'நின்குணம் எதிர் கொண்டோர் அறங் கொண்டோர்' (பரிபாடல்-5-71) எனக் கடுவன் இளவெயினனார் என்னும் புலவர், முருகப்பெருமானை முன்னிலைப்படுத்துப் போற்றுந் தொடரில் அமைந்திருத்தல் காணலாம். 'இறைவனாகிய நினது திருவருட் பண்பினை எதிரேற்று அத்திருவருள் வழி ஒழுகுகின்றவர்களே அறத்தினைக் கொண்டோராவார்' என்பது, இத்தொடரின் பொருளாகும்.

இவ்வாறு தெய்வத்தின் திருவருளைத் துணையாகக் கொண்டு செய்யப்பெறுவதே நிலைத்த நல்லறமாகும் என்பது சிவநெறிச் செல்வர் கொள்கையாகும். தெய்வமுண்டென்னுந் தெளிவின்றி மக்களது மாசற்ற மன நலத்தையே துணையாகக் கொண்டு சமண பௌத்த சமயச் சான்றோர்கள் அறிவுறுத்திய அறங்கள், இன்நலமாகிய நல்லோரது கூட்டுறவினை யிழந்தபோது எல்லா அறங்களுக்கும் பற்றுக்கோடாகிய அறவாழி யந்தணனாகிய இறைவனது தொடர்பினை யிழந்து தத்தம் முழுப்பயன்களைத் தரும் வலியற்றனவாய்ச் சிதைந்தொழியும் என்பது சிவநெறிச் செல்வர் துணிபாகும்.

உலகத்தார் செய்யும் செயல்களின் நலந்தீங்குகளையெல்லாம் சான்றாக இருந்து கண்டு அவ்வவர் செய்திக்கு ஏற்ற பயன்களாகிய இன்ப துன்பங்களைஅருத்துபவன் இறைவனாகிய சிவன் ஆதலால், அம்முதல்வனை வழிபடுதலே நல்லதோர் அறமாகும். அவனையன்றிச் செய்வன வெல்லாம் வீண் செயலே. இறைவனின்

திருவருளைச் சிந்தித்து அவ்வருள் பணித்த வழியில் நின்று செய்யும் செயலே உண்மையான அறமாகும். ஆதலால் ஒன்றிலும் விருப்பில்லாதவனாக இருந்தும் மன்னுயிர்களிடத்தே வைத்த பெருங்கருணையால் அவ்வுயிர்கள் உய்தி பெறுதலில் விருப்பங்கொண்டுள்ள இறைவனது திருவடிப் பூசனையே இடைவிடாது செய்தற்குரியதாகும் என்பர் பெரியோர்.

''காண்பவன் சிவனே யானால்
அவனடிக் கன்பு செய்கை
மாண்பறம்; அரன்றன் பாதம்
மறந்துசெய் அறங்க ளெல்லாம்
வீண்செயல்; இறைவன் சொன்ன
விதிஅறம்; விருப்பொன் றில்லான்
பூண்டனன் வேண்டல் செய்யும்
பூசனை புரிந்து கொள்ளே''

(சித்தியார்-சுபக்.118)

எனவரும் அருணந்தி சிவாசாரியார் வாய்மொழி 'மணிகண்டர் வாய்மைநெறிஅறம்' என்ற பெரியபுராணத் தொடருக்கு அமைந்த விளக்கவுரையாகத் திகழ்தல் காணலாம்.

திருநாவுக்கரசராகிய மருள்நீக்கியார் நம்பர் அருளாமையினாற் சமண சமயஞ் சார்ந்து தருமசேனராதற்கு முன்னமே காவளர்த்தல், குளந்தோண்டுதல், நாவலர்க்கு வேண்டுவன நயந்தளித்தல் முதலாக யாவருக்கும் பயன்தரும் நல்லறங்கள் பல செய்துள்ளார் எனப் பெரிய புராணம் கூறும். ஆகவே அறஞ்செய்தற் பொருட்டு அவர் சமண சமயத்தைச் சார்ந்தார் எனக் கொள்ளுதற்கில்லை. அவர் சமண சமயத்தை நாடிச் செல்லுதற்குத் தூண்டுகோலாக அமைந்தது, நிலையாமையைப் பரக்கப் பேசி அறத்தினைச் செய்யத் தூண்டும் நிலையிற் சமணர்கள் கூறிய அறிவுரையே எனத் தெரிகிறது. இந்நுட்பம்,

''ஓது த்தாய்முன் அறவுரைகாட்டி
அமண ரொடே'' (4-99-1)

எனவரும் நாவுக்கரசர் வாய்மொழியால் நன்கு புலனாதல் காணலாம்.

எவ்வுயிர்க்கும் இன்னாசெய்யாமையாகிய சீவகாருணியமே சமணர்களது சிறந்த நல்லறவொழுக்கமாகும். அறம் என்பது மக்களின் உள்ளத்தில் உயிர்ப் பண்பாகிய அருளின் துணைகொண்டு முகிழ்த்துத் தோன்றும் நல்லுணர்வு என்ற அளவிலேயே சமணர் கூறும் அறவுரைகள் யாவும் அமைந்திருந்தன. அவ்வறவுரைகளில் ஈடுபட்ட மருள்நீக்கியார், இறைவனருளால் வந்த சூலைநோயினால் துன்புற்று வருந்திய நிலையில், தம் நோயினை நீக்க முற்பட்டு இயலாத நிலையில், தம்மைக் கைவிட்டுச் சென்ற சமண முனிவர்களது அறவுரையும் அருட்பண்பும் தம் துயர் தீர்க்கச் சிறிதும் பயன்படாமையினைக் கண்டு கொண்டார். தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயவால் தவநிலை மேற்கொண்ட தமக்கையார் திலகவதியார், 'கற்றைவேணியர் அருளே காணும் இது; கழலடைந்தோர் பற்றறுப்பார் தமைப் பணிந்து பணிசெய்வீர்' எனப் பணித்து, நின்மலன் பேரருள் நினைந்து அஞ்செழுத்தோதிக் கொடுத்த திருநீற்றினை யணிந்து சூலைநோய் தீர்ந்து பெருவாழ்வு பெற்ற நிலையில் திருநாவுக்கரசராகிய அப்பெருந்தகையார் எல்லா அறங்களுக்கும் மூலமாக அமைந்தது இறைவனது திருவருளே என்னும் உண்மையை உணர்ந்து கொண்டார். இறைவனது பொருள்சேர் புகழ்த்திறங்களை இன்னிசைத் தமிழ்ப்பாடல்களாற் பாடிப் போற்றுமுகமாக உலகவுயிர்களின் துயரங்களைத் துடைத்து 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என மனக்கவலையின்றி வாழும் நல்வாழ்வுக்கு வழியமைத்தருளினார்.

தெய்வ நம்பிக்கையில்லாத சமண பௌத்தர்களாகிய புறச்சமயத்தாரது அறவுணர்வு, உலக மக்கள் படும் அவலக் கவலைகளாகிய துன்பங்களைப் போக்க வல்ல ஆற்றலுடையதன்று என்பதனை,

''வெற்றரையுழல்வார் துவராடைய
வேடத்தாரவர்கள் உரைகொள்ளன்
மின்
மற்றவர் உலகின் அவலம் அவை மாற்ற
கில்லார்''

என ஆளுடையபிள்ளையார் உலகத்தார்க்கு அறிவுறுத்தியுள்ளமை காணலாம். புறச் சமயத்தார் கடைப்பிடித்தொழுகிய அறவுணர்வு, மக்கள் வாழ்க்கையிற் காணப்படும் பலவகை யிடர்களையும் நீக்கி, வையத்து வாழும் வாழ்க்கையின் முழுப் பயன்களையும் நல்கும் ஆற்றலுடையதன்று என்பதனை, இறைவரருளால் சமணந் துறந்து சைவ சமயத்தினை மேற்கொண்ட திருநாவுக்கரசர் நன்கு உணர்ந்தார். உயிர்கள் உள்ளத்தில் அவ்வவர் மனநிலைக்கேற்பக் காலந்தோறும் வெவ்வேறு நிலையில் முகிழ்த்துத் தோன்றும் அறவுணர்வுகள் எல்லாவற்றுக்கும், அவ்வுணர்வினைச் செயற்படுத்துதற்குச் சார்பாகிய அருளுக்கும், நிலைக்களமாகத் திகழ்வோன் இறைவன் ஒருவனே எனவும், அவனது திருவருளின் துணைகொண்டன்றி அறத்தினைக் கடைபோகச் செய்தல் இயலாது எனவும், இறைவனது திருவருளின் துணைகொண்டு அறஞ்செய்தலே நேரிய வழியெனவும் இறைவனருளால் உணரப்பெற்றார். தெய்வமுண்டென்னுந் தெளிவில்லாதார் அறஞ்செய்தற்குத் தாமே முதல்வர் என்னும்எண்ணத்துடன் செய்வன எத்தகைய நற்செயல்

களாயினும் எவ்வுயிர்க்கும் முதல்வனாகிய இறைவனது உண்மையினை யுடன்படாத நிலையிற் செய்யப்படும் அச்செயல்களில் 'இப்பொருள் என்னுடையது' 'இவ்வறத் தினைச் செய்தேன் யானே' என்னும் தற் போதமாகிய செருக்குத் தங்குதலால் அறத்திற்கு மாறாகப் பாவத்தையே தரும் தீயநெறியின்பாற் படுமெனக் கொண்டு அத்தகைய மறந்தரு தீநெறியினை அறவே மாற்றி இறைவனது வாய்மை நெறியின் பாற்பட்ட அறத்தினை உலகினர்க்கு அறி வுறுத்துதலைத் தமது தலையாய கடமை யாகக் கொண்டார் அப்பரடிகள்.

இவ்வாறு மறந்தரு தீநெறியினை அறவே மாற்றி இறைவனது திருவருள் வழி நின்று அறஞ்செய்யும் வண்ணம் தம்மு டைய மனத்தினைத் திருத்திப் பணி கொண்ட பேரருளாளன் சிவபெருமானே என்பதனையும், அம் முதல்வனால் தமக்கு அறிவுறுத்தப் பெற்ற அறநெறி 'தயாமூல தன்மம்' எனச் சிறப்பித்துரைக்கத்தக்க அருளறநெறி என்பதனையும்,

''சினந்திருத்துஞ் சிறுப்பெரியார் குண்டர் தங்கள்
செதுமதியார் தீவினைக்கே விழுந்தேன் தேடிப்
புனந்திருத்தும் பொல்லாத பிண்டிபேணும்
பொறியிலியேன் தனைப்பொருளா ஆண்டு கொண்டு
தனந்திருத்தும் அவர்திறத்தை ஒழியப் பாற்றித்
தயாமூல தன்மவழி எனக்கு நல்கி
மனந்திருத்தும் மழபாடி வயிரத் தூணே
என்றென்றே நான்அரற்றி நைகின்றேனே''

எனவரும் திருத்தாண்டகத்தில் உலகி னர்க்கு எடுத்துக் கூறியுள்ளார்.

தயாமூலதன்மம் என்னும் இச் சிறப் புடைய அறநெறியானது, சமணம்துறந்து சைவ சமயத்தை மேற்கொண்ட பின்னரே தமக்கும் கைவரப் பெற்றது என்பதனை,

''குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னைக்
குலவரையின் மடப்பாவை இடப்பா லானை,
மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக் கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையி னானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்ம மென்னுந்
தத்துவத்தின் வழிநின்று சார்ந்தோர்க் கெல்லாம்
நலங்கொடுக்கும் நம்பியை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்த வாறே''

எனவரும் திருப்பாடலில் அப்பரடிகள் தெளிவாகக் குறித்துள்ளமை காணலாம்.

அறவுரை கூறும் சமணர்களுடன் பழகிய மருள்நீக்கியார், அறத்தின் உண் மைத்தன்மை சமணர்களாகிய அவர் களுக்குத் தெரியாது என்பதனையும், அறத்தின் இயல்பினை உணரப்பெறாத அவர்களுடன் கூடி அரனடிகளைச் சிந்தி யாது வீணே காலத்தைக் கழித்துப் போக் கிய எளிமையினையும், இறைவனருளால் அமணர்களைத் துறந்து சிவனடியே சிந் திக்கப் பெறும் நல்வாழ்வு பெற்று உய்ந்த தனையும்,

''அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை
ஆரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்
மறந்தும் அரன் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ்வெல்லாம் வாளா மண் மேற்
பிறந்தநாள் நாளல்ல வாளா ஈசன்
பேர்பிதற்றிச் சீரடிமைத் திறத்து ளன்பு
சிறந்தெறும்பியூர் மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற் றேன் நானே''

எனவரும் திருப்பாடலில் உளங் கசிந்து கூறுகின்றார்.

அறக்கண் என்னத்தகும் அடிகள் ஆரூரரை இறைஞ்சிப் போற்றிய திருநாவுக் கரசர், இறைவன் திருவருள் வழி அடங்கி நின்று அழுக்காறு அவா வெகுளி முதலிய மனமாசு தவிர்ந்து ஒழுகும் உண்மையான அறத்தையே விரும்பி, நின் திருவடிகளைச் சாரப்பெற்றேன் எனத் தமது மனநிலை யினைப் புலப்படுத்தும் நிலையில்,

"அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச்
செற்றக் குரோதம் நீக்கிஉன்
திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம் மானே''

என ஆரூர்ப் பெருமானை உளங்கசிந்து போற்றுகின்றார்.

இறைவன் சார்பில்லாத நெறி மறந் தரு தீநெறியேயாம் என்றுணர்ந்த நாவுக் கரசர், தமக்குரிமையுடைய சிவநெறியை மறந்து அரனடி நினையாத அயல் நெறி யிற் சார்ந்தொழுகிய தமது செயல், நல் வினையாகிய அறமிருக்கவும் தீவினையா கிய மறத்தினை விலைக்குக் கொண்ட பேதைமைச் செயலாய் முடிந்ததென்ப தனை,

''ஆரூரர்தம் அருகிருக்கும் விதியின்றி
அறமிருக்க மறம்விலைக்குக்கொண்ட வாறே''

என்ற தொடரில் ஏசறவுடன் வெளிப் படுத்துகிறார். நல்லறங்களின் உருவாகத்

திகழ்பவன் இறைவன்என்பதனை'அறவன் எம்பிரான்' 'தருமமாகிய தத்துவன்' என்ற தொடர்களால் அறிவுறுத்திய அப் பரடிகள், உயிர்களின் உள்ளத்து எழுந்த ருளியிருந்து நன்றருளித் தீதகற்றும் இறைவனை,

''அறங்காட்டி அந்தணர்க்கன் றாலநீழல்
அறமருளிச் செய்த அரனார்''.

எனவும்,

''நன்மலர்மேல் உறையாநின்ற அறநெறி''

எனவும்,

''நன்றருளித் தீதகற்றும் நம்பிரான்''

எனவும் உளமுவந்து போற்றுகின்றார்.

இங்ஙனம் இறைவனது தன்மை யாகிய பேரருளுக்கும், அவனது உண்மை யுருவாகிய நல்லறத்திற்கும் உள்ள இயை பினை நன்குணர்ந்து அம் முதல்வனது திரு வருளின் வழியொழுகும் அறத்தின் இயல் பினை உலகத்தார்க்கு உள்ளவாறு உணர உணர்த்திய அருளாளர் திருநாவுக்கரசர் என்பதனை,

''மறந்தரு தீநெறிமாற மணிகண்டர் வாய்
மைநெறி
அறந்தரு நாவுக்கரசு''

எனவரும் தொடரில் அருண்மொழித் தேவர் சிறப்பாகக் குறித்துள்ளார். இக் குறிப்பு திருநாவுக்கரசர் திருமுறைகளில் திளைத்து அப்பெருந்தகையாரது வர லாற்றுண்மைகளை உய்த்துணர்ந்து கூறும் ஆசிரியரது திருவருட் புலமைக்குச்சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்துள்ளமை அறிந்து மகிழத்தகுவதாகும்.

# சித்தரும் திருக்கோயில்களும்

'மருதமலைச் சித்தர்' டாக்டர். கே. வி. கிரி, R.I.M.P.,

RAJU, Dy Commissioner H.Qrs (Retired) HR&CE Administration Dept

தன்னை அறிந்து தனிப் பெரும் கடவு ளின் தகுதியறிந்து, அக்கடவுள் அருள் பெற்ற ஆன்றோர் அடைவுடன் அருளிய ஞான நூல்களின் தத்துவமுணர்ந்து, வித் தக சிரேட்டர்களாக விளங்கிய பெரி யார்களே 'சித்தர்' எனப்படுவர். 'சித்தர்' என்ற சொல்லுக்கு 'சித்தி பெற்றவர்' என்றும், 'சித்தை உடையவர்' என்றும் பொருள் கூறுவர் பெரியோர். சிவத்தை நினைத்து அகக்கண்ணால் கண்டு கண்டு, அதாவது தியானித்துத் தரிசனம் செய்து ஆத்ம சக்தியை எழுப்பிச் சாதாரண இயற்கைக்கு எட்டாதது அல்லது கடந்த தான காரியங்களைச் செய்து தெளிவது சித்த மூர்த்திகளது செயலாகும். இச் செயலைத்தான் 'சித்து விளையாடுதல்' என்றும் கூறுவதுண்டு. சித்தம் திரிந்து சிவமயமானால், சித்திகளும்-சத்திகளும் தம்மையும், பிறரையும் உயர்த்தக் கூடிய வழியில் பயன்படுகிறது. யோகிகளின் சமாதி நிலையைச் சித்தர்களும் விரும்பி யடைவதால், 'யோக சமாதி யுகந்தவர் சித்தரே' என்று பாடல் பெறலாயினர். இவ்வகையில் உயர்ந்தோரே போகர், பாம்பாட்டி உட்படப் பின்வரும் 18 சித்தர் களாவர். இவர்கள் யோக சமாதியடைந்த இடங்கள் மகிமை பெற்று மங்காத புகழ் பெற்று, சிறந்த திருக்கோயில்களாக விளங்குகின்றன.

இன்றைக்குப் பாரெங்கும் புகழ் பெற்ற, பழனிமலையின் பிரபலம் உலக றிந்த ஒன்றாகும். அத்திருக்கோவிலில் யோக சமாதியடைந்தவரும் பழனித் திருத் தலக் குமரன் முருகவேளை நவபாசாணங் களால் உருவாக்கியவரும் போகர் என்ற சித்தரே. இப்படியே மருதமலையில் யோக சமாதியடைந்தவர் பாம்பாட்டிச் சித்தர்.

தில்லைச் சிதம்பரம் திருக்கோயிலில் சமாதி யடைந்தவர்-திருமூலர் என்னும் சித்தர். அழகர்மலைத் திருக்கோயிலில் சமாதி யடைந்தவர் இராமதேவர் எனும் சித்தர். திருவனந்தபுரம் திருக்கோயிலில் சமாதி யடைந்தவர் குதம்பமுனி என்னும் சித்த ராவார். இப்படியே அருணாசலத்தில் இடைக்காட்டுச் சித்தரும், வைத்தீஸ்வரத் திருக்கோயிலில் தன்வந்திரிச் சித்தரும், எட்டுக் குடியிலே - வான்மீகிச் சித்தரும், மாயூரத்தில் குதம்பைச் சித்தரும், திருவா ரூரில் கமலமுனிச் சித்தரும், திருப்பரங் குன்றத்தில் மச்சமுனிச் சித்தரும், திருப் பதியில் கொங்கண சித்தரும், இராமேசு வரத்தில் பதஞ்சலித் சித்தரும், காசியில் நந்திச் சித்தரும், கரூரில்-காங்கேயச் சித்த ரும், பொய்யூரில் - கோரக்கர் என்ற சித்த ரும், திருவரங்கத்தில்-சட்டமுனிச்சித்தரும், மதுரையிலே - சுந்தரானந்தச் சித்தரும் யோக சமாதியடைந்துள்ளனர்.

இப்படிப் பதினெட்டுச் சித்தர்களும், 'நாதனுடன் சமமாக நாங்களும் வாழ் வோம்' என்று யோக சமாதியடைந்த இடங்கள் திருப்பதி, பழனி, மதுரை, காசி, மருதமலை, திருவரங்கம், திருப்பரங்குன் றம், வைத்தீஸ்வரன் கோயில், எட்டுக்குடி அழகர் மலை, சிதம்பரம், ராமேஸ்வரம் போன்ற இவையனைத்தும் இன்றைக்குப் புகழ்மிக்க ஆலயங்களாக, புண்ணியத்தலங் களாக, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக விளங்கி வருவதைக் காண் கிறோம். அத்தகு தலங்களுக்குச் செல் வோர் சித்தர்களையும் வணங்கி, அவர்தம் கொள்கைகளையும் கடைப் பிடித்து, அங் குள்ள கடவுளை வணங்கிக்காரிய சித்தியும் மனஅமைதியும், மகிழ்ச்சியும் பெறுவோ மாக.

**

# கோவிந்தனும் கோதையும்

திரு. நா. வேணுகோபால் நாய்க்கர் B.A.,B.L.,
செயலாளர் : ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கம், சென்னை

ஆண்டாள் அருளிய திருப்பாவையில் இறைவனுடைய திருப்பெயர்களை ஓதுவதே சிறந்ததென உணர்ந்து, முதலில் பெரிய திருமந்திரமான நாராயணபதத்தை மார்கழித் திங்கள் (1), கீசுகீசு என்று எங்கும் (7), நோற்றுச் சுவர்க்கம் (10) பாசுரங்களில் மும்முறை ஓதினாள். ஆண்டாள் தான் திருவவதரித்தருளிய திருவில்லிபுத்தூரையே கோகுல-ஆயர்பாடியாகவும், அந்தத் திவ்விய தேசத்தில் அமைந்துள்ள சந்நிதியையே நந்தகோபர் திருமாளிகையாகவும், அத்திருக்கோயிலுள் சேவை சாதித்தருளும் வடபத்திரசயனப் பெருமாளையே கண்ணனாகவும், தன் உடன் வாழ்ந்த நங்கையர்களைச்சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்களாகவும்பாவித்துத், தன்னையும் இடைநடையும் இடைமுடியும் இடைப்பேச்சும் முடைநாற்றமும் திகழும் நப்பின்னைப் பிராட்டியாகப் பாவித்துக் கொண்டு, திருப்பாவை நோன்பை நோற்க முனைந்தாள்.

இதனால் பரமபதத்தில் சுவாமித்துவமும் சுவாதந்தரியமும் தோற்றஎழுந்தருளியுள்ள திருநாராயணனுடைய பெரிய பெயரால் இறைவனை அழைத்தது தகுதி அன்று என உணர்ந்தாள். இவ்விருள்தரு மாஞாலமான பூமண்டலத்தில் அல்லவா இறைவனுடைய கல்யாண குணங்கள் இருட்டறையில் விளக்குப் போலச் சுடர் விட்டுத் திகழ்கின்றன! முக்கியமான இறைவனுடைய திருக்குணங்களான பரிவும் (வாத்சல்யமும்), சமத்துவமும் (சௌசீல்யமும்), எளிமையும் (சௌலப்பியமும்) இக்கடல் சூழ்ந்த மண்ணுலகத்தில்தான் சீவாத்துமாக்களால் சேவிக்கக் கிடைக்கின்றன. பரமபதத்தில் யாருக்கு என்ன குறை உளது?

எனவே ஆயர்கள் நோற்கும் நோன்பை விவரிக்கும் திருப்பாவைப் பிரபந்தத்திலே எளிமையின் ஆழத்தைக் காட்டும் கோவிந்தநாம சங்கீர்த்தனத்திலே ஈடுபடலானாள். கோவிந்தனே, கற்றினம் மேய்த்த எந்தை. உயர்திணை அஃறிணை என்ற பேதமில்லாமல் கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான். காடுவாழ் சாதியும் ஆகப் பெற்றான். பற்றி உரலிடை ஆப்பும் உண்டான்! பூமண்டலத்தில், திருவாய்ப்பாடியில் வாழ்ந்து கொண்டு, பரமபதத்திலே பிரகாசிக்கும் பரத்துவக் குணத்தை வெளியிடுவதான நாராயண நாமத்தாலே இறைவனை விளித்தமையால், அவனுடன் கூடாதவர்கள் ஆனார்கள்.

தன்பரம் எளிமைக் குணத்தை வெளியிடவே இறைவனான மாயன், மன்னுவட மதுரை மைந்தனாகத் திருவவதரித்து, தூய பெருநீர் யமுனைத் துறைவனாகத் தளர் நடை நடந்து, ஆயர் குலத்தில் தோன்றும் அணிவிளக்காக விளங்கி, யசோதையால் தன் திருவயிற்றில் கண்ணிநுண் சிறுத்தாம்பினால்கட்டப்பண்ணித்,தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனாக அவதரித்து அருளினமையை உணர்ந்து கொண்டு, அவனுடன் கூடிப் பாடிமகிழவே கோவிந்த நாமத்தின் சங்கீர்த்தனத்தில் ஆண்டாள் ஈடுபடலானாள்.

கோவிந்தனுடைய சீர்மைக்குணம் எளிமையே. இது தன்னுடன் கூடாரையும் வெல்லும் சீர்மையுடையது. எனவே இறைவனுக்குத் திருப்பாவையின் முடிவிலே கோவிந்தபட்டாபிஷேகம் செய்தருள்கிறாளாம் கோதை.

நல்ல என் தோழி! அவர் நாகணைமிசை நம்பராயினும் (திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருள்பவராயினும்), செல்வர்--பெரியராயினும் (பரமபதநாதனாயினும்), அவர் கோவிந்தனாக அவதரித்தருளியமையினாலே, சிறுமானிடவரான நாமும் அவருடன் சமமாகக் கூடிக் குதூகலத்துடன் வாழலாம் என்பதைக் கொட்டி அடித்துப் பாடுகிறாள், பாவை நோன்பு இயற்றும் பாவை !

கூடாரை வெல்லும் சீர்க் — கோவிந்தா
உன்தன்னைப் பாடிப் பறைகொண்டு — கோவிந்தா
யாம் பெறும் சன்மானம் — கோவிந்தா
நாடு புகழும் — கோவிந்தா
பரிசினால் நன்றாக — கோவிந்தா
சூடகமே! தோள்வளையே! — கோவிந்தா
தோடே! செவிப்பூவே! — கோவிந்தா
பாடகமே என்றனைய — கோவிந்தா
பல்கலனும் யாமணிவோம் — கோவிந்தா
ஆடை உடுப்போம் — கோவிந்தா

அதன்பின்னே பால்சோறு கோவிந்தா
மூட நெய்பெய்து கோவிந்தா
முழங்கை வழிவார கோவிந்தா
கூடி இருந்து கோவிந்தா
குளிர்ந்தேலோர் எம்பாவாய் கோவிந்தா

**குவலயம் பரவியது கோவிந்த நாமம்.**

நாராயண நாம சங்கீர்த்தனத்தை மும்முறை முழங்கியருளியது போலவே, கோவிந்த நாம சங்கீர்த்தனத்தையும் மும்முறை கோஷித்தருள்கிறாள் திருப்பாவையிலே ஆண்டாள்! கோவிந்த நாமத்தைக் கொண்டாடும் இரண்டாவது பாசுரச் சிறப்பைச் சேவிப்போம். நாராயண நாமத்தைத் திருப்பாவைப் பாசுரங்களில் சேவித்தபோது விட்டுவிட்டுச் சேவித்தாள். ஆனால் கோவிந்த நாமத்தைப் பாசுரங்களில் சேவிக்க ஆரம்பித்து விடாமல் தொடர்ச்சியாகவே சேவிக்கின்றாள். இடையில் வேறு திருநாமத்திற்கு இடமில்லை.

'கூடாரை வெல்லும்' பாசுரத்திற்கு அடுத்தது 'கறவைகள்'. ஆண்டாள் வேயர் தங்கள் குலத்துதித்த விஷ்ணு சித்தர் மகளாகத் திருவவதரித்தும், வேட்கையுற்று மிக விரும்பியது ஆயர்பாடிக் கோபிகையின் அநுபவத்தையே! கோபிகையாக மாறிய ஆண்டாள், வசுதேவரின் மகனான வாசுதேவனிடம் தன் வாதத்தையும் விண்ணப்பத்தையும் விடுக்கின்றாள்! ஆனிரைகளை அழைத்துக் கொண்டு அவைகளுக்கு அளவுகடந்த தீனி கிடைக்கும் கானம் சேர்ந்து, அவைகள் உண்ணுவதைக் கண்டு களித்துக்கொண்டே தாமும் உண்ணும்; இப்படி இருதிறத்தாரும் உண்பதாலே உலகமே பாலும் தயிரும் மோரும் வெண்ணெயுமாக உண்ணச் செய்யும் புண்ணியம் படைத்தது ஆயர் குலம். அது மட்டுமா! கண்ணனாக அவதரித்துள்ள உன்னையுமல்லவா எங்கள் ஆயர் குலத்தில் பெற்றுள்ளோம்! இப்படி இரட்டிப்புப் புண்ணியம் செய்திருப்பினும் எங்கள் ஆய்க்குலத்திற்கு அறிவுக் குறைவு இருக்கத்தானே செய்கிறது! நீ எங்களுக்காக எங்களிடையே, எங்களுடன் ஆநிரை மேய்க்கும் கோவிந்தனாக எழுந்தருளியிருப்பதை அறிந்து, எங்கள் பிறவி பூர்த்தியானதைத் தெரிந்து கொள்ளாமல், பரமபதத்தில் எழுந்தருளியுள்ள நாராயணன் தான் எங்களுக்கு வாழ்வளிக்க வேணுமென்று அந்த நாராயணனை அல்லவா மும்முறையும் தொழுது விட்டோம். பரமபதத்தில் உள்ள நாராயணனுக்கு எளிமைக் குணம் ஏது! அதனால் அந்தப் பெயர் சிறுபேர்தானே. இந்த அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்தில் தோள் தீண்டியாகக் கலந்து பரிமாறும் எளிமைப் பெருங் குணமுடைய கோவிந்தனாகிய உன்னையல்லவா கொண்டாடி ;

''மாயச் சகடம் உதைத்து மருது இறுத்து
ஆயர்களோடு போய் ஆநிரைகாத்து அணி
வேயின் குழலூதி வித்தகனாய் நின்ற
ஆயர்கள் ஏற்றினைப் பாடிப்பற
ஆனிரை மேய்த்தானைப் பாடிப்பற''

என்று நாங்கள் பாடி மகிழ்தல் வேண்டும்.

நீ எங்களை உன் பரம கருணையாலே வந்து அடைந்தாய். நாங்களும் எங்கள் புண்ணியத்தாலே உன்னை அடைந்தோம். இனி எங்களுக்கு வேண்டுவது என்ன? உனக்கும்தான் வேண்டுவது என்ன? உன் உறவு எங்களுக்கும், எங்கள் உறவு உனக்கும் இனி ஒழிக்க ஒழியாததாகி நிலை பெற்று இருக்கவேணும் என்பதுவே! நாங்கள் உன் பெருமையை அறியாதவர்கள். இளம் பிள்ளைகள்தானே. எங்கள் அறிவுக் கண்களை மூடிக்கொண்டு சிறு பேரான நாராயண நாமத்தினால் உன்னை அழைத்துவிட்டோமே. பரமபதத்தில் உன் பரத்துவத்தைக் கண்டு நாங்கள் பயப்படுவோம் என அதை மறைத்துத் தானே நீ கோவிந்தனாக இங்கு எழுந்தருளியுள்ளாய். உன்னிடம் எந்தக் குறைதான் உள்ளது. இதனால் சினந்தருள வேண்டாம். சீறினாலும் அதுவும் அருள்தான். நீயே எங்களை ஆளும் தலைவன். நீயல்லவா எங்கள் விருப்பங்களை நிறைவேற்றியருள வேண்டும்.

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.

கறவைகள் பின் சென்று
கானஞ் சேர்ந்துண்போம்!
அறிவொன்றும் இல்லாத
ஆய்குலத்து, உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப்
புண்ணியம் யாமுடையோம்!
குறைவொன்று மில்லாத கோவிந்தா!
உன் தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு
ஒழிக்க ஒழியாது!
இறைவா! நீ தாராய் பறை
ஏலோர் எம்பாவாய்.

நாராயண நாமத்தை மூன்று முறை ஓதியதை உணர்ந்த வில்லிபுதுவை நகர் நம்பி விட்டுசித்தன் வியன் கோதை; அதற்குப் பரிகாரமாகக் கோவிந்த நாமத்தையும் மும்முறை ஓதியருள்கிறாள். தொடர்ச்சியாகவும் மூன்றாவது முறையாகவும் கோவிந்த நாமத்தைக் கோஷிக்கும் அடுத்த பாசுரத்தைச் சேவிப்போம்.

கோவிந்தனாகிய உன் பெருமையை உணர்ந்த இப்போதுதான் எங்கள் அக இருள் நீங்கிக் காலைப் போதாகிறது. அறிவு மலரும் அதிகாலைப் பொழுதாகிறது. ஞான அறிவு மலரும் அதிகாலைப் பொழுதாகிறது. இப்படியான காலைப்பொழுதிலே உன்னைச் சேவிக்கின்றோம். உன் பொற்பாத கமலங்களைப் போற்றியாம் செய்யும் விண்ணப்பத்தின் ஆழ்பொருளைக் கேட்டருள வேணும்!

கன்று மேய்த்து இனிது உகக்கும் எங்கள் ஆயர் குலத்தில் பிறந்தருளிய நீ, உன்

பிறப்பின் பலனை அடையும் வகையில் எங்களை உனக்குக் குற்றேவல் (கைங் கரியம்) புரியும் பாக்கியத்தையருளி அதை ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். இதுவே எங்கள் உள்ளம் நிரம்பிய உண்மை விருப் பம். வேறு பயன்களை உன்னிடம் நாங்கள் விரும்பவில்லை. கோவிந்தனே! எங்கள் விருப்பத்தைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இப்போது விண் ணப்பிக்கின்றோம். எந்தப் பிறவியிலும், ஈரேழு பிறவிகள் வரினும் அந்த ஏழ்ஏழ் பிறவிக்கும் உன்னுடன் கூடிய உறவு கொண்டவர்களாக, இந்த சீவாத்தும-பரமாத்ம உறவுடன் உனக்கு ஆட்செய்து உய்ய வேணும். ஏதோ இன்று மாத்திரம் சில தேவைகளுக்காக நாங்கள் வரவில்லை. ஆனிரைகளின் ஆசையை அறியும் கோவிந் தனே, எங்கள் இந்த ஆசையையும் அறிந்து நிறைவேற்றியருள வேணும்.

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்,
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில்பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!

எமது கடமை உனக்கு எப்பிறவி யிலும் குற்றேவல் செய்வதுதான். உனது கடமை எங்களுக்குப் பதினான்கு பிறவிகள் ஏற்படினும் எங்களைக் கைவிடாமல் இந்த பரமாத்ம-சீவாத்ம உறவை அனு பவித்துக் கொள்ள வேணும். கண்ண னிடம் ஆண்டாள் இந்த ஒப்பந்தத்தை-உடன்படிக்கையை - அவளுக்காக மட்டு மல்ல, அலைஅலையாகப் பிறவிதோறும் தோன்றும் சகல சீவாத்துமாக்களின் சார் பிலும் ஏற்படுத்தியருளியுள்ளாள். நாரா யண நாமத்தை மூன்று முறை ஓதி அதன் மூலம் அசித், சித், ஈஸ்வரன் என்ற சேர்க் கையில் அமைந்துள்ள தத்துவத் திரயக் கொள்கையினை உபதேசித்து அருளினாள். கோவிந்த நாமத்தையும் மும்முறை மேற் கொண்டவிதமாக ஓதியதும் ஒரு குறிக் கோளுடன்தான்!

பரிபூரணமாகத் திகழும் மதம் மூன்று அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். அவை (1) அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டிய மேலாம் பொருள் அல்லது தத்து வம். (2) அந்தத் தத்துவத்தை அடையும் வழி அல்லது இதம். (3) இத்தத்துவத்தை உணர்ந்து கொண்டு அதை அடையும் வழி யினைக் கைப்பிடித்தால் நாம் அடையும் பேறு அல்லது புருஷார்த்தம்.

வைஷ்ணவ மதத்தின் தத்துவம்-அடிப்படை, கோவிந்தனே! தத்துவத்து வம் அடையக்கூடியதாக இருக்கவேணும். இட்டமான பசுக்களை இனிது மருட்டி நீருட்டி, விட்டுக் கொண்டு விளையாட (பூமண்டலத்தில்) பிருந்தாவனம் வந்தரு ளிய கோவிந்தனது எளிமைக்கு ஈடு உண்டா. தன்னோடு சேராதவர்களை யும் தன்குண அழகாலே வென்று தன்னி டம் ஈடுபடுத்திக் கொள்ளும் சீர்மையுடை யவன். எனவே ''கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா!'' என்று தத்துவத்தை விளிக்கின்றாள்! விளக்குகின்றாள்.

கூடாதவர்களை வெல்ல முடியாதவ னாக இருப்பின் அவன் தத்துவமாகான். அவன் தத்துவத்தைத் தெரிந்து கொண்ட வர்கள் அவனுடன் கூடாமல் இருக்க இயலாது. கோவிந்தனுடைய கல்யாண குணங்களை ஈசுவர லட்சணத்தில் காண லாம். சிறந்த மதம் நிலைநாட்டும் தத்து வத்திற்கு மேலானதொரு தத்துவம் இருக்கக் கூடாது.

கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடை யீர்!
எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே!

என்பதைப் பொருளாகக் கொண்டு பெரி யாழ்வாரும் வல்லபதேவப் பாண்டியன் சபையிலே பரதத்துவ நிச்சயம் செய்தருளி னார். ''உயர்வற உயர் நலம் உடையவன் அவனே !''.

தத்துவம் இன்றி ஒன்றும் இயங்க முடியாது. தத்துவமே அனைத்திற்கும் அடிப்படை. நாராயணன் என்றால் (அச் சித் கூட்டங்களை), (அயனமாக) இயக்குபவனாக உள்ளான். இந்த நாரங் களுக்கும் அவனே புகலிடம். எனவே மேலான பொருள் (மேம்பொருள்) இறை வனே! கோவிந்தனாக அவதரித்த நாரா யணனே! நாராயணனே (பர) தத்துவம் என்பதை, 'கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா' (27) பாசுரத்தில் வெளியிட்ட ருளிய ஆண்டாள், இந்தத் தத்துவத்தை அடையும் வழியை-இதத்தை 'கற வைகள் பின் சென்று' (28) பாசுரத்தில் உபதேசித்தருள்கிறாள்.

இறைவனுடைய திருப்பெயர்களை ஓதுவதே, தத்துவமாகிய அவனை அடை வதற்கு மிகச் சுலபமான-மேலான வழிஎன் பதை உணர்த்தத் திருப்பாவையை நாம சங்கீர்த்தன மாலையாகவே புனைந்தருள் கிறாள், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி. நாமசங்கீர்த்தனமே இதம் என்பதை உப தேசிப்பதற்காகக் குறைவொன்றுமில்லாத கோவிந்தா! என்று கோவிந்த கோஷம் புரிகிறாள். குறைவு ஒன்றும் இல்லாத வனே தத்துவமாக இருக்க முடியும். கோவிந்த நாமத்துடன் வடவேங்கடத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைச் சேவித்தால் அவனே எவ்விதக் குறையு மற்றவன் என்பது ஒப்புக் கொள்ளப்படும். சென்னியோங்கு தண் திருவேங்கடத்தில் எழுந்தருளியுள்ளவன் தானே செடியாய

வல்வினைகள் தீர்ப்பவன். தெள்ளியார் வணங்கும் திருவேங்கடத்தில் தானே கோவிந்த கோஷம் எழுவதன் மூலம், நாம சங்கீர்த்தனமே இதம் என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்! பரம ஏழைக்கும், எவருக்கும் நாம சங்கீர்த்தனமே இதம், உய்யும்வழி! எளிய வழியும்கூட!

நாற்றத் துழாய் முடிநாராயணனே, நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியனாகிய தத்துவம் என்பதை உணர்ந்து, அவனை அடையும் வழி, மாமாயன், மாதவன், வைகுந்தன் என்று நாமம் பலவும் நவில்வதும், நல்வகையால் நமோநாராயணா என்று நாமம்பல பரவுவதுமே என்று காட்டி, அவனை அடைந்தால், கிடைக்கும் பேற்றை புருஷார்த்தத்தை அடுத்த சிற்றஞ்சிறு காலைப் பாசுரத்திலே (30) சிறக்கப் பேசுகின்றாள்! புருஷார்த்தம் என்பது சீவாத்துமா இம்மையிலும் மறுமையிலும் அடையும் மிக உயரிய பேறு நிலை, மகிழ்வு. அதற்கு ஈடாகவோ, உயர்வாகவோ வேறு நிலை கிடையாது.

எந்தப் பிறவியிலும் எத்தனைப் பிறவியிலும் பரமாத்துமாவிற்கு நாம் அடிமைப்பட்டவர்கள் என்ற இந்த உறவைக் கடைப்பிடித்து அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் குற்றேவல் செய்வது தான் பேறு. கைங்கரியமே புருஷார்த்தம். இதற்கு விளக்கம் அருள்கிறார் நம்மாழ்வார்.

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,
வழுவிலா அடிமைசெய்ய வேண்டும் நாம்,
தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து,
எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்
தைக்கே!
— திருவாய்மொழி 3.3.1

திருவேங்கடத்து எழில்கொள் சோதி என்பதால், அர்ச்சைநிலை குறிக்கப் பெறுகிறது. அதாவது நம் கண்ணிற்குப் புலப்படும் வகையில் பூமண்டலத்தில் 108 திவ்விய தேசங்களிலும், ஏனைய திருக்கோயில்களிலும், நம் இல்லங்களிலும் எழுந்தருளியுள்ள திருவுருவநிலை.

இம்மையிலே பெறும் பேற்றைப் பெரியாழ்வார் திருப்பல்லாண்டு 11-வது பாசுரத்திலே திருக்கோட்டியூரில் எழுந்தருளியுள்ள அபிமானதுங்கன் என்ற பக்தரை உதாரணமாக வைத்துக் காட்டுகிறார். அபிமானதுங்கனைப் போல நாராயணனுக்குப் பழ அடிமை புரிவதே பேறு. (பிறவிதோறும் கைங்கரியம் புரியும் பாக்கியம்) என வெளியிட்டுக் கொள்வதுடன், இப்பேற்றை அடைந்தது நாம சங்கீர்த்தனமாகிய வழியாலே என்பதையும் வெளியிடுகிறார்!

அல்வழக் கொன்றுமில் லாஅணி கோட்டியர்
கோன், அபிமானதுங்கன்
செல்வனைப் போலத் திருமாலே! நானும்
உனக்குப் பழவடியேன்!
நல்வகையால் நமோநாராயணா வென்று
நாமம்பல பரவிப்
பல்வகையாலும் பவித்திரனே! உன்னைப்
பல்லாண்டு கூறுவனே!

மறுமையிலே, பரமபதத்தில் சீவாத்துமா தத்துவமாகிய நாராயணனை அடைந்து பெறும்பேற்றை அடுத்த பாசுரத்தில் வெளியிடுகிறார் வில்லிபுத்தூர் விஷ்ணுசித்தர். பவித்திரனைப் பரமேட்டியை, சார்ங்கமென்னும் வில்லாண்டான் தன்னை நாமசங்கீர்த்தனத்தை வழியர்கள் கொண்டு பரமபதநாதனை அடைந்தவர்கள். அங்கும் பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து (குற்றேவல் புரிந்து) ஏத்துவர் பல்லாண்டே!

பல்லாண் டென்று பவித்திர னைப்பர
மேட்டியை, சார்ங்க மென்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர்
விட்டுசித்தன் விரும்பிய சொல்,
நல்லாண் டென்று நவின்றுரைப் பார்நமோ
நாராய ணாய வென்று,
பல்லாண் டும்பர மாத்மனைச் சூழ்ந்திருந்து
ஏத்துவர் பல்லாண்டே!

வைணவ மதத்தின் தத்துவம் நாராயணன் என்றும், இதம் அவனுடைய திருநாம சங்கீர்த்தனம் என்றும், புருஷார்த்தம் அவன் திருவடியில் குற்றேவல் கைங்கரியம் புரிவதுதான் என்றும், திருப்பாவையில் கோவிந்த கோஷமுடைய மூன்று தொடர்ந்த பாசுரங்களாலே உபதேசித்தருளிய அன்னவயல் புதுவை ஆண்டாளின் தூய நற்பாதம் துணை நமக்கே!

# ஓட்டைக் குடம்

'வாகீச கலாநிதி'

திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ.

உண்மையான அமுதக்கடல் இன்னது என்பதை மணிவாசகர் அறிந்து கொண்டார். தேவர்கள் உண்ட அமுதம் உண்மையான அமுதம் அன்று. அமுதம் என்பது அமிர்தம் என்பதன் திரிபு. தன்னை உண்டாருக்குச் சாவாமையை உண்டாக்குவது அமுதம். தேவர்கள் அமுதத்தை உண்டாலும் அவர்கள் சாவாமல் சிரஞ்சீவியாக இருப்பதில்லை. அவரவர்களுக்கு வரையறுத்த ஆயுள் முழுவதும் வாழ்ந்து பின்பு இறந்து போகிறார்கள். "நூறு கோடி பிரமர்கள் நுங்கினார்'' என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். அமுதத்தை உண்ணுவதற்கு முன்பு தேவர்கள் வெவ்வேறு காலங்களில் இறந்து போனார்கள். அமுதம் உண்ட பிறகு அவரவர்களுடைய அளவுக்கு ஏற்றபடி நூறு ஆண்டுகள் வாழ்ந்தார்கள். ஆகவே அவர்கள் உண்ட அமுதம் சாவாமையைத் தருவது என்று சொல்ல இயலாது.

''விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்கு
வாய்''

என்பது சிலப்பதிகாரம்.

உண்மையான அமுதம் நிரம்பிய கடலைப் பற்றி அவர் உணர்ந்தார். அதைத் தம்மிடத்தில் உள்ள குடத்தில் நிரப்பிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஆனால் அவரிடம் இருந்த குடமோ ஓட்டைக் குடம். ஐந்து ஓட்டைகள் உள்ள அந்தக் குடத்தில் சிறிதளவு தண்ணீரைக்கூடச் சேமித்து வைக்க முடியாது. அதை முழுவதும் அமுதத்தால் நிரப்ப வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது நடக்கிற காரியமா? இருந்தாலும் அவருக்குக் குடம் நிறைய அமுதத்தை நிரப்ப வேண்டும் என்ற ஆசை மீதூர்ந்து வந்தது. என்ன செய்யலாம் என்று பார்த்தார். பலரிடம் வழியைக் கேட்டார். ''குடத்திலுள்ள ஓட்டைகளை அடைத்துவிட்டால் உங்கள் விருப்பம் கைகூடுமே'' என்று சிலர் சொன்னார்கள். சொல்லுவது எளிதாக இருந்தாலும் அதைச் செய்வது மிகவும் அரிதாக இருந்தது. எளிதிலே அடைபடும் ஓட்டைகள் அல்ல அவை. முயன்று பார்த்தார். எந்த ஓட்டையையும் அடைக்க முடியவில்லை. ஓட்டைக் குடம் ஓட்டைக் குடமாகவே இருந்தது. அவ்வளவு முயன்றும் அடைபடாத குடத்தைக் கண்டு வருந்தினார். ஆனாலும் அவர் ஆசை குறையவில்லை. எப்படியாவது குடத்தில் அமுதத்தை நிரப்ப வேண்டும் என்ற விருப்பம் மிக மிக முறுகி எழுந்தது. பொருமினார். புலம்பினார்; அழுது கரைந்தார். பிறகு அந்த அற்புதம் நிகழ்ந்தது.

ஓட்டைக் குடம் ஓட்டைக்குடமாகவே இருக்க, அதில் அமுதம் நிரம்பிவிட்டது. குடத்தை அடைப்பதற்கு முயற்சிகள் செய்து பலனில்லை என்று அறிந்து வேசாறி நின்ற அவருக்கு, இந்த அற்புதம் சொல்ல வொண்ணாத இன்பத்தையும் வியப்பையும் உண்டாக்கியது. இந்த அற்புதத்தை நிகழ்த்தியவன் சிவபெருமான். அவனே அமுதக்கடல். மாணிக்கவாசகரிடத்தில் இந்த அற்புதத்தை நிகழ்த்தினான்.

''கண்ணார் அமுதக் கடலே போற்றி''

என்று அவர் பாடியிருக்கிறார். தன்பால் இணைந்த பொருள்களை மாயாமல் வைக்கும் பெருங்கருணையாளன் சிவபெருமான். தன்னை உண்டவர்களை மாய்த்துத் தானும் மாயும் இயல்புள்ள ஆலகால நஞ்சை இறைவன் உண்டான். அதனால் அவனுக்கு எந்த ஊறும் நேரவில்லை. அது பெரிய வியப்பன்று. அவன் உண்ட நஞ்சும் அவனுடைய திருக்கழுத்தில் சிரஞ்சீவியாக நின்று நிலவுகிறது. இதனால் நஞ்சையும் வாழ வைக்கும் அமுதம் இறைவன்தான் என்பது புலனாகும். இதனை உணர்ந்தவர் மாணிக்கவாசகர்.

அவரிடம் இருந்த குடம் மனம். ஐந்து பொறிகளின் வழியே எண்ணங்களைச் செலுத்தி, ஆசைவலையை விரிக்கும் தன்மையை உடையது மனம். மனம் என்னும் குடத்தில் ஐந்து பொறிகளாகியஓட்டைகள் இருக்கின்றன. மனத்தில் எதை வைத்தாலும் தங்குவதில்லை. ஒருமுகப்பட்டு நிற்கும் திறம் மனத்துக்கு இல்லாமையால் எதையும் தொடர்ந்து பற்றிக்கொண்டு அமையும் தகுதி அதற்கு இல்லை. ஐந்து இந்திரியங்களின் வழியாகச் செல்லும் மன ஓட்டத்தை நிறுத்தினால் உள்ளத்தே ஒருமைப்பாடு உண்டாகும். இது மிகவும் அரிய காரியம். ஆதலால் அடைக்கமுடியாத ஓட்டைக் குடம்போல மனம் இருக்கிறது.

மாணிக்கவாசகர் தம்முடைய மனத்தில் இறைவனை நிறுத்தப் பார்த்தார்.

அமுதக் கடலான இறைவனை ஓட்டைக் குடமான மனத்தில் நிறுத்த இயலாது என்பதை உணர்ந்து வருந்தினார். பொறிகளை அடக்கி மனத்தை நல்ல குடமாக்கி அமுதக்கடலைப் பூரிக்க முயன்றும் முடியவில்லை. இறைவனிடம் முறையிட்டுக் கொண்டார். அவன் அற்புதமான நிகழ்ச்சியை உண்டாக்கினான்.

''நீ ஓட்டைக் குடத்திலுள்ள ஓட்டைகளை அடைத்துச் சிரமப்பட வேண்டாம். குடத்தில் அமுதத்தை இட்டு நிரப்ப முடியாது'' என்று சொல்லி, அந்த ஓட்டைக் குடத்தை அமுதக்கடலிலே அமிழ்த்திக் கொண்டான். குடத்தில் அமுதத்தைப் பெய்யாமல் அமுதக்கடலில் குடத்தைப் போட்டுவிட்டான். அதில் இருந்த ஓட்டைகளின் வழியே அமுதம் உள்ளே புகுந்தது. குடம் அமுதத்தால் நிரம்பியது. எந்த ஓட்டைகளின் வழியே உள்ளே இடும் அமுதம் புறத்தே ஒழுகி விடும் என்று அஞ்சினாரோ, அந்த ஓட்டைகளின் வழியே இப்போது அமுதம் உள்ளே புகுந்து நிரம்பி விட்டது. ஆண்டவன் குடத்தில் அமுதத்தை இடுவதற்கு மாறாக அமுதத்தில் குடத்தை இட்டான். துளைகளின் வழியே வெளியே போகும் போக்கின்றி உள்ளே புகும் போக்கே அமைந்தது. இந்த அதிசயத்தை மணிவாசகர் சொல்கிறார்.

இதுவரையில் ஐந்து இந்திரியங்களின் வாயிலாக மனம் உலகப் பொருள்களை அவாவி அநுபவித்து வந்தது. புறத்திலே ஓடி உலவி நிலையாமல் இருந்தது. இறைவனுடைய திருவருள் பெற்ற பிறகு அந்தப் பொறிகள் உண்முகமாகத் திரும்பின. புறப்பொருள்களை எல்லாம் நாடிச் சென்று தடுமாறின போக்கு மாறி, உண்முகத்தே சென்று இறைவனின் அருளில் ஈடுபடலாயின.

முன்பெல்லாம் அவருடைய சிந்தை உலகப் பொருளைப் பற்றியே சிந்தித்தது. அதனால் ஒருகாலைக்கு ஒருகால் ஆசை மிகுதியாகி வந்தது. அந்த ஆசைக்கு எல்லையே இல்லை என்று தோன்றியது. சிந்தையின் வெளிப்பயணம் முடிவிடம் காணாமல் விரிந்து கொண்டே வந்தது. அதனால் உண்டான துன்பங்களுக்கு அளவு இல்லை. இப்போதோ சிந்தனையின் வெளிப்பிரயயாணம் மாறி உட்பிரயாணம் ஆகிவிட்டது. இறைவன் சிந்தனையைத் தனக்கு ஆக்கிக் கொண்டான்.

அவ்வாறே புறப்பொருள்களில் புக விட்டுத் துன்பத்தை அடைந்த இரண்டு கண்களையும் தன்னுடைய இரண்டு திருவடி மலர்களைக் காணும்படிச் செய்தான். உலகப் பொருள்களைக் கண்டு கண்டு வெம்மையை அடைந்திருந்த அந்தக் கண்கள் இப்போது இறைவனுடைய தாமரைத் தாள்களில் படிந்து குளிர்ச்சியை அடைந்தன. இதற்கு முன் யார் யாரையோ வணங்கியும், செயல் முற்றுப் பெறாமையால் தோல்வியுற்றும், வளைந்த தலை, இப்போது இறைவனுடைய திருத்தாளை நோக்கி வணங்கியது. நம்முடைய சொல்லில் உண்டாகும் குற்றங்கள் நான்கு என்று சொல்வார்கள். பொய், வன்சொல், பயனில் சொல், புறங்கூறுதல் ஆகியவை அவை. இவற்றிலே ஈடுபட்டு மேலும் மேலும் பிறவிப் பிணிக்கு வழி செய்து வந்த பிணிவாக்காக இருந்தது வாய்மொழி. இப்போது அது மாறி இறைவனைப் பற்றிய புகழைக் கூறும் மணிவாக்காகி விட்டது. பொறிகள் யாவும் புறநோக்கிலே சென்று கொண்டிருந்த போக்கு மாறி விட்டது. அவை தொழிற்படாமல் சும்மா இருந்தால் மனம் அடங்கும் என்று சிலர் கூறுவார்கள். இங்கோ அப்படியில்லை. அவை தத்தமக்குரிய தொழில்களைச் செய்து வந்தன, மடைமாறி இயங்கின. புறப்போக்கு மாறி உண்முகப் போக்கில் ஈடுபட்டன. இத்தகைய அமைப்பை இறைவனே செய்தான். புறத்தில் பொறிகளைச் செலுத்தியதனால் ஆசை நிறைவேறவில்லை. வயிற்றைப் போலப் பொறிகளும் என்றும் தூராக் குழிகளாய் இருந்தன. இப்போது அவை நிரம்பின. எல்லாம் இறை மயமாக நின்று அமைதி பெற்றன. அமுதக்கடல் உள்ளே நிறைந்த பிறகு துளைகளுக்கு வேலை இல்லாமல் ஒழிந்தது. இதை மணிவாசகர் சொல்கிறார் :

''சிந்தனைநின் தனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள்ஆர
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே, மலையே, நின்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனையமேனித்
தனிச்சுடரே, இரண்டுமிலித் தனியனேற்கே

ஓட்டைக்குடத்தின் உள்ளே புகுந்த அமுதக்கடலைப் போல, ஐம்புலன்களும் ஆர இறைவன் உள்ளே புகுந்தான். தன்னையே கொடுத்துவிட்டான். அவனுடைய வடிவம் செக்கச் செவேலென்று இருப்பது, தாமரைக்காடு பூத்தாற் போலே எழில் நிரம்பி விளங்குவது. அந்த மேனியில் ஒளிவீசுகிறது. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சிவபரஞ்சுடர் இந்த அற்புதத்தை நிகழ்த்தியது. இந்திரஜால மகேந்திர ஜால வித்தைகள் இதற்குச் சமம் ஆகா. இறைவன் செய்த விச்சை அல்லது வித்தை அவன் ஒருவனால்தான் செய்ய முடியும். இம்மைக்கு உறுதிபயக்கும் செயல்களையும் செய்யாமல், இருவகைப் பயன்களையும் இழந்து நின்ற தமக்கு, இத்தகைய பேரின்ப அநுபவத்தை இறைவன் அருள் செய்தான்என்று வியக்கிறார் மணிவாசகர். இப்போது அவருடைய மனம் இறைவன் மயமாக நிற்கிறது.

***

# அமுதலிங்கேசுவரர் பெருமை

கவிஞர் திரு. காசி, எம். ஏ., பி. டி.,
அருப்புக்கோட்டை

பாண்டிய நாட்டின் மையத்திலுள்ள அருப்புக் கோட்டை நகரின் மையப் பகுதி, பண்டுதொட்டுத் திருநல்லூர் என்னும் பெயர் பெற்றுத் திகழ்கிறது. இத் திருநல்லூர்ப் பகுதியில்தான், அருள்மிகு அமுதலிங்கேசுவரர் ஆலயம் அமைந்துள்ளது. மதுரை செல்லும் சாலையின் மேற்புறமாக, உயரமான பகுதியில் எடுப்பான தோற்றத்துடன் இவ்வாலயம் அமைந்துள்ளது.

18-ஆம் நூற்றாண்டிற்கு முன் சாதாரண நிலையில் வில்வமரத்தடியில் அமர்ந்திருந்த அமுதலிங்கேசுவரர், இவ்வூர்ப் பெரியவர் திரு. முத்துசாமி என்பவர் கனவில் தோன்றி, திருப்பணி செய்வதற்கான அருளினை வழங்க, அதன் காரணமாக நாடார் குல மக்களால் இவ்வாலயம் அமைக்கப் பெற்றது. 24-4-1907இல் ஆலயத்தின் கும்பாபிஷேக விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. உடுமலை முத்துசாமிக் கவிராயராலும், சென்னை சங்கலிங்கக் கவிராயராலும் பாடல் பெற்ற திருத்தலமாகும்.

தென்னாட்டிலுள்ள சிவத்தலங்களில் பெரும்பாலும் விஷ்ணுவைக் காண இயலாது. அமுதலிங்கேசுவரர் ஆலயத்தில் விஷ்ணுவையும் கண்டு அருள் பெறும் அரிய வாய்ப்பை நாம் பெறலாம். அமுத லிங்கேசுவரரைப் பூசித்துச் சங்கும் சக்கரமும் பெற்ற வரதராசப் பெருமாள், தம் தேவியராகிய சீதேவி பூதேவித் தாயார்களுடன் காட்சியளிக்கும் எடுப்பான ஆலயத்தையும் இங்குக் காண்கின்றோம்.

அமுதலிங்கேசுவரர் ஆலயத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால், அதன் நான்கு பக்கவாயில்களின் உட்புறப் பார்வையிலேயே, கடவுளர்களின் திருக்கோலத்தை நாம் கண்டு வியக்கும் அளவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. நடராசப் பெருமான் கால்மாறி நடனமாடும் காட்சி வரலாற்றுப் புகழ்பெற்றதாகும். பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க, நடராசப் பெருமான் வலதுகால் தூக்கி ஆடும் நிலையை மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலும், அருப்புக் கோட்டை அமுதலிங்கேசுவரர் ஆலயத்திலும் மட்டுமே நாம் காணும் பேறு பெறுகின்றோம்.

கஜமுகாசுரனைச் சம்மாரம் செய்ய அமுதலிங்கேசுவரரையும், அமுதவல்லியையும் வழிபட்ட மிகப்பெரிய உருவத்தையுடைய அனவரதசெல்வ விநாயகரைத் தமிழகத்திலேயே இவ்வாலயத்தில் காணும் பேறு நமக்குக் கிட்டுகிறது. வலம்புரி விநாயகரின் திருவுருவத்தை நாம் காணும் பேற்றையும், இவ்வாலயத்தில் பெறுகிறோம். மாம்பழம் தனக்குக் கிட்டவில்லை என்று முருகன், அம்மையப்பரிடம் கோபம் கொண்டு கையில் தடியேந்தி ஆண்டிக் கோலத்துடன் இவ்வாலயத்திலும் நிற்கும் காட்சியைக் கண்டு நாம் பேருவகைஅடைகிறோம்.

அதே முருகன், சூரசம்மாரத்திற்குப் பின்பு தெய்வயானையையும், வள்ளியையும் மணந்து, இருதேவியர்களோடு வந்து அமுதலிங்கேசுவரர், அமுதவல்லியம்மை இருவரையும் வணங்கிக் கோபம் தீர்ந்த வண்ணம், செல்வமுத்துக்குமரனாகக் காட்சியளிப்பதையும் இவ்வாலயத்தில் காணலாம்.

தேவி ஜானகியைத் தேடிச் சென்ற ஆஞ்சநேயர் தன் முயற்சி வெற்றியளிக்க வேண்டுமென்று, அமுதலிங்கேசுவரர், அமுதவல்லியம்மன், வரதராசப் பெருமாள் மூவரையும் வணங்கி வழிபட்டுப் பின் வெற்றி கிட்டியதால், இவ்வாலயத்தில் வந்து வடக்கு நோக்கி நெடிய திருவுருவில் காட்சியளிக்கிறார். தமிழகத்திலேயே அமுதலிங்கம் என்னும் பெயரையுடையதாக, நாடார் குலமக்களால் அமைக்கப்பட்ட சிவத்தலம் இது ஒன்றேயாகும். ஆதிபகவன் அமுதலிங்கேசுவரர் என்பதை இவ்வாலயத் தலவரலாற்று நூல் எடுத்தியம்புகிறது.

—oOo—

# பழந்தமிழ் நாட்டுக் கற்கோயில்கள்

[பேராசிரியர் திரு. டாக்டர் மெ. சுந்தரம், M.A., M.Litt., Ph.D.,]

மாநிலக் கல்லூரி, சென்னை.

தமிழ்நாட்டுக் கோயில்கள் காலந் தோறும் எவ்வாறு வளர்ந்தன என்பதை ஆராய்தல் பயன் தருவதாகும். தென்னாட்டில் முதன்முதலாக ஆலயங்களைக் கல்லால் அமைத்த பெருமை, பல்லவர்களைச் சார்ந்ததாகும். நான்காம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை உள்ள காலம், அவர்கள் அரசு செலுத்திய காலமாகும் இதனை ஒரு பொற்காலம் என்றே கருதுதல் அமையும். மற்ற கலைகளும் புத்துயிர் பெற்றன. இப் பண்புகள் பெரும்பாலும் அவர்கள் வளர்த்த கோயில்களில் இப்போதும் சிறந்து காணப்படுகின்றன.

அப்பரம்பரையில் மகேந்திரவர்மன் என்ற பல்லவப் பேரரசன், மலைகளைக் குடைந்து என்றும் அழியாத தெய்வத்திற்கு, அழிவு பெறக்கூடாத மலையாலேயே குகைக் கோயில்களை எடுத்தான். மாமண்டூர் என்ற ஊரில் எடுப்பித்தது அவனது முதற்கோயில். அதில் விசித்திர சித்தன் (மகேந்திரவர்மன்) பிரமாவிற்கும், ஈசுவரனுக்கும், விஷ்ணுவிற்கும், செங்கல், மரம், சாந்து, உலோகம் முதலியவை உபயோகப்படுத்தாமல், ஒரு கோயிலைக் கட்டுவித்தான் என்ற கல்வெட்டு காணப்படுகிறது. இவ்வாறாக அவனால் அமைக்கப்பட்ட கோயில்கள் யாவும் மலைக்குகைக் கோயில்களே. இவை திரிசிராமலை, வல்லம், மகேந்திரபதி, தளவானூர், சீயமங்கலம், சித்தன்னவாசல், பல்லாவரம் (பல்லவபுரம்) முதலிய இடங்களிலுள்ளன. சிற்ப ஆராய்ச்சியாளர் பல்லவர் காலத்துச் சிற்ப முறைகளை நான்கு பிரிவுகளாக வகுத்துள்ளனர். இதன் காலம் (.கி.பி. 600-625) ஆகும். மற்றவை மாமல்ல முறை (கி. பி. 625-674). இராசசிம்ம முறை (கி. பி. 674-800), அபராசிதமுறை (கி. பி. 800) எனப்படும்.

## மாமல்லபுரச் சிற்பமுறை :

மாமல்லனாகிய முதலாவது நரசிம்ம வர்மன் எடுப்பித்த ஆலயங்களும், ஒற்றைக் கல்லால் ஆகியவையே. இவனே மகாபலிபுரத்துப் பஞ்சரதக் கற்கோயில்களை உருவாக்கிய பேரரசன். இவன் மலையைக் குடைந்து குகைக் கோயில்களைக் கண்டதோடு அமையாது, மலைகளையே பெயர்த்துச் செதுக்கிப் பிரமாண்டமான கோயில்களையும், கோபுரங்களையும் சிருஷ்டி செய்வித்தான். இக் கோயில்களின் உள்ளும் புறமும் புராணக் கதைகளை விளக்கும் சிற்ப வேலைகள் நிறைந்திருந்தன. இக்கோயில்களின் மண்டபங்களில் அமர்ந்திருக்கும் சிங்கங்கள் அதன் தூண்களைத் தாங்கின. தற்காலத்து மண்டபங்களிற் காணும் யாளித் தூண்கள் அம்முறையைப் பின்பற்றியவைகளே. இக் கோயிலிலுள்ள அழகிய தெய்வ உருவங்களும் மனித உருவங்களும் காண்பவரைப் பரவசப்படுத்தும் முறையாகத் தோன்றுவன.

## இராசசிம்மன் சிற்ப அமைப்பு :

இராசசிம்மனே முதன் முதல் கற்களைச் செதுக்கி அவைகளைச்சுண்ணாம்பினால் இசைத்துக் கற்கோயிலை எடுப்பித்தான். இவன் கட்டிய கோயில்தான், இன்று நாம் காஞ்சியில் காணும் கயிலாசநாதர் கோயிலாகும். இக்கோயில் ஒரு சிற்பக் களஞ்சியம் எனலாம். ஏழாம், ஒன்பதாம் நூற்றாண்டின் சிற்பத் திறனுக்கு இதனை ஒரு எடுத்துக் காட்டாகச் சொன்னால் மிகையாகாது.

## அபராசிதன் சிற்ப அமைப்பு:

அபராசிதன் சிற்ப அமைப்பு மேற் குறித்த பல்லவச் சிற்ப முறையையும், பின்னர்த் தென்நாட்டை ஆண்ட சோழர்களது சிற்பமுறையையும் சேர்த்ததாகும்: அக் காலத்தில்தான் துவார பாலகர்களுக்கு நான்கு கரங்கள் அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது. அபராசிதன் சிற்ப முறைக்கு எடுத்துக் காட்டு, புதுக்கோட்டைச் சீமை நார்த்தாமலை (நகரத்தார் மலை) என்னும் கிராமத்திற் காணப்படும், விசயாலய சோளீசுவரம் என்னும் சிவாலயமாகும். பொதுவாகப் பல்லவர் காலத்தை அடுத்து

எழுந்த கோயில்கள் ஒரு தனிச் சிற்ப அமைப்பையும், சிறந்த தத்துவக் கருத்துக் களையும் முக்கியமாகக் கொண்டவை யாகும்.

அவ்வாறு அமைக்கப்பட்ட சிவனது ஆலயத்தின் தத்துவத்தைத் தெரிவோம். கருப்பக் கிருகத்தில் சிவபெருமான் இலிங்க மூர்த்தியாக எழுந்தருளியிருப்பர். அர்த்த மண்டபம் அல்லது மகாமண்டபத்தில் ரிஷபதேவரும், அவருக்குப் பின்புறம் பலி பீடமும் காணலாம். இதன் தத்துவம் யாது? சைவசித்தாந்தத்திலே பதி, பசு, பாசமென மூன்று பொருள்கள் அநாதி நித்தியமாகப் பேசப்படும். அவற்றுட் பசுவாகிய உயிர் பாசத்தினீங்கிச் சிவனைக் காண வேண்டும் என்பதே சைவ சித்தாந் தக் கருத்து. 'பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினையடைய முத்தி' என்பது சித்தி யார். கருப்பக் கிருகத்திலுள்ள இலிங்கம் பதியாகிய சிவனைக் குறிக்கும். முன் மண்ட பத்திலுள்ள இடபம் பசுவாகிய உயிரைக் குறிக்கும். அதன் பின்னுள்ள பலிபீடம் பாசத்தைக் குறிக்கும். இந்தத் தத்துவ உண்மையைத் திருமூலநாயனார்,

'ஆய பதிதா னருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவு மடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை யாய்ந்து கொள்வார் கட்கே'

என்று அருளுகின்றார்கள். இங்கே அர னிலை என்பது சிவாலயம் என்னும் பொரு ளைத்தரும்.

இவ்வாறாக, ஆகம, சிற்ப நூல்களை யொட்டியே பொதுவாகக் கோயில்கள் வகுக்கப்பட்டன. வைணவக் கோயிற் கரு வறையில் நீலமேனி நெடியோன் தமது தேவிமார்களுடன் உறைவான். கோயில் பக்கத்தில் வைணவ ஆசார்யர்களும், ஆண்டாளுமாகப் பரிவாரச் சுற்றுக்கோயில் களில் ஆங்காங்கு அமைவர்.

இவ்வாறாகவே சிவன் கோயில்களில் சைவ சமய உருவத் திருமேனிகளும் அமையும். இதனைச் சுற்றித் திருச்சுற் றாலையும், அதனை அடுத்துத்திருமதிலும், திருவாயில்களின்மேல் வானளாவிய கோபு ரங்களும் அமைந்திருந்தன.

## பிற்காலச் சோழர் சிற்பமுறை :

பல்லவர்களுக்குப் பின் சோழர் வமி சத்திற்குப் புத்துயிரளித்த அரசன் விசயா லயன் ஆவான். இவன் நார்த்தாமலையில் சில கோயில்களை எழுப்பினான். பல்லவப் பேரரசுக்குப் பின் எழுந்த பிற்காலச் சோழர் பேரரசு தென்னாட்டினது வாழ் விலேயே ஒரு முக்கியமான காலமாகும். அவர்களின் தனிச்சிறப்பு, அவர்களால் எடுப்பித்த திருக்கோயில்களுடையனவே யாகும். சோழநாடு வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் எண்ணற்ற வாய்க்கால்களால் சூழப் பெற்றது. ''தண் ணீருங் காவிரியே தார் வேந்தன் சோழனே'' எனத் தமிழ் மூதாட்டியார் அந்த நாட்டின் வளத்தையும், வேந்தனது தொல்குடியையும் சிறப்பித்தார்.

இப்பிரதேசத்தில் ஒரு சிறு கல்லும் கிடைத்தற்கரிதாகும். ஆயினும் இவர்கள் எடுப்பித்த கோயில்கள் யாவும் கருங்கற் களாலாகியவைதான். இன்னும் இவர்கள் சிறந்த சிவபக்தர்கள். இப்பக்தியால் தூண் டப் பெற்று இவர்களாலாகிய கோயில்கள் எண்ணற்றவை. இவைகளை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதற் பகுதி கி.பி. 800 முதல் 1100 வரையிலுள்ளவை. இதற்கு முன்னர்க் கோயிலின் கருவறைக்கு எதிரேயுள்ள வாயிற் கோபுரமே வான ளாவி உயர்ந்திருந்தது. ஆனால் இப் போது வாயில் கோபுரங்களை விடக் கருப்பக் கிருக விமானங்களுக்குத் தான் முதற் சிறப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தஞ்சையிலும், கங்கைகொண்ட சோழபுரத்திலும், திருவனந்தபுரத்திலும் காணலாகும். இம்முறையை முதலில் தொடங்கியவன் முதலாம் இராசராசன் (கி. பி. 985-1014).

இவ்வாறு எழுந்த திருக்கோயில்கள் சில தவிர, பெரும்பாலானவை பல நூற் றாண்டுகளில் வளர்ந்தவை. அதன் பகுதி களைப் பலர் எடுப்பித்தனர். அவர்கள் இறைவன் அருளைச் சிந்தித்த வண்ணமும், அவரவர்கள் திருப்பணிகளைத் தெரிவிக்கு முகத்தானும் தமது உருவங்களைஆங்காங் குத் தம்மை மண்டபத்திலோ, தூணிலோ சுவரிலோ சிற்ப உருவத் தோற்றமாகச் செய்து வைத்தனர். இவைதாம் நாம் திருக்கோயில்களிற் காணும் சிற்ப உரு வங்கள். இவை முதற்கண் ஒரு மானிட உருவத்தை உணர்த்தும் சாதனமாக இருந்து, பின்னர் தனிப்பட்ட திருப்பணி யாளரின் திரண்ட அங்க அமைப்பு, நிற்கும் தோரணை, முகக்களை, உருவத் தோற் றம் யாவையும் கொண்டவையாக அமைந் தவையுமாயின. இவ்வாறான சில உரு வங்களின் அடியிலோ, மேற்பக்கத்திலோ அன்னாரது பெயரையும், திருப்பணியின் விளக்கத்தையும் சில இடங்களில் கல் வெட்டுக் குறிப்பால் விளக்கியிருப்பதை யும் காண்கிறோம்.

தென்னாட்டுச் சிற்ப உருவங்களின் தோற்றம், தமிழர்களது வீரர் வழிபாட் டின் தொடர்ச்சியாகும். முதலில் ஒரு வீரனையோ, மகாசக்தியையோ குறிப்ப தான நடுகல்லாகவும், பின்னர்க் கல், மரம் சுதையாலாகிய ஒரு உருவத்தைக்கொண்ட தாகவும் இருந்தது. இதன் பிற்பட்ட முதிர்வே நாம் காணும் கோயில் சிற்ப உருவங்கள். இவற்றின் தனிப்பட்ட அங்க அடையாளங்களும் முகப்பொலிவும் நமது நாட்டவரை அன்றிப் பிறநாட்டவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளன. இச் சிற்பத் திறன் இந்திய வடபாகத்திலும் மற்றும் மேல்நாட்டிலுங்கூடக் காண்பதற்கில்லை என்கின்றனர். **

# "தமிழின் நீர்மை"

ந. ரா. முருகவேள், M.A.,M.O.L.

''தமிழின் நீர்மை பேசித், தாளம்
வீணை பண்ணி, நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல்,
செய்கை இடம் ஓவார்;
குமிழின் மேனி தந்து, கோல
நீர்மையது கொண்டார்;
கமழும் சோலைக் கானூர் மேய
பவள வண்ணரே!''

—சம்பந்தர்

R. RAJU,
Dy Commissioner H.Qrs,
(Retired)
HR&CE Administration Dept

**முன்னுரை:**

இந்நிலவுலகின்கண் உள்ள பற்பல நாடுகளிலும், எத்துணையோ பல நூற்றுக் கணக்கான மொழிகள் வழங்கி வருகின்றன. சிறுசிறு கிளை மொழிகளைத் தவிர்த்து, உலகில் இதுபோழ்து வழங்கிவரும் மொழிகள் ஏறத்தாழ 2796 என்று, மொழி நூற்றுறை யறிஞர்கள் ஒருவாறு கணக்கெடுத்திருக்கின்றனர். அவைகள் அனைத்தும் ஒரே தரத்தன அல்ல. தத்தமக்கு அமைந்த இயல்புகளுக்கு ஏற்ப அவைகள் வெவ்வேறு படிநிலைகளை யுடையன. அவற்றுள் மிகப் பெரும்பாலானவை 'திருந்தா மொழிகள்' என்னும் வகையைச் சேர்ந்தனவாகலாம். 'திருந்தியமொழிகள்' எனக் குறிப்பிடத் தகுந்த சிறப்புடைய மொழிகள் ஒரு சிலவேயாதல் கூடும். அவற்றுள்ளும், இலக்கண இலக்கிய நலங்களிற் சிறந்து, பழமையும் பெருமையும் வாய்ந்தவை, மிகச் சிலவேயாக இருக்கும். அவை தம்முள்ளும் ஒரு சிலவே ''உயர்தனிச் செம் மொழிகள்'' எனப் புகழ்ந்து போற்றத் தக்கனவாகத் திகழ்கின்றன. அவ்வொரு சில உயர்தனிச் செம்மொழிகளிலும்கூட, எத்தனையோ பல மொழிகள் வழக்கிழந்து நிற்க, அமிழ்தினும் இனிய நமது அருமைத் தமிழ் மொழி யொன்றே, பல்லாயிரம் ஆண்டுகளாக உலக வழக்கு, நூல்வழக்கு என்னும் இருதிற வழக்கினும் தொன்று தொட்டு இன்று காறும் நின்று நிலவி, இளமையாற்றலோடு வளங்குன்றாது, இனிது வழங்கி வளர்ந்து வருகின்றது.

உலகின்கண் உள்ள ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொருவகைச் சிறப்பியல்பு உண்டு. அவ்வகையிற் கருதின், எல்லா மொழிகளும் தம்முள் ஓராற்றால் ஒத்த தன்மை யுடையனவே என்பதில் ஐயமில்லை. ஆயினும், அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியானது தனக்கெனப் பல தனிப்பெருஞ் சிறப்பியல்புகளை யுடையதெனக் குறிப்பிடுதல் இழுக்காகாது.

**சிறப்பியல்புகள் :**

(1) தமிழில் உள்ள எழுத்துக்களெல்லாம் மக்களுடைய நாவின் இயல்பையும் ஒலியியலின் இயல்பையும் ஆராய்ந்தறிந்து, இயற்கைநெறிக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன.

(2) உரப்பல் கனைத்தல் முதலிய அரிய முயற்சிகள் இன்றி, எளிமையும் இனிமையும் அமையத் தமிழ் எழுத்துக்களை யாவரும் ஒலித்தல் இயலும்.

(3) தமிழ் எழுத்துக்களின் ஒலியமைப்பியற்கை, தமிழ் மக்கள் வேறு பிற அயல்நாட்டு மொழிகளின் ஒலிகளையும் நன்கினிது திறம்பட ஒலிப்பதற்குத் துணை புரியக் கூடியதாகத் திகழ்கின்றது.

(3) ஆங்கிலம் முதலிய மொழிகளில் ஒரெழுத்தே பலவேறு ஒலிகளைக் குறிக்கப் பயன்படுவதுபோல் அன்றி, 'ஓர் எழுத்துக்கு ஓரொலி' என்னும் அறிவு நெறிக் கொள்கைக்குப் பெரும்பாலும் முரண்படாமல் தமிழ் எழுத்துக்கள் அமைந்துள்ளன.

(5) ஒரு சில மொழிகள் தமக்கே யுரிய எழுத்தமைப்பினை உடையனஅல்ல. எடுத்துக்காட்டாக. இத்தாலியன், ஃபிரெஞ்சு ஸ்பானிஷ் ஆங்கிலம் முதலிய மொழிகள் தமக்கெனத் தனித்தனியே எழுத்தமைப்புக்களைப் பெறாமல், ஒரே வகை நெடுங் கணக்கினையே (Alphabet) கையாளுகின்றன. எழுதாக் கிளவியாக இருந்த வட மொழியும், தனக்கென ஓர் எழுத்தமைப்பைப் பெறாமையால், அவ்வவ்விடத்துக்கு ஏற்பத் தேவநாகரி கிரந்தம் முதலிய எழுத்துக்களால் எழுதப்படுகின்றது. ஆனால், தமிழ்மொழியோ மிகப் பழங் காலந் தொட்டே தனக்கெனவுரிய ஒரு தனி எழுத்தமைப்பை உடையதாகவிளங்கி வருகின்றது.

(6) ஆங்கிலத்தில் 'அச்செழுத்து வகை' 'கையெழுத்துவகை' என இரு வேறு பிரிவுகள் உள்ளன. அரபிய மொழியில், மொழியின் முதலிடை கடைகளில் வரும் முறைகளுக்கேற்ப மெய்யெழுத்துக்கள் நான்கு வேறு வடிவங்களைப் பெறுகின்றன. மேலும், ஒரு மொழியேஅதனைப் பேசும் மக்களின் மதம் பண்பாடு முதலிய வேறுபாடுகள் காரணமாக வெவ்வேறு

வகையான எழுத்துக்களால் எழுதப்படுவதுண்டு. உதாரணமாக, இந்திமொழியொன்றே, தேவநாகரி எழுத்தால் இந்து சமயத்தவர்களாலும், அரபி எழுத்துக்களால் இசுலாமிய சமயத்தவராலும் எழுதப்பட்டு, முறையே இந்துஸ்தானி உருது என்னும் வெவ்வேறு பெயர்களைப் பெற்று வழங்குகின்றது. தமிழில் இத்தகைய இடர்ப்பாடுகள் இல்லை.

(7) சில மொழிகளில் எழுதுவது ஒருவகையும், ஒலிப்பது பிறிதொரு வகையுமாக உள்ளது. ஆங்கிலத்தில் Put, But, Often, Depot, முதலிய யாவரும் அறிந்த சொற்களே, இவ்வுண்மையை விளக்கப் போதிய சான்றாகும். ஜெர்மன் மொழியில் 'ரூட்டர்' 'ஃப்ரூட்' என எழுதிவிட்டு 'ராய்ட்டர்', 'ப்ஃராய்ட்' என ஒலிக்கின்றனர். வடமொழியிலும் ப்ரஹ்ம ஸிஹ்ம வஹ்நி: விஜ்ஞானம் என எழுதி விட்டு, முறையே ப்ரம்ஹ ஸிம்ஹ வந்ஹி; விக்ஞானம் என்றொலிக்கின்றனர். இங்ஙனம் எழுதுவது ஒருவகையும், ஒலிப்பது பிறிதொரு வகையுமாக இருத்தலால், நேரும் இடர்ப்பாடுகட்கு எல்லையே இல்லை. ஒலிப்புக் கென்றே மிகப் பெரிய விளக்க நூல்கள் வெளியிட வேண்டிய இன்றியமையாமை, ஆங்கிலம் முதலிய மொழிகளில் காணப்படுகின்றது.* வல்லொலி மெல்லொலி மாற்றம் தவிர, இத்தகைய குறைபாடுகள் தமிழில் இல்லை எனத் துணிந்து கூறலாம்.

(8) தமிழிலுள்ள சொற்கள் எல்லாம் பெரும்பாலும் மிகக் குறுகியனவாய், ஓரசை ஈரசைகளாலேயே பெரும்பாலும் இயன்றுள்ளன. ''நாகரிகம் எய்தப் பெறாத எளிய மக்கள் பேசும் மொழியின் சொற்கள், அவர்கள் கையாளும் கருவிகளைப் போலவே திருத்தமும் செம்மையும் பெறாமல், மிக நீளமாக இருக்கும்'' என்பது, மொழி நூல் அறிஞர்கள் கண்டறிந்த உண்மையாகலின், தமிழில் வழங்கும் சிறுசிறு சொல்லமைப்பே, அதன்பழம் பெரு நாகரிகத்தினையும் பண்பாட்டினையும் அறிவிக்கும் சான்றாக அமையும்.

(9) தமிழிற் பகுத்தறிவுடைய மக்களை உயர்திணை என்றும்; பகுத்தறிவில்லாத உயிரையும், உயிரில் பொருள்களையும் அஃறிணை என்றும்; பாகுபாடு செய்து விளக்கியிருப்பது, பாராட்டற்குரியதாகும்.

(10) அங்ஙனமே சொல் நோக்கி ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும், இரண்டையும் அலியாகவும், மனஞ் சென்றவாறு செயற்கைப் போலி நெறியிற் கூறியொழிந்து பிழைபடாமல், பொருள் நோக்கி இயற்கைக்கு ஏற்பத் தமிழிற் பால்கள் வகுக்கப்பட்டுள்ளமையும், மிகவும் மகிழ்தற்குரிய செய்தியாகும். வடமொழியில் 'மனைவி' என்னும் ஒரு பொருளே குறிக்கும் பார்யா—தாரா—களத்ரம் என்னும் மூன்று சொற்களும், முறையே பெண்பால் ஆண்பால் அலிப்பால் எனக் கொள்ளப்படுகின்றன. கல்லின் பெயர்களாகிய பாஷாண—சிலா—உபலம் என்னும் சொற்கள் மூன்றும், முறையே ஆண்பால் பெண்பால் அலிப்பால் எனக் கருதப்படுகின்றன. தமிழில் இத்தகைய செயற்கைக் கற்பனைப் பாகுபாடுகள் சிறிதும் இல்லாமை கருதற்பாலது.

(11) தமிழில் உள்ள வினைச் சொற்கள், திணைபால், எண் இடம் காலம் என்பவற்றைக் காட்ட வல்லனவாக விளங்குதல் போல, வேறு சில மொழிகளிற் காண்டல் அரிது. ஒரு சில மொழிகளில் உரிச்சொற்களும், வேற்றுமை யுருபுகள் ஏற்பதுண்டு. அம்முறை தமிழில் இல்லாமை கற்பார்க்கு எளிமை பயக்கின்றது.

(12) தமிழ்ச் சொற்களின் பகுதி விகுதி முதலிய உறுப்புக்கள், மிக எளியவரும் தாமே கருதி யுணர்ந்து கொள்ளத் தக்க இயல்புடையன. பிற சில மொழிகளிற்போலச் செயற்கை நெறிகளிலும், வெறும் கற்பனை முறைகளிலும், சொற்களின் பகுதி விகுதிகள் தமிழில் வகுக்கப் பட்டில்லாமை, அறிவு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றது. தமிழில் ஒரு சொல்லின் பகுதி விகாரப்படினும், முற்றும் மாறாது நிற்கும். பிற மொழிகளில் வினைப் பகுதிகள் இயல்பாலும், கால இடங்களாலும், பகுதியின் வடிவத்திற்குத் தொடர்பேதும் இல்லாத வடிவங்களை அடைதலுண்டு.

(13) ''பன்னீருயிரும் க ச த ந ப மவய ஞ ங ஈரைந்து உயிர் மெய்யும்மொழி முதல்'' எனச் சொற்களின் முதலில் வருவன 22 எழுத்துக்களே எனவும் ; ''ஆ வி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய் சாயும் உகரம் நாலாறும் ஈறே'' எனச் சொற்களின் இறுதியில் வருவன 24 எழுத்துக்களே எனவும் பிறவாறும், தமிழிலக்கணம் ஆராய்ந்து அளந்து கூறியிருப்பது மிகவும் வியக்கத் தக்க செய்தியாகும்.

(14) ஆசிரியர் சிவஞானசுவாமிகள், தமது தொல்காப்பியப் பாயிர விருத்தியில், ''தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும் குறியீடுகளும், வினைக் குறிப்பு வினைத்தொகை முதலியசொல்லி

---

* "In the English tongue we speak
Why is 'break' not rhymed with "freak"?
Well, you tell me why it is true,
We say 'Sew' but likewise 'Jew'?
'Beard' sounds not the same as 'heard'.
'Cord' is different from 'word'.
And since 'Pay' is rhymed with 'say'
Why not 'paid' with 'said', I Pray?
'Cow' is 'Cow' but 'low' is 'low'
'Shoe' is never rhymed with 'foe'.
And, in short, it seems to me,
Sound and letters disagree.....
—Lord Crower.

"The English spelling is an international disaster". —G. B. Shaw.

லக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம், புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகு பாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா'' எனக் கூறியிருப்பது ஈண்டுக் குறிக்கொளத் தக்கது.

(15) பிறமொழி மதம் பற்றிப் பவணந்தியார் இடுகுறிப் பெயர் உடன் பட்டனராயினும், ''மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'' எனவும், ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்த னவே'' எனவும், ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலின், தமிழில் எல் லாச் சொற்களும், அறிவார்ந்த முறையிற் காரணம் பற்றி அமைந்தனவே என்பது அறியப்படும். ''ஆசிரியர் தொல்காப்பிய னார் யாதானுமோர் காரணம் பற்றியே குறியிட்டு ஆளுதலல்லது வடநூலார் போலக் காரணம் பற்றாதும் குறியிட்டு ஆளுதல் யாண்டும் இல்லை'' எனச் சிவ ஞான சுவாமிகள், தமது 'தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி' யிற் குறித்திருப்ப தும், ஈண்டு நாம் உணர்தற்கு ஏற்புடை யது.

(16) ஏனைய மொழிகள் எல்லாம், எழுத்து சொல் சொற்றொடர் செய்யுள் என்பன போன்றவற்றிற்கு மட்டுமே, ஓரளவு இலக்கணம் உடையனவாக, அவற் றாற் குறிக்கப்படும் பொருளுக்கும்கூட, தமிழ்மொழி இலக்கணம் வகுத்திருக்கின் றது. அது பற்றியே யன்றோ, பரிபாடலின் கண் ''தள்ளாப் பொருளியல்பிற் றண்ட மிழ்'' எனத் தமிழ் மொழியினைச் சான் றோர்கள் போற்றுவாராயினர் என்பது.

(17) மக்களின் வாழ்க்கையினை அகம் புறம் என இரண்டாகப் பகுத்து, மக்களாயினார் தம் வாழ்க்கையில் இன்றி யமையாது எய்தற்பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றை யும், அவற்றோடு தொடர்புடைய காதல் வீரம் முதலிய பற்பல செய்திகளையும் எல்லாம் ''புலநெறி வழக்கம்'' பற்றி மிக வும் விரிவாக விளக்கிக் கூறியிருப்பது, தமி ழிலக்கணத்தின் தனிப் பெருஞ்சிறப்பியல்பு களுளெல்லாம் தலைசிறந்த தொன்றா கும்.

(18) ஆங்கிலம் உலகப் பெருமொழி களுள் ஒன்றாக இன்று திகழ்கின்ற தெனி னும், அதன் இலக்கணம் இன்னும் போதிய திருத்தமும் செம்மையும் எய்தவில்லைஎன அறிஞர்கள் ஆராய்ந்து கூறி வருகின்றனர். ஆனால் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்னரே, தமிழில் தொல்காப் பியம் என்னும் தூய சிறந்த முழுமுதல் இலக்கண நூல் அமைந்திருப்பது, மிகப் பெரிதும் வியந்து போற்றுதற்குரியது. தமிழ் மக்கள் கண்டுணர்ந்து கடைப் பிடித்த நூற்பா அமைப்பு, சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் நவின் றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல் ஓசையுடைமை ஆழமுடைத்தாதல் முதலிய பத்துவகை அழகுகளும் பயின்று, எத்தனை மாட்சிமைமிக்கு இலங்குகின்றது! நூற்பாக்களைக் காரண காரிய முறை பிற ழாமலும், முன்னொடு பின் முரணாமலும் பிறவாறும் அமைத்திருக்கும் திறமும், அவற்றிற்கு இளம்பூரணர் சேனாவரையர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் முதலா னோர் வரைந்திருக்கும் அரிய பெரிய உரை விளக்கங்களும் பிறவுமெல்லாம், நினைத் தொறும் நினைத்தொறும் வியப்பும் விம்மிதமும் விளைவிக்க வல்லன அன்றோ?

(19) உலகத்திற் பல மொழிகள் காலத் திற்குக் காலம் திரிந்து சிதைந்து மாறுபடு கின்றன. போவுல்ப், கேட்மான் காலத்தில் வழங்கிய ஆங்கிலமொழி சாசர் காலத்தி லும், சாசர் காலத்திய மொழி செகப்பிரி யர் காலத்திலும், செகப்பிரியர் காலத்து மொழி தேனிசையன் காலத்திலும், எத் தனை எத்தனையோ மாறுதல்களை அடைந்துள்ளன. மோசே முனிவர் பேசிய எபிரேய மொழியும், இயேசுநாதர் பேசிய அரமைக் மொழியும், புத்தர்பிரான் பேசிய பாலிமொழியும், மகாவீர வர்த்தமானர் பேசிய அர்த்தமாகதி மொழியும், பிறவும் இன்று உலகவழக்கு அற்று, பெரிதும் நூல் வழக்கில் மட்டுமே இருந்து வருகின்றன. ஆனால் தமிழ் மொழியானது கடந்த இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகவே மாறாமலும் சிதையாமலும், ஒரே நிலையிற் 'கன்னித்தமிழ்' எனச் சிறப்பிக்கப்படுவதற்கு ஏற்ப, இன்றும் யாவர்க்கும் எளிதிற் புரியும் வகையில் நிலைபெற்று இனிது நிலவி வருகின்றது. உலக மொழிகளின் வரலாற்றில் இஃ தொரு விந்தையேயாகும்.

(20) ''எங்களுடைய மொழி செகப்பிரியரும், மில்ட்டனும் பேசிய மொழி, விவிலிய நூலைப் பெற்றுள்ள மொழி'' என்று ஆங்கில மொழியினைப் பற்றிக் குறிப்பிட்டு அறிஞர் ஒருவர் (George Bernard Shaw, in Pygmalion) பெருமிதம் கொள்கின்றார். அம்முறையில் நாமும், நம்முடைய தமிழ்மொழியைத் தொல்காப் பியரும் திருவள்ளுவரும் இளங்கோவடி களும் பேசிய மொழி என்றும், ஆழ்வார் களும் நாயன்மார்களும் முறையே திவ் வியப் பிரபந்தங்களும் திருமுறைகளும் பாடியருளிச் செய்த தெய்விக மொழி என்றும், கூறிப் பெருமிதப்பட்டுக் கொள்ள லாம்.

(வெண்பா)

செகப்பிரியர் பேசிய சீர்மொழி என்று
மிகப் பெரிதும் கொள்கின்றார் வீறு;
—தகச்சிறிதும்
வள்ளுவர்,தொல்காப்பியனார் வாய்மலர்ந்த
செந்தமிழ் என்று
உள்ளிஇன் புற்றிலோம் நாம்

—ந. ரா. மு.

# வைகுண்ட ஏகாதசி

திரு. வி. திருமலை அய்யங்கார், திருவரங்கம்

மார்கழி மாதம் தேவர்களுக்குக் காலம் அது சாத்விக சமயமுமாய்ப் பிராம்ம முகூர்த்தமுமாய் இருப்பதால் எம்பெருமானுடைய ஆராதனத்துக்கு மிகவும் உகந்தது. தோத்திரங்களைக் கொண்டு பகவானை எழுப்பி மகிழ்விப்பிக்க மிகவும் தகுந்த காலம். இந்த மாதம் பூராவும் பகவானை ஆராதித்தால் பன்னிரண்டு வருடம் பூசை செய்த பலன் கிடைக்கும். மார்கழி மாதத்தில் சுக்கிலபட்சம் பிரதமை முதல் இருபது நாள் எம்பெருமானுக்கு உற்சவம் செய்ய வேண்டுமென்று பாஞ்சராத்திர சம்மிதைகளில் விதிக்கப்பட்டிருக்கிறது. பிரதமை முதல் தசமி முடியப் பத்துநாள் உற்சவத்திலும் பக்தர்களின் தோத்திரப் பாடல்களைக் கொண்டு அவனைப் பாடி உற்சவம் செய்ய வேண்டும். இந்த உற்சவத்திற்குப் பகல்பத்து அத்யயன உற்சவம் என்று பெயர்.

மார்கழி மாதம் சுக்கிலபட்சம் ஏகாதசி முதல் கிருஷ்ணபட்சம் பஞ்சமி முடியப் பத்துநாள் உற்சவத்திலும் பெரிய கொட்டகை போட்டு அலங்கரித்து, அதற்காக ஏற்பட்ட மண்டபத்தில் எம்பெருமானை எழுந்தருளப் பண்ண வேண்டும். ஏகாதசியன்று எம்பெருமான் சந்நிதியில் வேதங்களை ஆரம்பித்து உற்சவத்தின் முடிவில் பூர்த்தி செய்ய வேண்டும். இந்த உற்சவத்திற்கு இராப்பத்து அத்யயன உற்சவம் என்றும், மோட்சோற்சவம் என்றும் பெயர். இந்த உற்சவம் பகல்பத்து, இராப்பத்து இருபது நாள்களிலும், அவனைப் பாடிய பக்த பிம்பங்களை அவனுக்கு எதிரில் எழுந்தருளப் பண்ண வேண்டும்.

எம்பெருமான் பிரளய சமுத்திரத்தில் ஆலிலைமேல் பள்ளி கொண்டு தம்முடைய நாபிக்கமலத்திலிருந்து பிரமாவைச் சிருஷ்டித்தார். பிரம்மா உடனே அகங்காரம் கொண்டார். எம்பெருமானுடைய காதிலிருந்து இரண்டு அசுரர்கள் தோன்றிப் பிரம்மாவைக் கொல்ல முயற்சித்தார்கள். பிரம்மாவைக் கொல்ல வேண்டாம், நீங்கள் வேண்டும் வரத்தை நான் கொடுக்கிறேன் என்றார் எம்பெருமான். எங்களுக்கு நீர் வரம் தர வேண்டாம். உமக்கு வேண்டுமானால் நாங்கள் வரம் தருகிறோம் என்று சொன்னார்கள் அசுரர்கள். இப்படி அகங்காரமாகப் பேசும் நீங்கள் என்னால் கொல்லப்பட்டு அரக்கர்களாகப் பிறப்பீர்கள் என்று எம்பெருமான் சொன்னார். இப்படி எங்களைத் தண்டிக்கக் கூடாது. உம்மோடு ஒருமாதம் சண்டைசெய்து கடைசியில் உம்முடைய அனுக்கிரகத்தால் நாங்கள் மோட்சம் பெற வேண்டும் என்று அசுரர்கள் எம்பெருமானைப் பிரார்த்தித்தார்கள். அப்படியே அசுரர்கள் எம்பெருமானுடன் ஒரு மாதம் சண்டையிட்டு முடிவில் பகவானால் கொல்லப்பட்டார்கள். எம்பெருமானோடு பரமபதத்தில் நித்தியவாசம் செய்யவேண்டும் என்று அசுரர்கள் வேண்டிக் கொண்டதற்கு இணங்க, எம்பெருமானும் மார்கழி மாதம் சுக்கிலபட்சம் ஏகாதசியன்று உத்தரத்துவாரத்தைத் திறந்து அவ்வழியாக, பரமபதத்தில் அசுரர்களைச் சேர்த்தார். அசுரர்களும் எம்பெருமானுடைய திவ்விய மங்கள விக்கிரகத்தைச்சேவித்துக்கொண்டு பரமானந்தத்திலிருந்தார்கள். மேலும் எம்பெருமானை அர்ச்சாவதாரமாகப் பிரதிட்டை செய்து மார்கழி சுக்கில ஏகாதசியன்று எங்களுக்குத் தேவரீர் பண்ணின அனுக்கிரகத்தை உற்சவமாக அனுட்டிக்க வேண்டுமென்றும், அன்று எம்பெருமானைச் சேவிப்பவர்களும், எம்பெருமானோடு உத்தரத் துவாரத்தின் வெளியே வருபவர்களும், ஆகிய எல்லோரும் பரம பதத்தை அடைய வேண்டும் என்றும் அசுரர்கள் எம்பெருமானை வேண்டிக் கொள்ள, எம்பெருமானும் அப்படியே அனுக்கிரகித்தார். இந்த உற்சவம் பற்றி உற்பத்திக்கிரமம் ப்ரச்ன சம்மிதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஏகாதசியன்று அதிகாலையிலேயே நித்ய திருவாராதனங்களைப் பூர்த்தி செய்து எம்பெருமானை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து உத்தரத்துவாரத்திற்கருகில் சிரம பரிகாரமாக அர்க்ய பாத்யாதிகளைச் சமர்ப்பித்து, ரிக் யசுர் முதலான வேதங்களாலும், தோத்திரங்களாலும் எம்பெருமானைச் சந்தோஷிப்பிக்கச் செய்து உத்தரத்வாராவாக விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைக்கு எழுந்தருளப்பண்ணி, அங்கேமுன்ன

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

தாகவே எழுந்தருளியிருக்கும் பக்தடியிம், பங்களுக்கு மரியாதைகளைச் செய்து எம்பெருமானை மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணி விசேஷமான திருவாராதனம், தளிகை அமுது செய்தல் முதலியவைகளைச் செய்து எம்பெருமானை உள்ளே எழுந்தருளப் பண்ண வேண்டும். பாக்கி ஒன்பது நாட்களிலும் சாயங்காலத்தில் இதுபோலவே நடத்தி உற்சவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதுவே மோட்சத்தைக் கொடுக்கக் கூடிய உற்சவம்.

இந்த மாதிரியாகவே ஒவ்வொரு திவ்யதேசத்திலும் இந்த உத்சவம் சாமான்யமாக நடந்து வந்தது. சீவாத்துமாக்களை உய்விப்பதற்காக எம்பெருமான் ஆழ்வார்களை அவதரிப்பிக்கச் செய்து, அவர்களுடைய திவ்வியப் பிரபந்தங்களின் மூலம் உபய விபூதியையும் பரிபாலிக்க எண்ணிய போது திருமங்கையாழ்வார் கடைசியாக அவதாரம் செய்தார். அவர் திருவரங்கத்திலேயே நித்யவாசம் செய்து கொண்டு நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களின் விசேஷங்களை அனுபவித்து அவற்றுக்கு அங்கமாக ஆறு பிரபந்தங்களை அருளிச் செய்தார். ஒருசமயம் தான் பிறந்த கார்த்திகை மாதம் திருக்கார்த்திகை உற்சவத்தின்போது திருமங்கையாழ்வார் தம்முடைய திருநெடுந்தாண்டகத்தைத் திருவரங்கனுக்கு எதிரில் திவ்ய கானத்தில் பாடி அபிநயித்தார். அரங்கனும் மிகவும் மகிழ்ந்து ஆழ்வாரின் மனோரதத்தைக் கேட்க, திருமங்கையாழ்வாரும் ''நம்மாழ்வாருடைய திருவாய்மொழிப் பிரபந்தத்துக்கு வேத சாம்யம் கொடுத்து மார்கழி சுக்ல ஏகாதசியன்று வேதங்களோடு திருவாய்மொழியையும் கேட்டருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். அரங்கனும் அப்படியே இசைந்து ஆழ்வார் திருநகரியிலிருக்கும் நம்மாழ்வாருக்குத் திருமுகம் அனுப்பி அவருக்குக் கரணபூதரான மதுர கவியாழ்வாரையும், நம்மாழ்வாரையும் திருவரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணி ஏகாதசியன்று வேதங்கள் ஆரம்பமானதும், இராத்திரி மதுரகவி கானம் செய்த திருவாய்மொழியையும் கேட்டருளினார்.

தினந்தோறும் இப்படியே நடந்து பத்தாம்நாள் வேதங்களைப் பூர்த்தி செய்து நம்மாழ்வார் திருவாய்மொழியையும் பூர்த்தி செய்தகிரமத்திலேயே ஆழ்வாரையும் தம்முடைய திருவடிகளில் சேர்த்துக்கொண்டு,அவருக்குத் தம்முடைய மாலை, திருமண்காப்பு முதலியவற்றை அனுக்கிரகித்து ஆழ்வாரை மீண்டும் ஆழ்வார்திருநகரிக்கு அனுப்பி வைத்தார் அரங்கநாதன்.

திருவரங்கத்தில் பிரதிவருடமும் இப்படியே உற்சவம் நடந்து வந்தது. பிறகு கலியின் கொடுமையினால் ஆழ்வார் பிரபந்தங்கள் மறைந்துவிட்டன. நம்மாழ்வாரும் உற்சவத்திற்கு எழுந்தருளுவது நின்று விட்டது. மறைந்து போன வேதங்களை வேதவியாசர் கொண்டு வந்தது போல, மறைந்து போன திவ்வியப் பிரபந்தங்களை நாதமுனிகள் ''கண்ணிநுண் சிறுத்தாம்'' பின் பிரபாவத்தாலும், தம்முடைய யோகாப்பியாச பலத்தாலும் ஆழ்வார் கடாட்சம் பெற்றுத் திவ்வியப் பிரபந்தங்களை அடைந்து சிஷ்யர்கள் மூலமாக அநேக வைணவர்களுக்குச் சொல்லி வைத்து முன் நடந்து வந்தது போலவே திருவரங்கத்துக்கு ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணி உற்சவம் நடக்குமாறு ஏற்பாடு செய்தார்.

மேலும் நம்மாழ்வார் திருவாய்மொழிக்கு வேதசாம்யம் ஏற்பாடு செய்வித்த திருமங்கையாழ்வாரிடம் உபகாரமாக அவருடைய திவ்வியப் பிரபந்தங்களையும் மற்றைய ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களையும் நம்பெருமாள் கேட்டருளும்படியாகவும் ஏற்பாடு செய்தார். பாஞ்சராத்திர விதிப்படி பிரதமை முதல் பகலில் பத்துநாட்கள் நடக்கும் பகல்பத்து உற்சவத்தில் திருப்பல்லாண்டு முதலாயிரம், கண்ணிநுண்சிறுத்தாம்பு, திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் ஆகிய இரண்டாயிரம் பாசுரத்தையும், ஏகாதசி முதல் இரவில் பத்துநாள் நடக்கும் இராப்பத்து உற்சவத்தில் திருவாய்மொழி ஆயிரம் பாசுரத்தையும், இருபத்தோராவது நாள் நடக்கும் உற்சவத்தில் இயற்பா ஆயிரம் பாசுரத்தையும் நம்பெருமாள் திருச்செவி சாத்தும் படியாகவும், திவ்விய பிரபந்தங்களைப் பெருமாளிடம் தாளத்தோடு கானமாக விண்ணப்பம் செய்த மதுரகவிகள் தானத்தில் காயக சார்வ பௌமர்களான அரையர்களையும் ஏற்பாடு செய்தார்.

நாதமுனிகளாலே மீண்டும் தாபிக்கப்பட்ட உற்சவம் உடையவர்காலம் வரைக்கும் நடந்தது. உடையவர் விரோதிகளுடைய உபத்ரவத்தினால் பன்னிரண்டு ஆண்டுகள் திருவரங்கத்தைவிட்டுத் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்க வேண்டியதாக இருந்தது. விரோதிகள் இறந்த பிறகு மீண்டும் திருவரங்கத்திற்கு உடையவர் எழுந்தருளியபோது, ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வார் எழுந்தருளச் சௌகர்யமில்லாமல் உற்சவம் நின்று போனதைக் கண்டு இனி வருடா வருடம் ஆழ்வார்திருநகரியிலிருந்து ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணி உற்சவம் செய்ய முடியாதென்று முடிவு செய்து, எல்லா ஆழ்வார்களையும் திருவரங்கத்திலேயே பிரதிட்டை செய்து உற்சவத்தை நடத்தி வைத்தார். முன்பு நம்மாழ்வாரும் மதுரகவியும் மட்டும் எழுந்தருளி நடந்த உற்சவம், இப்பொழுது எல்லா ஆழ்வார்களும் எழுந்தருளி நடப்பது உடையவர் செய்த ஏற்பாடு. மேலும் உடையவர் விஷயமாய்த் திருவரங்கத்தமுதனார்

அருளிச் செய்த பிரபந்த காயத்திரியான இராமானுச நூற்றந்தாதியோடு இயற்பா பிரபந்தம் முழுவதும் திருவரங்கத்தமுதனாராலேயே பெருமாளிடம் விண்ணப்பம் செய்யும்படி உடையவரே ஏற்பாடு செய்தார்.

இப்படியே உற்சவம் நடந்து வந்த போது ஒருசமயம் பட்டர் உடையவர் இட்ட கட்டளையின் பேரில் மேல்நாட்டிலிருந்த வேதாந்தி என்னும் வித்வானை விஷ்ணு பரத்வ ஸ்தாபகமான திருநெடுந்தாண்டகம் என்னும் பிரபந்தத்தினால் வெற்றி கொண்டு அவரைத் தனக்கு நஞ்சீயர் என்னும் சீடராக ஆக்கிக் கொண்டு திருவத்யயனோத்ஸவத்துக்கு முதல்நாள் திருவரங்கத்தில் எழுந்தருளினார். இது விபரத்தை நம்பெருமாளிடம் பட்டர் விண்ணப்பம் செய்ய, நம்பெருமாளும் மகிழ்ந்து திருநெடுந்தாண்டகத்தின் அர்த்தத்தை அப்பொழுது தன் எதிரில் உபந்யாசிக்கும்படி பட்டருக்குக் கட்டளையிட்டார். அதுமுதல் திருவரங்கத்தில் திருநெடுந்தாண்டகமே அத்யயனோத்சவத்திற்கு முதல் பிரபந்தமாயிற்று.

மேலே கண்டபடி, பாசுரங்களுக்காக மட்டும் ஏற்பட்ட உற்சவத்தில், இப்பொழுது பாசுரங்களோடு வியாக்கியானங்களும் பெருமாளுக்கு எதிரில் சேவிக்கப்படுகின்றன. இந்த வியாக்கியானங்களில் நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை ஆகிய இருவரே முக்கியர்கள். இவ்விருவரின் வியாக்கியானங்களைப் பிரசித்தமாக்கினவர்கள் பிள்ளைலோகாசாரியாரும், மணவாள மாமுனிகளும். திருவாய்மொழிக்கு நம்பிள்ளை வியாக்கியானம் அருளிச் செய்தார். திவ்யப்பிரபந்தம் முழுவதுக்கும் நம்பிள்ளை சீடரான பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் அருளிச் செய்தார். மணவாள மாமுனிகள் ஒரு வருடகாலம் நம்பெருமாளுக்கே திவ்வியப் பிரபந்த காலட்சேபம் சாதித்தார். சாற்றுமுறையன்று நம்பெருமாளே ''ஸ்ரீசைலேச தயாபாத்திரம்'' என்னும் தனியனை மணவாள மாமுனிகளுக்கு அருளிச் செய்தார். ஆகையால் மணவாளமாமுனிகளுக்கு "ஈடு முப்பத்தாறாயிரப் பெருக்கர்" என்று திருநாமம் ஆயிற்று.

அரையர் சந்ததியிலிருந்த தம்பிரான்மார் அருளிச் செய்த விசேஷார்த்தங்களே நெடுநாளாகச் சேவிக்கப்பட்டபோதிலும், நம்பிள்ளை ஈடுவியாக்யானம், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம், மணவாளமாமுனிகள் பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானம், ஆக மூன்றும் ஸ்ரீகோசத்தைப் பார்த்து வரி தவறாமல் சேவிக்கப்படுவது, மணவாள மாமுனிகள் நம்பெருமாளுக்கு அவற்றைக் காலட்சேபம் சாதித்த கிரமம். இந்த மூன்று வியாக்கியானங்களும், தம்பிரான்மார் வியாக்கியானமும் தவிர, இதர வியாக்யானங்களுக்கு நம்பெருமாள் சந்நிதியில் பிரவேசமில்லை.

இப்படி விசேஷ வைபவமாக நடக்கும் நம்பெருமாள் திருவத்யயன உற்சவத்தில் இருபது நாளும், ஒவ்வொரு நாளும் அந்தந்த நாளுக்கு ஏற்பட்ட திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் எம்பெருமானை ஆழ்வார்கள் அனுபவித்த அவதாரங்களுக்கிணங்க விசேஷத் திருவாபரணங்களால் நம்பெருமாளுக்கு விசேஷ சாத்துப்படி செய்யப்படும். அதனாலேயே நம்பெருமாளுக்கு ஆபரணங்களுக்குஅழகு கொடுக்கும் பெருமாள் என்று பெயர். உற்சவத்திற்கு முதல்நாள் இரவு திருநெடுந்தாண்டகம் உற்சவம் நடைபெறுகிறது. பகல்பத்து முதல் உற்சவத்தன்று அதிகாலையில் கர்ப்பக் கிரகத்திலேயே திருப்பல்லாண்டு தொடக்கம் செய்யப்படுகிறது. பிறகு திருவாராதனம் தளிகை அமுது செய்தல் முதலியவைகள்கண்டருளி உள்ளேயிருந்து தங்கத் தோளுக்கினியானில் புறப்படுகிறார். உடனேயே ''மன்னிய சீர் மணவாள மாமுனி ஈடுரைப்பது கேட்டுப் பின்னொரு ஸ்ரீசைலேச எனப் பேசுமரங்கா எச்சரிக்கை!'' என்கிற கட்டியம் சேவிக்கப்படுகிறது. நம்பெருமாள் சிங்ககதியில் அதிவேகமாகத் துள்ளிக் குதித்துத் தாவித் திரும்பி மேலப்படியில் ஸ்தலத்தார் முதலானோர்களுக்கு சேவை மரியாதை செய்து வைத்துப் படியிறங்கி வடக்குப் பார்த்து நிற்பார். "அருளப்பாடு இசையறியும் பெருமாள் கூட்டத்தார்'' என்று அருளப்பாடாகி அரையர் தாளத்தோடு இசைபாடுவார். சேனை முதலியார் சந்நிதி வழியாகக் கிளிமண்டபத்திற்கு மேலேயுள்ள அர்ச்சுன மண்டபம் என்கிற பகல்பத்து மண்டபம் ஏறி, துலுக்க நாச்சியாருக்குத் தம்முடைய நடையழகைக் காட்டுவதற்காக ஒய்யார நடையில் எழுந்தருளித் துலுக்க நாச்சியார் அனுப்பும் தாம்பூலத்தைப் பெற்றுக் கொண்டு அரையர் சொல்லும் கொண்டாட்டத்தோடு படியேற்ற வைபவத்தை அனுபவித்து ஆஸ்தான மண்டபத்துக்கு எழுந்தருளுகிறார். திரைவாங்கிய உடன் ஆழ்வார் ஆசாரியர்களுக்கு மரியாதை நடக்கிறது.

''திருநாவுடையபிரான், கலியன், இராமாநுசன், பட்டர்பிரான், மதுரகவி, பொய்கை, பூதம், பேயார், சேரன், பாணன், தொண்டரடிப் பொடி, மழிசை நம்பி, ஆழ்வான், பிள்ளைலோகாசாருக்கு அருளப்பாடு'' என்று பெருமாளிடமிருந்து உரக்க ஸ்தானீகர் அருளப்பாடு சாதிப்பார். பிறகு அரையர் சேவை, தளிகை அமுதுசெய்தல், விநியோகம், தோத்திர பாடகோஷ்டி, இரவு மண்டபத்திலிருந்து புறப்பாடு, அர்க்கிய பாத்யங்கள் தீர்த்த விநியோகம், பத்தி உலாவுதல், படியேற்றம், திருவந்திக்காப்பு ஆகி உள்ளே எழுந்தருளுகிறார். இப்படியே ஒன்பது நாள் உற்சவம் நடக்கிறது. பத்தாவது உற்

சவத்தன்று நம்பெருமாள் நாச்சியார் திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். நாளுக்கொரு அவதாரமாக அலங்கரித்தது போல், இன்று நாச்சியார் திருக்கோல அவதாரம், வைகுண்ட ஏகாதசியன்று அதிகாலையில் நம்பெருமாள் திருவாராதனம், வேதவிண்ணப்பம், தளிகை அமுது செய்தல் முதலியவைகள் கண்டருளி, திருவாய்மொழி தொடக்கமாகி, பெரிய பெருமாள் முத்தங்கி சாத்திக் கொண்டிருப்பதுடன் நம்பெருமாள் ரத்னங்கி, பாண்டியன் கொண்டை முதலியவைகள் சாத்திக் கொண்டு புறப்பாடு கண்டருளுகிறார். பரமபத வாசல் திறப்பதற்கு முன்பாக எல்லா வேதங்களுக்கும் அருளிப்பாடாகி வேதங்களை எல்லாம் நம்பெருமாள் கேட்ட பிறகு, கோஷ்டிக்குத் தீர்த்தம் வடை பருப்பு விநியோகம் செய்யப்பட்டு, பரமபத வாசல் திறந்து பெருமாள் வெளியே எழுந்தருளுகிறார். அசுரர்களை உத்தரத்துவார மார்க்கமாகப் பரமபதம் அனுப்பியதால் இதற்குப் பரமபதவாசல் என்று பெயர். அசுரர்களுக்குப் பெருமாள் சேவை சாதித்த பிரகாரம் இன்று ரத்ன கவசத்துடன் நமக்குச் சேவை சாதிக்கிறார். பிறகு நம்பெருமாள் ஆயிரக்கால் மண்டபத்திற்கு முன்னாக அமைந்துள்ள கொட்டகைக்கு எழுந்தருளி ஆழ்வாராசாரியர்களுக்கு மரியாதை செய்து ஆயிரக்கால் மண்டபத்தில் உள்ள திருமாமணி மண்டபத்துக்கு எழுந்தருளுகிறார். மண்டபத்தில் திருவாராதனம், அரையர்சேவை தளிகை அமுது செய்தல், விநியோகம், ஸ்தோத்திரபாடகோஷ்டி, மண்டபத்திலிருந்து புறப்பாடாகி வீணை ஏகாந்தத்துடன் உள்ளே எழுந்தருளுகிறார்.

இரண்டாவது உற்சவம் முதல் மணல் வெளியில் பட்டர் அருளிச் செய்த ஸ்ரீரங்க ராஜஸ்தவம் தோத்திரபாட கோஷ்டி, கோயில் அத்யாபகர்களால் நடைபெறும். ஏழாவது உற்சவம் ஆழ்வாருக்கு நாச்சியார் திருக்கோல சாத்துபடி, ''கங்குலும் பகலும்'' திருவாய்மொழிக்காகச் சாத்தப்படுகிறது. அன்று நம்பெருமாள் ஆழ்வாருக்காகக் கைத்தல சேவை சாதிக்கிறார். எட்டாவது உற்சவம் வேடுபறி உற்சவம். நம்பெருமாள் குதிரைவாகனத்தில் எழுந்தருளுவர். திருமங்கையாழ்வாரும் அவருடைய கூட்டத்தார்களும் பெருமாளிடம் வேடுபறி செய்து அகப்பட்டுக் கொள்ளுவார்கள். பிறகு ஆழ்வாருக்கு ''அருளப்பாடு கலியன்'' என்று அருளப்பாடு செய்யப்படும்.

பெருமாள் தம்முடைய கோரா குல்லாய் முதலியவற்றை ஆழ்வாருக்குச் சாதிப்பார். அரையர் 'வாடினேன் வாடி' சேவித்ததும் காவல்காரர்களுக்கு மரியாதையாகி நம்பெருமாள் மண்டபத்துக்கு எழுந்தருள்வார். பத்தாவது உற்சவம் திருவாய் மொழி சாத்துமுறை. நம்பெருமாள் புறப்பாடாகி வேதம் சாற்றுமுறை முடிந்த உடன் பரமபத வாசல் திறந்து, தீர்த்தவாரி கண்டருளித் திருமண மண்டபத்துக்கு எழுந்தருளுவார். விசேஷமான திருமஞ்சனம் திருவாராதனம், தளிகை, திருப்பணியாரங்கள் அமுது செய்தல், அரையர் சேவை, விநியோகம் முடிந்தவுடன், ஆழ்வார் திருவடி தொழுதல், திருவாய்மொழி சாற்று முறையுடன் நடைபெறும். கோஷ்டியிலுள்ள எல்லோருக்கும் தீர்த்தம், சடாரி, திருத்துழாய் விநியோகம் நடைபெற்ற உடன், நம்பெருமாள் புறப்பட்டுக் கொட்டகைக்கு எழுந்தருளி ஆழ்வார் ஆசார்யர்களுக்கு மரியாதைசெய்து அனுப்பி விட்டு உள்ளே எழுந்தருள்வார். அன்று இரவே இயற்பா பிரபந்தம் தொடங்கி மறுநாள் காலையில் இயற்பா பிரபந்தம் சாற்றுமுறை நடைபெறுகிறது.

---

## சான்றோர் வரலாறு

சீலம் மிக்க பெருமக்கள்
சிறந்த நல்ல வரலாறு,
ஏல நாமும் அவர்களைப்போல்
இறைமை வாழ்வெய்துதல் தேற்றும்;
கால மணலிற் பதிந்தவர்காற்
சுவடு, வாழ்வாம் கலம்கவிழ்ப்பச்,
சாலத் தவிக்கும் சகோதரரைத்
தைரி யமேகொண் டுயச் செய்யும்!

—ந. ரா. முருகவேள்.

(1) "Lives of great men all remind us
We can make our lives sublime,
And, departing leave behind us,
Footprints on the sands of time;
Foot prints, that perhaps another,
Sailing o'er lifes solemn main,
A forlorn and shipwreck'd brother,
Seeing, shall take heart again"

—H.W. Longfellow.

## சமயம்

இலகுறு சமயம் என்னும்
எழிலியல் இறைமைச் சொல்லில்,
நிலைபெறு நிதிய வைப்பின்
நிறைவெலாம் நிகழ்த்தற் காமோ?
உலைவில்பொன் வெள்ளி மற்றும்
உலகிலுள் பொருள்கள் எல்லாம்
விலைமதித் திடற்கீ டாகா
வியன்பெரு மாட்சித் தாமே!

—ந. ரா. முருகவேள்.

(2) "Religion what a treasure untold
Resides in that heavenly word;
More precious than silver and gold
Or all that this world can afford".

—William Cowper.

# காஞ்சி காமாட்சியம்மை

கவிஞர் திரு. மனசை ப. கீரன், B.A., B.T.

"உயிர்க்கு உறுதி பயக்கும் புருஷார்த்தங்களான, தர்மம் அர்த்தம் காமம் மோட்சம் என்பவற்றுள், காமத்தை அடுத்துக் கோடியில் உள்ள மோட்சத்தினைப் பக்தர்களுக்கு எளிதாகவும் இனிதாகவும் விரைந்து வழங்குவதால், காமாட்சியம்மை காம கோடி என வழங்கப்படுகிறாள்."

முன்னுரை :

உலக உயிர்களுக்கெல்லாம் அன்னை யாகிய இறைவி, வெவ்வேறு தலங்களில் வெவ்வேறு வகையான பெயரும் வடிவமும் தாங்கி விளங்குகின்றாள். அம் முறையில் கல்வியிற் கரையில்லாதகாஞ்சிமாநகரிலும், ஏனைய பிற நகரங்களிலும் காமாட்சி யம்மை என விளங்கி இறைவி அருள்புரிந்து வருகின்றாள். காமாட்சியம்மையின் கருணை கடலினும் பெரிது. அவள் தன் அடியவர்க்குச் செய்து போதரும் கருணை நலத்திற்கு ஓர் எல்லையே இல்லை. தன் கருணையின் மிகுதியால், காமாட்சி யம்மை தன் அடியவர்களுக்கு அவர்கள் விரும்புவனவற்றையெல்லாம், ஏராளமாக வாரிவாரி வழங்குகின்றாள். அதனால் காமாட்சியம்மைக்குக் காமகோடி எனவும் ஒரு பெயர் வழங்கும்.

காமகோடி :

காஞ்சிப்புராணத்தில், வீராட்டகாசப் படலத்தில், அருள்மிகு காமாட்சியம் மைக்குக் 'காமகோடி' என்னும் சிறப்புப் பெயர் வழங்குதல் குறித்து, அரிய நுண்ணிய பலவகைப் பொருள் விளக்கங்களைச் சிவஞான சுவாமிகள் செய்தருள்கின்றார். அப்பொருள் விளக்கங்கள் வருமாறு :

(1) காமம் என்பது விருப்பம். வழிபடும் அடியவர்கள் விரும்பும் நலங்களையும், செய்யும் தவத்தின் பயன்களையும், கோடி மடங்காகப் பெருக்கி அளிக்கும் சிறப்பினால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் அமைந்தது.

(2) காமம் என்னும் சொல் விருப்பம் எனப் பொருள் தந்து, பின்னர் அனைவராலும் விரும்பப் பெறுகின்ற செல்வத்தையும் குறிக்கும். தன்னை வழிபடும் அடியவர்களுக்குக் கோடிக்கணக்கான செல்வங்களை வழங்குவதால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் ஏற்பட்டது.

(3) காமம் என்னும் சொல், மனைவி மக்கள் பொன் அணி இருக்கை புகழ் முதலிய பலவகை நலங்களையும் குறிக்கும். தன்னை வழிபடும் அடியவர்களுக்கு, இத்தகைய பற்பல நலங்களையும் கோடிக் கணக்கில் பெருகுமாறு செய்து அருள் புரிதலால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப்பெயர் உண்டாயிற்று.

(4) மக்கள் உயிர்க்கு உறுதி பயக்கும் பொருள்கள் நான்கு. அவற்றைப் ''புருஷார்த்தங்கள்'' என்பர். அவையாவன: தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்பன. இவற்றுள் காமத்தை அடுத்துக் கோடியில் உள்ள மோட்சத்தினை, பக்தர்களுக்கெல்லாம் எளிதாகவும் இனிதாகவும் விரைந்து வழங்குவதனால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் வந்தது

(5) ககரம் ஆகிய பிரமனையும், அகரம் ஆகிய திருமாலையும் மகரம் ஆகிய உருத்திரனையும், யுகந்தோறும் கோடி முறை தன் கண்களிலிருந்து படைத்து வெளிப்படுத்துவதால், காமாட்சியம்மைக்குக் காமகோடி எனப் பெயர் வழங்குகின்றது.

(6) கா என்னும் ஓர் எழுத்துச்சொல், கலைமகளையும், மா என்னும் ஓர் எழுத்துச் சொல் திருமகளையும் குறிக்கும். இவ்விருவரால் முறையே விளையும் கல்வியும், செல்வமும் ஆகிய நலங்களையெல்லாம், தனது கோடியால் (கடைக்கண் பார்வையினால்), பக்தர்களுக்கு மிகுதியாக அளித்

தருள்வதனால், காமாட்சியம்மைக்குக் காமகோடி என்ற பெயர் அமைந்தது.

சிவஞான சுவாமிகள் :

இங்ஙனம் கருணையிற் சிறந்த காமாட்சியம்மைக்கு ஏற்பட்ட, காமகோடி என்னும் காரணப் பெயரின் சிறப்பை வியந்து, அதற்கு ஏற்ற இனிய எதுகைத் தொடர்களை அமைத்து, அழகிய துதிச் செய்யுள் ஒன்றைச் மாதவ சிவஞான சுவாமிகள் பாடி மகிழ்கின்றார். காமகோடி என்பது, செய்யுளில் காமக்கோட்டி எனவும் வழங்கும்.

''கருக்காமக் கோட்டிமிர வினையனைத்தும்
ஒருங்கெய்திக் கலகம் செய்யும்
தருக்காமக் கோட்டியெல்லாம் அறஎறிந்
தாம்:
இனிஎன்றும் தகைசால் அன்பு
சுருக்காமக் கோட்டினைச்சே யரைகரம்
கொண்
டார்க்குமுலைச் சுவடு நல்கும்
திருக்காமக் கோட்டியம்மை சேவடிப்போ
தெப்போதும் சிந்திப் பாமால்!''

பாடலின் பொருள்:

''பிறவியைத் தரும் அவாவாகிய திமையை விளைவிக்கின்ற, இருள்மலம் காரணமாக வரும் கொடிய பாவங்கள் எல்லாம், ஒருங்கு வந்து அடைந்து, நம்மிடத்திற் குழப்பம் விளைவிக்கும் செருக்கு உடையனவாகும். அப்பாவக் கூட்டங்களையெல்லாம், யாம் அறவே அழித்து எறிந்துவிட்டோம். அதனால் இனி யாம் எப்போதும் தகுதி நிறைந்த நல்ல அன்பினைச் சுருக்காமல், மிகுதியாகப்பெருக்குவோம். சங்கு மணியினைச் சிவந்த அரையிலும், தலையோட்டினைக் கையிலும் தரித்துள்ள திருவேகம்பநாதருக்குத் தனது முலைத்தழும்பும் வளைத் தழும்பும் ஏற்படும்படி செய்தருளிய, திருக்காமக்கோட்டி என்னும் காமாட்சியம்மையின் திருவடி மலர்களை, யாம் எப்போதும் சிந்தித்து வணங்குவோம்'' என்பது, இந்த அரிய இனிய பாடலின் சிறந்த பொருள் ஆகும்.

''கருக்காமக் கோள், திமிர வினையனைத்
தும்,
ஒருங்கெய்திக் கலகம் செய்யும்
தருக்குஆம்; அக்கோட்டிஎலாம் அறஎறிந்
தாம்;
இனி என்றும் தகைசால் அன்பு
சுருக்காம்; அக்கு ஓட்டிசைச் சேய் அரை
கரம்
கொண்டார்க்கு, முலைச்சுவடு நல்கும்
திருக்காமக்கோட்டியம்மை, சேவடிப்போது
எப்போதும் சிந்திப் பாமால்''

[கரு-பிறவி. காமம்-அவா. கோள்-கொள்ளச்செய்வது. தருக்கு-செருக்கு, அகந்தை. அக்கோட்டி-அந்தக்கூட்டங்கள். எறிந்தாம் - அழித்துஒழித்துவிட்டோம். அற-முழுவதும். சுருக்காம்-சுருக்கமாட்டோம், பெருக்குவோம். அக்கு-சங்குமணி. ஓடு-பிரமகபாலம். சேய்அரை-சிவந்த இடுப்பு. கரம்-கை. சேவடிப்போது-திருவடிமலர்கள்.] என்று இப்பாடலைச் சொற்பிரிவு செய்து, பொருள் கொண்டு மகிழ்தல் வேண்டும். சொற்சுவையும், பொருட்சுவையும் நிறைந்து திகழும் இவ்வினிய பாடலைப் பாடிப்பயின்று, காமாட்சியம்மையின் கருணை நலனைப் பெற்று, நாம் களித்து உய்வோமாக!

**R. RAJU,**
**Dy Commissioner H.Qrs.**
(Retired
HR&CE Administration Dept

## காமாட்சியம்மை துதி

ஊன்பிலிற்றும் மழுவாளி கலவிதனில் ஒண்ணாதென்று ஓர்ந்து, நெஞ்சம்
தான்பிலிற்றும் பாப்பணியை நீப்பவும், கார் வண்டினங்கள் ததைந்து மூசத்
தேன்பிலிற்றும் நறுங்கடுக்கைத் தெரியலைப்பாம்பு எனமருண்டு, அத் தெரியல் நாறும்
கான்பிலிற்றத் தெருண்டணையும் **காமக்கோட்டத்து** உமையைக் கருத்துள் வைப்போம்!

**—மாதவச் சிவஞான சுவாமிகள்**

# கடவுள் மாமுனிவர்

திரு. மு. அருணாசலம்

மாணிக்கவாசகருடைய வரலாறு தமிழில் பல நூல்களில் சொல்லப் பெற்றுள்ளது. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்று அறிஞர் கருதுகின்ற கல்லாடத்துள், மதுரைச் சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடற் சரித்திரப் பகுதிகள் உள்ளன. இவற்றுள் மாணிக்கவாசகர் சரித்திரத்தின் சில பகுதிகளும் உள்ளன. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ அதற்கு முன்னோ வாழ்ந்த செல்விநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடிய பழைய திருவிளையாடல், 64 திருவிளையாடல்களைக் கூறுகிறது. இவற்றுள் ஞானோபதேசம் செய்தது, நரி குதிரையானது, குதிரை நரியானது, மண் சுமந்தது ஆகியவை மாணிக்கவாசகர் சரித்திரம் கூறுவன. இனி 18-ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம் என்பது இன்று மிகவும் பிரசித்தமாக உள்ளது. இதனுள் முற்கூறியவாறே நான்கு படலங்கள் மாணிக்கவாசகருடைய சரித்திரத்தைக் கூறுவன. இவையன்றி, தல புராணங்களாகிய பெருந்துறைப் புராணமும், உத்தரகோசமங்கைப் புராணமும், சுந்தர பாண்டியமும், கடம்பவன புராணமும், மாணிக்க வாசகர் வரலாறு கூறுகின்றன.

இனி, மாணிக்கவாசகருடைய வரலாற்றை மட்டும் விவரித்துக் கூறும் புராணம், திருவாதவூரர் புராணம் என்பது. மூலமும் உரையுமாகப் பல பதிப்புக்கள் வெளியாகியுள்ளன. காப்புடன் 545 செய்யுட்களுடையது. கடவுள் வாழ்த்து, மந்திரிச் சுருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண் சுமந்த சருக்கம், திருவம்பலச் சுருக்கம், புத்தரை வாதில்வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் என்பன, இப்புராணத்தில் அடங்கிய பகுதிகள். இப்புராணம் கடவுள் மாமுனிவர் என்பவர் பாடியது. இவரைப் பற்றி எந்த வரலாறும் தெரிந்திலது. எவ்விதத் தனிப் பாடலும் இவரைப் பற்றிக் கூறவில்லை. இவர் காலத்தை அறிவதற்கு எவ்வாதாரமும் இல்லை.

கடவுள் மாமுனிவர் காலம், பிற புராண காலம் அனைத்துக்கும் முன் என்று சிலர் சொல்வர். அது பொருந்தாது என்பது பின்னே விளங்கும். ஆனால் இவர் பாடிய புராணம் மாணிக்கவாசகர் சரித்திரத்தைத் தனியே விரித்துக் கூறுவது. சுந்தரமூர்த்தி தம் திருத்தொண்டத் தொகையுள் குறிப்பிட்ட சிவனடியார்களின் வரலாறுகளை மட்டும் விளக்குவதற்காகச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசகரைக்குறிப்பிடாமையால், சேக்கிழாரும், தம் நூலுள் மாணிக்கவாசகருடைய வரலாற்றைப் பாடினார் இலர். எனவே, பின்வந்த பெரியாராகிய கடவுள் மாமுனிவர் மாணிக்கவாசகருடையய வரலாற்றை மட்டும்தனியாகப் பாடியுள்ளார் என நாம் கருதுவோம்.

சிவயோகி ஒருவர் பொதிகைமலை செல்ல வழிக்கொண்டபோது, காவேரியின் கரையை அடைந்தார் என்று கூறுமிடத்து, ''பரமேசுவரனுக்குக் கடல் ஆலகால விடம் அளித்தமையால், காவிரியாறு கடல் வயிற்றை நிறைக்காமல், தன் நீரினால் நாட்டில் வளம் நிறைத்தது'' என்று காவேரியைச் சிறப்பித்துச் சேக்கிழார் திருமூலர் புராணத்தில் பாடுகிறார் :

தடநிலைமா ளிகைப்புலியூர்தன்னிலுறைந்
திறைஞ்சிப்போய்
அடல்விடையின் மேல்வருவார் அமுதுசெய
அஞ்சாதே
விடம் அளித்த தெனக்கருதி மேதினிக்கு
வளம்நிறைத்துக்
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரை
அணைந்தார்

இக்கருத்தைக் கடவுள் மாமுனிவர் மந்திரிச் சருக்கம் முதல் பாட்டில் அப்படியே வைகைக்கு ஏற்றிப் பாடியிருப்பது இங்கு அறியத்தக்கது!

முக்கணொடு நான்குபுய ஐந்துமுக முன்
னோன்
சொக்கனருள் நன்மைபெறு தொன்மை
திகழ் நன்னாடு
அக்கடு விடத்தை அரனுக்கருள்வ தென்றே
மைக்கடலில் வைகலொழி வைகைவள நாடு

வைகைக்கு ஏற்றிய இக்கருத்து, பின்னர் ஒரு தனிப் பாடலிலும் இடம் பெற்றுள்ளது.

நாரியிடப் பாகருக்கு நஞ்சளித்த பாவி
என்று
வாரியிடம் போகாத வையைதான்-தேரின்
இடத்தும் வலத்தும் இருபுறமும் பாய்ந்து
நடத்துமாம் தண்பாண்டி நாடு

நம்முனிவர், நூல்வரலாறு கூறும்பொழுது, ''அகத்தியர் கூறிய சிவபிரானது 64 திருவிளையாடல்களுள் சில கூறுகிறேன்'' என்கிறார்.

தென்பொதிய மாமுனி சிறக்க அருள் எண்
ணெண்
இன்பவிளை யாடலதெ னுங்கடலுள்
நாயேன்
மின்பயிலும் மாமதுரை மேவுதமிழ்மாறன்
துன்பமற நல்குகதை சொல்லலுறு
கின்றேன்

இதனால் 64 திருவிளையாடல் என்ற வழக்கு ஏற்பட்ட பின், இவர் புராணம் பாடினார் என்பது தெளிவு. திருவிளையாடல்களை முதலில் விரித்துக் கூறும் நூல், நம்பி பாடிய பழைய திருவிளையாடல். எனவே கடவுள் மாமுனிவர் புராணம், பழைய திருவிளையாடலுக்குப் பிற்பட்டது என்பது தெளிவு.

திருவாதவூரர் புராணம் எக்காலத்தில் தோன்றியதாயினும், அது தோன்றிய நாள்தொடங்கிச் சைவப்பெருமக்களாலும் தமிழ்மக்களாலும் சிறப்பாக விரும்பிப் பயிலப் பெற்ற நூலாகும். யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் தில்லை நடராசப் பெருமானிடத்தும், மாணிக்கவாசகப் பெருமானிடத்தும் ஈடுபாடு மிக்கவர்கள். ஆதலால் இந்நூலிடத்தும், மிகவும் ஈடுபட்டுள்ளார்கள். இப்புராணத்திற்குச் சிவபுராணம் என்றும் அங்குப் பெயர் வழங்கும். இது சிறந்த செம்பாகமான நடை உடையதாய், பக்திச் சுவையொன்றே நிரம்பியதாய், சிருங்கார வருணனைகள் இல்லாததாய், சிவச் சின்னங்களின் பெருமைகளையும், திருவைந்தெழுத்தின் மகிமையையும், சித்தியார் போன்ற சைவ சித்தாந்த சாத்திரங்களில் காணும் நுண்பொருள்களையும் ஆங்காங்கே விரிப்பதோடு, அவற்றின் சொற்களை எடுத்தாளுவதாயும் அமைந்துள்ளது. சிவபக்தி யூட்டும் சிறந்த நூல்களில் இதுவும் ஒன்று.

ஆங்கிலத்தில் தமிழ் இலக்கியவரலாறு எழுதி 1929ல் வெளியிட்ட முன்னீர்ப் பள்ளம் பூரணலிங்கம் பிள்ளை, கடவுள் மாமுனிவர் கச்சியப்ப முனிவருக்குச் சமகாலத்தவர் என்றும், அவர் தூண்டுதலால் திருவாதவூரர்புராணம் பாடினார் என்றும் எழுதினார். இவர் கூற்றுக்கு ஆதாரம் இல்லை. இவர் ஆங்கில நூல் எழுதிய காலத்து, தமிழ் இலக்கிய சரித்திரமே விளக்கம் பெறாமலிருந்தது. தாம் அறிந்தவற்றையும், கேட்டவற்றையும், ஆராய்ந்தவற்றையும், பரம்பரைக் கதைகளையும் ஒருங்கு சேர்த்து அவர் தம் வரலாறுஎழுதினார். அவருடைய அக்கால முயற்சி பெரிதும் பாராட்டுதற்குரியது. ஆனால் அவர் புத்தகத்துள் பிழைபட்ட செய்திகள் மிகப் பலவுள்ளன. இதுவுமொரு பிழைபட்ட செய்தி.

அவர் கூற்றை ஆதாரமாக வைத்துத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய கா. சுப்பிரமணிய பிள்ளை ''கடவுள்மாமுனிவர் சிவஞான முனிவரது முதன் மாணாக்கராகிய கச்சியப்பரின் நண்பர். தமது உடலிற்கண்ட பிணி நீங்கும்வண்ணம்கச்சியப்பரால் திருவாதவூரடிகள் புராணம் பாட ஊக்குவிக்கப்பட்டவர். இவர் தேசிகரோ தம்பிரானோ தெரியவில்லை'' என்று எழுதுகிறார். இக்கூற்று பொருந்துவதன்று. இதற்கு ஆதாரம் ''வாய் மொழியாக வழங்கும் வரலாறு'' என்று இவர் கூறுவதை அறிந்தார் அரியர். வேறு ஆதாரம் இருப்பதாகவும் தெரியவில்லை. இக்கதை ஆராய்ச்சிக்குப் பொருந்தாது.

இனி, கடவுள் மாமுனிவர் தம்முடைய புராணத்தில் சித்தாந்த சாத்திரக் கருத்துக்களையும் தொடர்களையும் அப்படி அப்படியே எடுத்துப் பெய்திருக்கிறார். அவற்றுள் சிலவற்றை இங்கு நாம் குறிப்பிடலாம். மாணிக்க வாசகர் நிலையை ஆசிரியர்,

''உண்மைதரும் உணர்வுஎன்னும் நாலாஞ்
சத்திநி பாதம்எய்தி
பரமஅஞ் செழுத்தும் ஒன்றாம் பராபரம்
உணர்த்தும்ஞான
குருபரன் திருத்தாள் சென்று கூடுதல்
வேண்டும்''

என்று உரைக்கிறார். (பாட்டு30). 'நாலாஞ் சத்திநிபாதம் எய்தும் தன்மையர் ஆதலாலே'' என்று மற்றோர் இடத்தில் (பாட்டு 85) கூறுகிறார். சத்திநிபாதம் நாலுவகை என்பது தமிழில் சித்தாந்த சாத்திரங்கள் தோற்றுவித்த கருத்து. ''நாடிய சத்திநிபாதம் நாலுபாதம்'' என்பது சிவப்பிரகாசம் 49-ஆம் செய்யுள்.

முன்னைவினைப் பெருங்காடு மூடுறஐம்
புலவேடர்
துன்னியலைத் திடர்செய்யுந் துன்பவழிச்
செல்லாமல்

என்பது புராணம் 79-ஆம் செய்யுள். இது பின்வரும் சிவஞான சித்தியார் பாடலை (253) எடுத்தமைத்தது என்பது வெளிப்படை.

துன்னிய ஐம்புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையும் அறியாது துயருறும்
தொல்லுயிரை

சித்தியார் 265ஆம் பாடல், மிகச் சிறந்த கருத்தொன்றைத் தெரிவிக்கிறது.

''இதுவே சமயம், இதுவே பொருள், இதுவே நூல் என்று கூறும் பிணக்குடையவை சமயங்களல்ல, இப்பிணக்கின்றி நின்றதே சமயம்'' என்று அது கூறுகிறது. இக்கருத்தைப் புராணமானது ''இது நூல்

மற்றலது நூல் இல்லை எனும், அறுசமய வித நூல்'' என்று தழுவியுரைக்கிறது.

சாத்திரக் கருத்தாகிய மந்திரங்கள், பதங்கள், வன்னங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் என்னும் ஆறு அத்துவாக்களும் 103ஆம் பாடலில் கூறப்பட்டுள்ளன. மாணிக்கவாசகர் ஊமைப் பெண்ணைப் பேசவைத்துப் புத்தரை வென்றார் என்ற செய்தி கூறுமிடத்து, புராணத்தில் காணும் ''ஆவது போன்றக் கேடாய் அழிவது முத்தியென்றான்'' (464) என்ற வரியானது, சித்தியார் பரபக்கத்தில் 94ஆம் பாடலில் வரும் ''ஆங்கவை பொன்றக் கேடாய் அழிவது முத்தியின்பம்'' என்ற வரியை எடுத்து அமைத்தது. இப்படியே புத்தரை வாதில்வென்ற செய்தி முழுவதும் சித்தியார் கருத்தின் தழுவலேயாகும். ''அஞ்செழுத்தே-ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக் காப்பாலாம் மோனந்தமா முத்தியும்'' என்ற சித்தாந்த சாத்திர உண்மை விளக்கக் கருத்து 'தத்துவ முடிவிலாடும் தாண்டவம்' என்று (414) புராணத்தில் பயில்கிறது.

மேலும், மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் குருந்தமரத்தின் கீழ்ப் பரம்பொருளின் குருவடிவைக் கண்ட பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சியைப் புராணகாரர் கூறுவது இங்குக் கருததத்தக்கது. மந்திரியாகச் சென்ற மாணிக்கவாசகர் குருந்த மரத்தின் கீழ்க்கண்ட குருமூர்த்தியின் ''செங்கைமீது பொருத்தமுறு புத்தகம் ஏதுஐயா''என்ன, அவர்''பொய்ம்மையிலாச் சிவஞான போதம்'' என்றார். அதன் மேல் இவர் சிவம், ஞானம், போதம் என்பவற்றை விளக்கியுரைக்குமாறு கேட்க, குருமூர்த்தி விரித்து விளக்குகிறார்.

''என்றலுமே சிவமேது ஞானமேது இங்கு
இலங்கியிடும் போதமேது இயம்பு வீரேல்
அன்றுவட நிழலில்வந் திருந்தார் நீரே
அடியேனும் உமக்கடிமை யாவேன் என்ன
நின்றசிவம் ஒன்றதனைத் தேர்தல் ஞானம்
நிகழ்போதம் தேர்ந்ததனைத் தெளிதலாம் என்று
ஒன்றியநற் பொருள்வினவி நிற்பார் சிந்தை
உருகும்வகை உரைசெய்தார் உவமையில்லார்''

இச்செய்தி சிவஞான போதத்தையே பெயர்சுட்டி உரைக்கிறது. மேற்கூறியவற்றால் திருவாதவூரர் புராணம் செய்த கடவுள்மாமுனிவர் சிவஞானபோதம், சித்தியார், உண்மை விளக்கம், சிவப்பிரகாசம் என்ற சாத்திரங்கட்குப் பின் வாழ்ந்தவர் என்று முடிவு செய்தல் பொருந்துவதாகும். சிவப்பிரகாசம் செய்த உமாபதியார் காலம் கி. பி. 1300-1325. இக்காலம் கடவுள்மாமுனிவர் காலத்துக்கு மேல் எல்லையாக அமைகிறது.

இனி, குமரகுருபரர் பாடலில் உள்ள ஒரு குறிப்பு இங்குக் கருதத்தக்கது. அவர் பாடிய சிதம்பரமும்மணிக்கோவை 23-ஆம் பாடல், மாணிக்கவாசகர் தாம் பாடிய திருக்கோவையாருக்குப் (காமஞ்சான்ற ஞானப்பனுவல்) பொருள் அம்பலவாணரே என்று சுட்டினார் எனக் கூறுகிறது.

''கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்கு
இருநிலம் அகழ்ந்தும் எண்ணில்இல் காலம்
ஒருவன் காணாது ஒளித்திருந் தோயை
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமஞ் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனச் சுட்டிய ஒருபெருஞ்செல்வ''

''மதம் கலங்கி ஒழுகுகின்ற வெள்ளத்தை உடைய, களிப்புமிக்க நல்ல யானையையும், சிங்கம்போன்ற வலிமையையும், பெருமைமிக்க வேலையும் உடைய பாண்டியனுக்குத், திருமால் எண்ணில்லாத பல காலம் வலிமிக்க நிலத்தைத் தோண்டியும் காணமுடியாமல் ஒளித்திருந்த உன்னை, பிரமதேவனுடைய நாவாகிய அழகிய பந்தியிலுள்ள தாவுகின்ற கதியை உடைய வேதக் குதிரைமீது காட்டிக் கொடுத்த (அதாவது, வேதமாகிய பரியின் மீது குதிரைச் சேவகனாக எழுந்தருளி வரச் செய்த) பைந்தமிழ் பாடிய செந்நாப் புலவனாகிய மாணிக்கவாசகன் செய்த அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் தரவல்ல, ஐந்திணைக்கோவையாகிய காமச் சுவைமிக்க திருக்கோவையாருக்குப் பொருள் இவனே என்று சுட்டப்பட்ட ஒப்பற்ற பெருஞ் செல்வனே'' என்பது இதன் பொருள்.

தில்லையம்பலவன் ஒரு வேதியர் வடிவம் கொண்டு, மாணிக்கவாசகர் முன்னே தோன்றி, 'ஐயா! யாம் பாண்டி நாட்டில் இருந்து இங்கு வந்தோம். உம்முடைய பெருமையை அந்நாட்டினர் அறிந்து மகிழ்ந்தனர். சிவபிரானை அன்பினாலே நீர் பாடிய பாடலைக் கற்றுப் பாட எண்ணி இங்கு வந்தோம். அப்பாடல்களை நீர் இப்போது சொல்லும். நாம் ஏட்டில் எழுதிக் கொள்கிறோம் என்றான். அவ்வாறே மாணிக்கவாசகர் சொன்ன பின்னர் வந்தவேதியர்,'தையல் பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டும்' என்றார். மாணிக்க வாசகர் அங்ஙனமே பாடினார். வேதியரும், திருவாசகமும் அகப்பொருட் கோவை நானூறும் எழுதி, முடித்த இடத்து ''உயர்வாதவூரன் மொழி தரித்து எழுதும் அம்பலவன் எழுத்து'' என்று கையெழுத்திட்டு மறைந்தார். பின்னர் அன்புடையார், 'தில்லையில் எம்பெருமானைச் செப்பிய இத்தமிழ்மாலையின் நல்ல அரும்பொருள் கூற வேண்டும்' என்று

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

நவின்றார்கள். மாணிக்கவாசகர் அவர்களோடு பொன்னம்பலத்திற்குச் சென்று ''இத்தமிழ் மாலைப் பொருள் இவரே'' என்று உரைசெய்து, அவர்கள் காண மன்றினுள் சென்று மறைந்தார். இது வாதவூர் அடிகள் முத்திபெற்ற வரலாறு. இங்கு தமிழ் மாலையாகிய திருவாசகம், திருக்கோவை என்பவற்றின் பொருள் அம்பலவாணர் என்ற கருத்து கருதுதற்குரியது. பொதுவாகத் திருவாசகத்தின் பொருள் நடராஜப் பெருமானே என்றுதான் வரலாறு வழங்குகின்றது.

ஆனால் குமரகுருபரர் தம்பாட்டில் குறிப்பிட்ட ''காமம் சான்ற ஞானப்பனுவல்'' என்பது திருவாசகமன்று. திருக்கோவையாரே. இதன் பொருள் அம்பலவாணர் என்று மாணிக்கவாசகர் சுட்டியதாகக் குமரகுருபரர் கூறுகிறார். ஆகவே இவர் திருவாதவூரர் புராண இறுதிப் பகுதியைத் தம் கூற்றுக்கு ஆதாரமாகக் கொண்டார் என்று சொல்வது பொருந்தும்.

பழைய திருவிளையாடற் புராணக் கதைப் போக்கே வேறுவகை. மண் சுமந்த திருவிளையாடல் நிகழ்ந்த பிறகு, வாதவூரர் ஆலயத்துள் சென்று ''என்னை ஆளுதற்கு நாதா! இனப் பரியிட்டதன்றி, மன்னிய முடிவருந்த மண் சுமந்த கடலே, அந்தோ, வன்னமாமேனி நோவ அடியும் உண்டனையே!'' என்று பாடினார். 'சித்திரக்கோவை' பாடித் தில்லையம்பலத்து வா என்று அத்தன் வானத்துரைத்தான். ஆனால் இக்கதைக்கு நாட்டில் வழக்காறு இல்லை. எனவே குமரகுருபரர் கடவுள் மாமுனிவர் கூறும் வரலாற்று முறையையே கொண்டிருக்கிறார். ஆதலால், கடவுள் மாமுனிவர் குமரகுருபரருக்குக் காலத்தால் முந்தியவர் என்று கொள்வதே முறை. குமரகுருபரர் காலம் 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி.

இதுகாறும் காட்டியவற்றால் கடவுள் மாமுனிவர் 1325-க்குப் பிறகும் 1650-க்கு முன்னும் வாழ்ந்தவர் என்பது தெளிவாகிறது. இக்கால எல்லைக்குள் அவர் 15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்பதற்குச் சில ஆதாரங்கள் கிடைக்கின்றன.

முதலாவது, அக்காலத்துப் புலமை நிலை; எண்ணற்ற ஓசையின் பேதங்கள் கொண்ட விசித்திரமான சந்தங்களால் தமது தெய்வத் திருப்புகழைப் பாடி, அன்று முதல் தமிழ்நாட்டில் சொற்சித்திரமும் தாளமும் கொண்ட பக்திப் பாசுரவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுமாறு செய்த அருணகிரிநாதர், இக்காலத்தே வாழ்ந்தார். அவர் பாடிய நூல்களில் ''கந்தரலங்காரம்'' ஒன்றே சந்தமும் சித்திரமும் இல்லாதது. மற்றவையாவும் சந்தக் கவிகள் அல்லது சித்திரக் கவிகள். வைணவ மரபில் பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் இக்காலத்தே வாழ்ந்தார். அவர் நூல் முழுமையும் சந்தத்தினால் புகழ் பெற்றது. திருவாதவூரர் புராணமும் சந்தத்தினால் சிறப்புடையது. அவர் பாடியுள்ள அளவு சந்தப் பாடல்களைப் புராணங்களில் அமைத்து யாரும் பாடியதில்லை. அவர் பாடியமுதல் பாட்டே சந்தத்துடன் தொடங்குகிறது. கடவுள் வாழ்த்து முழுமையும் சந்தப் பாடல். அவர் பாடும் சந்தங்களும் எளியனவாய்ச் செம்பாகமாய்ச் சொல்லையோ சீரையோ சிதைக்காதனவாய் அமைந்துள்ளன. ஆதலால் சிறந்த பக்திமானான அவர், இந்தச் சந்தக் கவிஞர் சூழலில் வாழ்ந்தார் என்று கூறுவது பொருத்தமாகும். அவரும் பக்திக் காவியம் பாடினார். சந்தக் காவியம் பாடினார். எனவே அருணகிரிநாதரோடு தொடர்புடையவர் என்று கூறுவதும் பிழையாகாது.

தமிழிலக்கிய சரித்திரத்தை ஆராய்ந்தால் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு வகையான நூற்போக்கு மேலோங்கி இருந்தமை தெளிவாகும். இலக்கண நூல்கள் அதிகம் செய்யப் பெற்றது ஒரு காலம். உரைகள் செய்யப் பெற்றது மற்றொரு காலம். யமகந்திரிபுகள் அதிகம் இடம் பெற்றது 17-18-ஆம் நூற்றாண்டுகள். இவைபோல, சந்தப் பாடல்கள் இடம்பெற்றது 15-ஆம் நூற்றாண்டு. ஆதலால் சந்தப் பாடல்கள் அதிகம் கொண்ட திருவாதவூரர் புராணம் பாடிய கடவுள்மாமுனிவர், 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று கருதுவது பிறவகையால் செய்யும் முடிவுக்கு ஆதரவாகவுள்ளது.

இரண்டாவதாக, திருவாதவூரர் புராணத்தில் பயிலும் சில சொற்கள், தமிழ் நாட்டில் 15-ஆம் நூற்றாண்டில் முகம்மதியர் ஆதிக்கம் ஏற்பட்டு, அது காரணமாக அவர்களுக்குரிய பல சொற்கள் தமிழ் மொழியிலும் ஏறி இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளன. சபாஷ், சலாம், ராவுத்தன் முதலான சொற்களை அருணகிரியாரிடம் காணலாம். தொப்பி என்ற சொல்லை நம் முனிவர் எடுத்தாளுகிறார். சோமசுந்தரப் பெருமான் குதிரைச் சேவகனாக வந்த போது தொப்பி அணிந்து வந்தார் என்கிறார்.

''ஒப்பரிய சட்டையும் உடுத்திலகு பட்டும்
தொப்பியும் முகத்திடை துலக்கமுளராகிச்
செப்பரு நலங்குலவு செண்டொருகை
கொண்டே
இப்படியில் இப்படிவம் யாவருளர் என்ன''

இவருக்கு முந்தி தொப்பி என்ற சொல் இலக்கிய ஆட்சி பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

மோகரித்தல் என்பது இது போன்ற மற்றொரு சொல். மோகரம் ஆர்வாரம்; மோகரித்தல் ஆரவாரித்தல்; இச்சொல்லை நம் புராணகாரர் உபயோகிக்கிறார். மண் சுமந்த கூலியாளாக வந்த பெருமான்மீது பட்ட பிரம்படி தம்மீதும் பட்டது என்று உலகத்தோர் செய்த ஆரவாரம் கடல் முழக்கம் போன்றது என்று கூறுகிறார்.

"எந்தஉல கங்களிலும் இருந்து ளோர்கள்
எம்முடலில் அடியுறைத்த தென்று கூற
முந்திஎழும் பன்மொழிகள் உகாந்தஎல்லை
மோகரிக்கும் எழுகடலின் முழக்கம்
போன்ற''

மோகரித்தல் என்ற சொல்லின் ஆட்சி, நாம் கருதுகின்ற காலப் பகுதியில் தோன்றியிருக்கிறது. அதுவும் குறிப்பிட்ட இப் புலவர் சூழலில் தோன்றியிருக்கிறது என்றால் பிழையாகாது.

இனி மூன்றாவதாக முற்கூறிய சாத்திரங்களில் கண்ட சொல் ஆட்சி, உமாபதி சிவத்தினின்று ஒரு புதிய சமயப்பிரவாகம், இருநூறு ஆண்டுகள் வரை பெருகியுள்ளது, 14-15-ஆம் நூற்றாண்டுகளில். பின்னர் இது மீண்டும் தலையெடுப்பது 17-ஆம் நூற்றாண்டில்தான். இப்பிரவாகம் எழுந்தபோது உமாபதியாரின் சீடர் வழிகளில் பல்வேறு பிரிவுகள் எழுந்து அவற்றுள் எண்ணற்ற துறவிகள் தோன்றினார்கள். அனைவரும் துறவுநிலை பூண்டு காவி உடை அணிந்தமையால் தம்பிரான் என்றும், முனிவர் என்றும் பெயர் பெற்றனர். அவர்களுள் நம் முனிவரும் ஒருவர். இவர் சமய சாத்திரங்களின் தொடர்களையும் கருத்துக்களையும் தம் நூலில் நிரம்பப் பெய்திருப்பதானது, இவர் சந்தான ஆசாரியருக்குப் பின், நெருங்கிய காலத்திலேயே, வாழ்ந்திருந்தார் என்று கருத இடங் கொடுக்கின்றது. எனவே இவர் காலம் 15-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதி என முற் கூறியது இதனால் உறுதி பெறுகிறது.

சமயத் துறையில் சைவ சித்தாந்தம் தனிப்பெரும் பிரிவாக உருவெடுத்து மூல நூல்கள் தோன்றி, கிளர்ச்சியும் நூல் ஆக்கமும் உரைவிளக்கமும் ஆசாரிய பரம்பரைகளும் ஏற்பட்ட காலம், 13-16ஆம் நூற்றாண்டுகள். இப்பகுதிக்குரியவர் நம் முனிவர் என்று கொள்வது எல்லாவிதத்திலும் பொருத்தமுடையதே.

இதுகாறும் கூறியவாற்றால், திருவாதவூரர் புராணம் செய்த கடவுள்மா முனிவர் சந்தான ஆசாரியர் பரம்பரையில் வந்த முனிவருள் ஒருவர் என்பதும், இவர்15-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் புகழ்பெற்றிருந்த அருணகிரிநாதர் முதலிய புலவரோடு சமகாலத்தில் வாழ்ந்தார் என்பதும் தெளிவாகும்.

கடவுள் மாமுனிவர் வரலாறு குறித்து யாதும் தெளிவாகத் தெரியவில்லை. மேலே விளக்கியவாறு, இவர் சந்தானாசாரியரை அடுத்து அதே பரம்பரையில் வந்த ஒரு துறவியாதல் வேண்டும். முனிவர் என்ற பெயர் இதை உணர்த்துகிறது. திருவாதவூரர் புராணத்தை அவர் அகத்துறை வருணனை எதுவும் பொருந்தாமல் பாடியிருத்தல், அவர் துறவி என்பதனை வலியுறுத்தி வாதவூரரிடத்து அவருக்குள்ள மெய்யன்பையும் புலப்படுத்துகிறது. சைவ மலர்ச்சி புதிய உயிரோடு உலவிய காலமாகிய 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், நாயன்மாருக்கும் சேக்கிழாருக்கும் புராணம் ஏற்பட்டிருக்க, மாணிக்கவாசகருக்குப் புராணமில்லாத குறையை நீக்கவும், இவருடைய வரலாற்றைச் சைவ அன்பர்கள் நன்குணரவும் இவ்வரலாறு பாடினாரென நாம் கருதலாம். சாத்திரக் கருத்துக்களின் கருவூலமாய், திருவாசகத்தின் பக்திப் பிரவாகத்துக்கு ஏற்ற பக்திச்சுவை நிரம்பித் ததும்புவதாய், இவர் நூல் பாடியிருக்கிறார். இதுவும் இவர் சந்தானாசாரியர் பரம்பரையில் வந்த ஒரு பக்திமான் என்ற கருத்துக்கு அரண் செய்கிறது. மாமுனிவர் என்பது இவர் பெருமையை விளக்கப் பிற்காலத்தவர் கொடுத்த அடைகள்போலும். இவரது இயற்பெயர்கூடப் புலப்படவில்லை; கடவுள் என்பது இயற்பெயராக வியலாது. இவரைக் குறித்து வேறு எவ் விவரமும் அறிய இயலவில்லை.

---

## நிர்வாக அதிகாரி நியமனம்.

1959ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம் 22, இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ், கோயில்களின் நல்ல சிறந்த நிர்வாகம் குறித்து, திருச்சி மாவட்டம், வட்டம், அந்தநல்லூர் அருள்மிகு கோபாலகிருஷ்ணப் பெருமாள் கோயிலை, மேற்படியூர் அருள்மிகு வடதீர்த்தநாதசுவாமி கோயிலுடன் இணைத்து, இவற்றிற்கு ஒரு நிர்வாக அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.